වාර්ෂික වාර්තාව
ஆண்டறிக்கை
ANNUAL REPORT 2017

ශ්‍රී ලංකා ගුවන්විදුලි සංස්ථාව
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
Sri Lanka Broadcasting Corporation

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வருடாந்த அறிக்கை
மற்றும் கணக்குக் கூற்று
2017

2017 ஜனவரி 01 தொடக்கம் 2017 டிசெம்பர் 31 வரை

கௌரவ நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
கொழும்பு.

கௌரவ அமைச்சர் அவர்களே,

1971 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14 (1) பந்தியின் பிரகாரம் 2017 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையை பின்வரும் ஆவணங்களுடன் சமர்ப்பிக்கிறேன்.

1. 2017 ஜனவரி 01 ஆந் திகதி தொடக்கம் 2017 டிசம்பர் வரையான ஆண்டில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நிறைவேற்றிய பணிகள் பற்றிய நிர்வாகஅறிக்கை
2. 2017 ஜனவரி 01 ஆந் திகதி தொடக்கம் 2017 டிசம்பர் வரையான கணக்கீட்டு ஆண்டுக்கான கணக்குகள் சம்பந்தமான அறிக்கை
3. 2017 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இறுதிக் கணக்குகள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை
4. 2017 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர்தலைமைஅதிபதி அறிக்கைக்காக கூட்டுத்தாபனம் முன்வைத்த கருத்துரை.

தங்கள் - உண்மையுள்ள

சித்தி எம்.பாறூக்
தலைவர்
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்,
கொழும்பு 07.

உள்ளடக்கம்

		பக்க இலக்கம்
1.	நிர்வாக அறிக்கை	01 - 11
2.	வருடாந்த கணக்குக் கூற்று	13 - 37
3.	நிதிக்கூற்றுகள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை	39 - 73
4.	2017 கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைக்கான கூட்டுத்தாபனத்தின் கருத்துரை	75 - 85

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

நோக்கு

இலங்கையின் முதன்மை வானொலி தொடர்பாடலாளராதல்.

பணி

நேயர்களின் வாழ்வில் பங்கேற்கும் பொருளாதார, சமூக, கலாசார, ஒழுக்க, கல்வி மற்றும் பொழுதுபோக்கு போன்ற பல்வேறு துறைகளை அடிப்படையாகக்கொண்டு அவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதன் மூலம் அவர்களின் வாழ்வை ஒளிமயமாக்குவதற்காக அறிவு, மனப்பாங்கு மற்றும் திறன்கள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக ஒலிபரப்பு ஊடகத்துக்கு வழிகாட்டுதல்.

நோக்கங்கள்

1. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் ஆகக்கூடிய நேயர்களைக்கொண்ட ஒலிபரப்பு அலைவரிசைகளை பராமரிக்கின்ற நிறுவனமாக செயற்படல்

2. பொறுப்புடன் சமநிலைவாய்ந்த தகவல்களை துரிதமாக வழங்குகின்ற இலங்கையின் ஊடகத்துறையில் முதல்வராக செயலாற்றல்.

3. உள்நாட்டு கலாசார முன்னேற்றத்திற்காக உயர்தரத்திலானவையும் ஆக்கபூர்வமானவையுமான நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்குதல்.

4. அறிவு, மனப்பாங்கு, திறன்கள் ஆகியவை நிறைந்த சுய ஊக்கமுள்ள ஊழியர் குழாத்தினை உருவாக்கத் தேவையான பயிற்சியளித்தல்.

5. தயாரிப்பு மற்றும் ஒலிபரப்பு தொழில்நுட்பத்தை தகுந்தவாறு இற்றைப்படுத்தி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நேயர்களுக்கு தெளிவான ஒலிபரப்பு சேவையை வழங்குதல்

6. ஒழுக்கநெறிக் கோவைக்கிணங்க அர்த்தபுஷ்டியான ஒலிபரப்பு ஊடக கலாசாரத்தை உருவாக்குவதற்காக முன்னோடி நிறுவனமொன்றாக செயற்படுதல்

7. தேசிய ஒலிபரப்பு வலையமைப்பு என்றவகையில் அரசாங்கக் கொள்கைகளையும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும் செயற்படுத்தல் தொடர்பாக மக்களை விழிப்படையச் செய்வதற்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்குதல்

8. சிறந்த நிதி நிர்வாகத்தையும் மனிதவள முகாமைத்துவத்தையும் பேணுதல்.

9. போட்டிகரச் சந்தையை உபாயத்திட்ட நடவடிக்கையின் மூலமாக வெற்றிகொள்ளல்.

நீர்வாக அறிக்கை - 2017

நிர்வாக அறிக்கை - 2017

அறிமுகம்

1966 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் 1967 ஜனவரி மாதம் 05 ஆந் திகதி தொடக்கம் செயற்படும் விதத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

2017 ஜனவரி 01 ஆந் திகதி தொடக்கம் 2017 டிசம்பர் 31 ஆந் திகதி வரையான 12 மாத காலப்பகுதியை இவ்வறிக்கை உள்ளடக்குகின்றது.

மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியினுள் கீழே காட்டப்படுகின்ற உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்சபையில் சேவையாற்றினர்.

2018 ஜனவரி மாதத்தில் இருந்து

சட்டத்தரணி நந்த முருத்தெட்டுவேகம	-	தலைவர் / கூட்டுத்தாபன சபை அங்கத்தவர்
திருமதி எஸ். ஏ. ஸீ. குலதிலக	-	திறைசேரியின் பிரதிநிதி
கலாநிதி திருமதி அருந்ததி சிறீரங்கநாதன்	-	கூட்டுத்தாபன சபை அங்கத்தவர்
திரு. கித்சிறி சமரசிங்க	-	கூட்டுத்தாபன சபை அங்கத்தவர்
திரு. டப்ளியு. ஜயசிரி	-	திறைசேரியின் பிரதிநிதி
விசாரத திருமதி தீபிகா பிரியதர்சினி	-	கூட்டுத்தாபன சபை அங்கத்தவர்

2018 ஜூலை மாதத்தில் இருந்து

சட்டத்தரணி சுதர்சன விக்ரமசிங்க குணவர்தன	-	தலைவர் / கூட்டுத்தாபன சபை அங்கத்தவர்
திரு. தனுஸ்க ராமநாயக்க	-	கூட்டுத்தாபன சபை அங்கத்தவர் / பதில்.தலை.
திரு. எம். ஜே. ஆர். டேவிட்	-	கூட்டுத்தாபன சபை அங்கத்தவர்
திரு. சித்தி. எம். பாரூக்	-	கூட்டுத்தாபன சபை அங்கத்தவர்
திரு. டப்ளியு. ஜயசிரி	-	கூட்டுத்தாபன சபை அங்கத்தவர்

2018 டிசம்பர் மாதத்தில் இருந்து

திரு. சித்தி.எம்.பாரூக்	-	தலைவர் / கூட்டுத்தாபன சபை அங்கத்தவர்
திரு. தனுஸ்க ராமநாயக்க	-	கூட்டுத்தாபன சபை அங்கத்தவர் / பதில்.தலை.
சட்டத்தரணி சுதர்சன விக்ரமசிங்க குணவர்தன	-	கூட்டுத்தாபன சபை அங்கத்தவர்
திரு. ஏம. ஜே. ஆர். டேவிட்	-	கூட்டுத்தாபன சபை அங்கத்தவர்
திரு. டப்ளியு. ஜயசிரி	-	கூட்டுத்தாபன சபை அங்கத்தவர்
திரு. பீ. கே. ஆர். பாலசூரிய	-	திறைசேரியின் பிரதிநிதி

நிர்வாக அறிக்கை

இலத்திரனியல் ஊடகத் துறையின் முன்னோடி அரச ஊடக நிறுவனமான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் 2017 ஆம் ஆண்டில் 6 தேசிய அலைவரிசைகள், 6 பிரதேச சேவைகள் மற்றும் ஒரு சமூக வானொலியை செயற்படுத்தி உள்ளது. நேயர்களின் அறிவு மற்றும் இரசனைக்காக அர்த்தபு'டிமிக்க நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதை முதன்மைப் பணியாகக்கருதி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் 2017 ஆம் ஆண்டில் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது தேசிய பொறுப்பினை ஈடேற்றி உள்ளது.

■ சிங்கள சுதேச சேவை

இலங்கையின் ஒலிபரப்புச் சேவை வரலாற்றின் இதய அடையாளமாக கருதப்படுகின்ற சிங்கள சுதேச சேவையானது ஒலிபரப்பின் தொடக்கத்தில் இருந்து இற்றைவரை தனது அடையாளத்தைப் பாதுகாத்துக்கொண்டு ஒழுக்கம்நிறைந்த ஊடக மரபினை தேசத்திற்கு கொடையாக அளிக்கின்ற தேசிய நோக்கத்தை முதன்மையாகக்கொண்டு 2017 ஆம் ஆண்டில் தனது நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்தி இருந்தது.

பாடல்,இலக்கியம்,கலைகள்,சினிமா,நாடகம் ஆகிய இழகியல்சார் அணுகுமுறைகள் ஊடாக மக்கள் மனதை தட்டுகின்ற நோக்கத்துடன் சிங்கள சுதேச சேவை 2017 ஆம் அண்டில் "கீ ஹரசரணிய", "ரூபண", "ரன் கீ சர", "உப்பத் அசல", "வி'வ மதுர" போன்ற புதிய நிகழ்ச்சிகளை அறிமுகம் செய்துள்ளது. தொடர்பாடல் பற்றிய புதிய கண்ணோட்டங்கள் மற்றும் உரையாடல்சார்ந்த நிகழ்ச்சியான "சங்கதன" நிகழ்ச்சியும் நீர்ப்பாசன தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் "வாரி மண்டபய" நிகழ்ச்சியையும் நச்சுத்தன்மையற்ற உள்நாட்டு விவசாயத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் "திரசாற கொவிதெனக் சுரக்ஷித ஹெட்டக்" நிகழ்ச்சியையும் பெண்களின் சமூக, பொருளாதார, அரசியல் அறிவினை விரிவாக்கும் நோக்கத்துடன் "கான்த்தா பிரபோதய" நிகழ்ச்சியையும் நேயர்கள் காணாத கண்ணோட்டத்தில் நேயர்களின் மனங்களை நெருங்கும் நோக்கத்துடன் "சமீப'ரூப" நிகழ்ச்சியையும் மக்கள்மீது தாக்கமேற்படுத்துகின்ற பல்வேறு சுகாதார சிக்கல்கள் மற்றும் வைத்தியசாலைகள் சம்பந்தமான சிக்கல்களை நேரலையாக சுகாதார அமைச்சருக்கு ஆற்றுப்படுத்தும் நோக்கத்துடன் "எமத்திதுமாகென் அஹன்ன" நிகழ்ச்சியும் தமிழ் மொழியை பேசுவதையும் பிரபல்யப்படுத்துவதையும் நோக்கமாகக்கொண்டு "தன்னவனம் உகன்வன்ன தன்னெத்னம் இகெனகன்ன" நிகழ்ச்சியையும் நாடு பூராவிலும் உள்ள ரஜமகாவிகாரைகளில் இருந்து போதைப்பொருள் தடுப்பு பற்றி பிள்ளைகளுக்கு விழிப்புணர்வூட்டும் நோக்கத்துடன் "தெஹெமி பரபுரக் மத்தின் நிதஹஸ் ரட்டக்" நிகழ்ச்சியும் 2017 ஆம் ஆண்டில் சிங்கள சுதேச சேவை அறிமுகம் செய்த புதிய நிகழ்ச்சிகளாகும்.

சுதேச சேவை மூலமாக 2017 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் என்றவகையில் "சவதேசீய ரட்டா", "சரசவி ஹன்ட", "பிரபுத்த கீ", "லோ அத்தெம்புல","ஹிமவ் அரண", "நவ கீபத சங்கல்பனா", "சத்யொக்'னய" என்பவற்றை எடுத்துக்காட்ட இயலும்.

இதற்கு மேலதிகமாக சுதேச சேவையின் இலக்காகக் கொள்ளப்பட்ட நேயர்களுக்காக நீண்டகாலமாக ஒலிபரப்பப்பட்ட "குவன்விதுலி ரங்கமடல", "லோகாகவலோக்கனய", "ரசாஞ்சலீ", "ஆலோச்சனா", "சம்பாவனா", "இரிதா சங்கிரஹய", "ஆவர்ஜனா", "கொவிதெனட்ட பெயக்", "மிஹிதலய", "திறசற தியவர", "இந்துறு தொர", "வி'வயே விந்தனீய ஹோராவ" போன்ற 30 இற்கு கிட்டிய நிகழ்ச்சிகள் 2017 ஆம் ஆண்டிலும் நேயர்களின் பாராட்டுகளை வென்றெடுக்க வழிசமைத்ததென்பதை கூறவேண்டும்.

■ கல்விச்சேவை

2017 ஆம் ஆண்டிலும் முந்திய வருடங்களில் போன்று ஒலிபரப்புக் கூட்டுத்தாபன கல்விச்சேவை சுதெசசேவை ஒலிபரப்பு நேரத்திலேயே பி.ப 3.00 மணி தொடக்கம் பி.ப. 4.00 மணி வரையும் சனிக்கிழமைகளில் மாத்திரம் மேலதிகமான 30 நிமிட நேரமும் தமிழ் சுதேசசேவை ஊடாக கிழமை நாட்கள் 5 இலும் பி.ப. 5.00 மணி தொடக்கம் பி.ப. 5.30 மணி வரையும் கல்விச்சேவை நிகழ்ச்சிகளின் ஒலிபரப்பிற்காக ஈடுபடுத்தப்பட்டது. உயர்தர பாடத்திட்டத்துடன் தொடர்புடையதாக அரசறிவியல் நிகழ்ச்சி 2017 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட புதிய நிகழ்ச்சியாகும். கல்விப் பொது தராதரப் பத்திர (உயர்தரம்), தரம் 5 புலமைப்பரிசில், கல்விப் பொது தராதரப் பத்திர(சாதாரண தரம்) பரீட்சைகளை இலக்காகக்கொண்டு 2017 ஆம் ஆண்டில் கல்விச் சேவை மூலமாக பரீட்சை உதவிக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன. கல்விச் சேவை ஒலிபரப்பு நேரத்தை பிள்ளைகளால் செவிமடுக்க பொருத்தமான நேரத்திற்கு கொண்டுவரப்பட்டமை பாடசாலைப் பிள்ளைகளுக்காக மேற்கொள்ளப்படுகின்ற நிகழ்ச்சியாக அமைவதைப்போன்றே பாடசாலையை விட்டு நீங்கிச்சென்ற பிள்ளைகள், உயர்கல்வி பயில்கின்ற பிள்ளைகள், முதியவர்கள் போன்ற பல்வேறு அடுக்குகளுக்காக கல்வி நிகழ்ச்சிகளை முன்வைத்தமை, ஒலிபரப்பு கூட்டுத்தாபன வளவுக்கு வெளியில் கஸ்டப்பிரதேச பாடசாலைகளை சார்ந்ததாக கல்வி நிகழ்ச்சிகளை உருவாக்கியமை, கஸ்டப்பிரதேச பாடசாலைகளுக்காக கல்விரீதியான சேவையை வழங்க அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டமை, தேசிய கல்வி நிறுவகத்துடன் கூட்டாக செயலாற்ற நிர்வாகத்தினர் இடையீடு செய்தமை போன்ற விடயங்களை 2017 ஆம்ஆண்டின் தனித்துவமான நடவடிக்கைகளென குறிப்பிட இயலும்.

■ வர்த்தக சேவை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வர்த்தகசேவை 2017 ஆம் ஆண்டிலும் அர்த்தபுஷ்டிமிக்க சமகால நிகழ்ச்சிகளையும் பல பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளையும்நடாத்தி நேயர்களின் தகவலறிவதற்கான உரிமையை உறுதிசெய்துள்ளது. அன்றாட அலுவல்களை தொடங்குகின்ற நேயரின் மனதிற்கு புத்துணர்ச்சி அளிக்கும் நோக்கத்துடன் ஒரு புலமைசாலியின் விசாரசிலி கருத்துக்களையும் சேர்த்து "தவசே பிபிதென கீதய" நேயர்களின் பாடல் கோரிக்கைக்கு வாய்ப்பு வழங்கி "ஒபே நமின் கீ", "கலப்புப் பாடல்களை இரசிக்க விரும்புகின்ற நேயர்களுக்காக "கீத சம்பாவனாவ" கிரெமபோன் தட்டுகளை சார்ந்ததாக "HIS MASTER'S VOICE" உத்தர பாரத ஹிந்தி பாடல் நிகழ்ச்சியான "ஸ்வர வசந்தய" 2017 இல் வர்த்தக சேவை ஊடாக ஒலிபரப்பப்பட்ட இசை நிகழ்ச்சிகளாகும்.

நேயர்களின் சுகாதார அறிவினை விருத்திசெய்யும் நோக்கத்துடன் ஆரோக்கியமான வாழ்க்கையைப் பழகுவதன் பெறுமதியை சுட்டிக்காட்டுவதற்காக மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைகளை வழங்குகின்ற "ஆரோக்யா பரமாலாபா" நிகழ்ச்சி, "சுவ அரண" சுகாதாரக் கல்வி நிகழ்ச்சி மற்றும் "சதியே வைத்ய சாயனய" உரையாடல் நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டது.

திரைப்படங்களை விரும்புகின்ற மற்றும் அவை பற்றிய தகவல்களை கண்டறிய விரும்புகின்ற நேயர்களுக்காக "சலனா சேயா" நிகழ்ச்சியும் வானொலி பல்சுவை நிகழ்ச்சியான "சொந்துரு செவன" நிகழ்ச்சியும் அமரத்துவம்வாய்ந்த நினைவுகளை எச்சமாக விட்டுச்சென்ற கலைஞர்கள் பற்றிய நிகழ்ச்சியான "நொமியன மினிசுன்" நிகழ்ச்சியும் திறமைநிறைந்த கலைஞர்களின் வெற்றியையும் வாழ்க்கை அனுபவங்களையும் உள்ளடக்கிய "சத்துட்டு கெதெல்ல" நிகழ்ச்சியும் பல்கலைக்கழக சிந்தனைகளை மேலோங்கச் செய்விக்கின்ற தலைசிறந்த எழுத்தாளர்களின் சிறுகதைகளை சார்ந்ததாக தயாரிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவமாணவியர் சமர்ப்பிக்கின்ற நாடக நிகழ்ச்சியான "சரச ரங்கமடல" நிகழ்ச்சியும் 2017 ஆம் ஆண்டில் வர்த்தகசேவை ஒலிபரப்பு நேரத்தில் ஒலிபரப்பாகிய நிகழ்ச்சிகளாகும்.

■ சிட்டி எப்.எம். சேவை

சிக்கலான சமூக சட்டகத்திற்குள்ளே சவால்களை வென்றெடுத்து ஒலிபரப்புத்துறையில் மிகவும் பயனுறுதிமிக்கதும் மக்களால் விரும்பப்படுகின்றதுமான வணிக வானொலி அலைவரிசையாக மாறும் நோக்கத்துடன் செயற்படுகின்ற ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சிட்டி எப். எம். சேவை போட்டித்தன்மைமிக்க சந்தையை தந்திரமாக வெற்றிகொள்ளல், தேசிய பொறுப்பினைக்கொண்டு உலக அறிவு மற்றும் தகவல்களை சரியாகவும் சமநிலை வாய்ந்ததாகவும் நம்பிக்கையுடன் நேயர்களை அடையச்செய்வித்தல், உயர்வான இரசனையைக்கொண்ட நேயர்கள் சமூகமொன்றை உருவாக்குவதன் ஊடாக உள்நாட்டுக் கலாசாரத்தின் மேம்பாட்டுக்காக படைக்குந்திறன்மிக்க நிகழ்ச்சிகளை தயாரித்து சமர்ப்பித்தல் போன்ற நோக்கங்களை அடைவதற்காக 2017 ஆம் ஆண்டில் சிட்டி எப். எம். சேவை பல்வேறு நிகழ்சிகளை செயற்படுத்தி உள்ளது.

அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் தலைமையில் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தினமான ஜனவரி மாதம் 05 ஆந் திகதி கூட்டுத்தாபனத்தின் 50 வது ஆண்டுநிறைவினை கொண்டாடுமுகமாக புதிய கட்டடத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தமை மற்றும் அதற்கு இணையானதாக நடாத்தப்பட்ட முழு இரவுக்குமான பிரித் பாராயண தர்ம பிரசங்கம் சிட்டி எப்.எம். சேவை ஊடாக 2017.01.05 ஆந் திகதி நேரலையாக ஒலிபரப்பப்பட்டது.

சமகால நிகழ்வுகள் மற்றும் மக்களின் பிரச்சினைகளை மையமாகக்கொண்டு "சீதல ஈதல" நிகழ்ச்சியும்" இரசனைமிக்க நிகழ்ச்சி என்றவகையில் மாதந்தோறும் ஒலிபரப்பப்படுகின்ற "மிஹிர மனரம்" நிகழ்ச்சியும் புதிய நிகழ்ச்சிகளாக "கெபே கைவாறுவ, அஹஸ் கவ்வ, சகுர்த்த கீத தஹய, காலபற ஹென்தேவ, நேசென கீ 10, கொலிவுட் சிஹின,நிவுஸ் பிரின்ற்" ஆகிய நிகழ்ச்சிகளும் 2017 ஆம் ஆண்டில் சிட்டி எப். எம். சேவை ஊடாக மக்கள்மயப்படுத்தப்பட்ட சிறப்பு நிகழ்ச்சிகளென எடுத்துக்காட்டப்பட இயலும். அதற்கு மேலதிகமாக தேசிய, சமய, கலாசார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த சுதந்திர தின விழா,சிங்கள - தமிழ் புத்தாண்டு, வெசாக் வைபவம், நத்தார் விழா போன்றவற்றை முதன்மையாகக்கொண்டு முந்திய ஆண்டுகளில் போன்றே 2017 ஆம் ஆண்டிலும் சிறப்பு நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன.

■ தமிழ் சுதேச சேவை

தமிழ் மக்களின் கலாசார அடையாளங்களுக்கு அமைவாகச் சென்று அவர்கள் வாழ்க்கையில் தாக்கமேற்படுத்துகின்ற சமூக, பொருளாதார, அரசியல், கல்வி மற்றும் இரசனைசார்ந்த நிகழ்ச்சிகளை ஒலிபரப்புதல் 2017 ஆம்ஆண்டில் தமிழ் சுதேச சேவையூடாக மேற்கொள்ளப்பட்டது.

அதேவேளையில் தைப்பொங்கல் தினம்,சரஸ்வதி பூசை போன்ற கலாசார முக்கியத்துவம்வாய்ந்த விசேட தருணங்கள் சம்பந்தமான நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டதோடு அவற்றுடன் தொடர்புடைய பல்வேறு பல்சுவை நிகழ்ச்சிகளும் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்து சமயத்தையும் ஏனைய சமயங்களையும் கடைப்பிடிக்கின்ற தமிழ் மக்களை இலக்காகக்கொண்டு விசேட சமய நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டில் ஒலிபரப்பாகிய சமய நிகழ்ச்சிகள் என்றவகையில் "யாவை தீர்க்கதரிசனம்" வேதாகம நிகழ்ச்சியும் "தீபம்" கிறிஸ்தவ சமய நிகழ்ச்சியும் விசேடமாக குறிப்பிடத்தக்கவை ஆகும். அதற்கு மேலதிகமாக வெசாக் வைபவம் மற்றும் பொ-

சான் வைபவத்தின் நிமித்தம் தேசிய வைபவத் தருணங்கள் ஒலிபரப்பப்பட்டன. ஹஜ்ஜிப் பெருநாள் சம்பந்தமான நிகழ்ச்சியும் ஒலிபரப்பாகியது.

சர்வதேச ரீதியாக, தேசிய ரீதியாக மற்றும் சமூகரீதியாக முக்கியத்துவம் வகிக்கின்ற பல்வேறு தினங்களை அடிப்படையாகக்கொண்டு சிறப்பு நிகழ்ச்சிகளை ஒலிபரப்புதல் மற்றும் அவை தொடர்பில் நிலவிய தேசிய வைபவங்களை தொகுத்து வழங்குதல் 2017 ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்டது. அத்தகைய நிகழ்ச்சிகளாக "ரட்டவட்டா அவுருது" சிங்கள இந்து புத்தாண்டு நிகழ்ச்சி,சுதந்திர தினக் கொண்டாட்டம், மே தினக் கொண்டாட்டம், போதைப்பொருள் தடுப்புத் தின நிகழ்ச்சி, உலக சிறுவர் தின நிகழ்ச்சி, மகளிர் தின நிகழ்ச்சி என்பவற்றை எடுத்துக்காட்ட இயலும்.

■ தென்றல் சேவை

இளம் சமுதாயத்தை இலக்காகக்கொண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தொடங்கியுள்ள தமிழ்மொழிமூல வானொலி அலைவரிசையாக அமைவது தென்றல் சேவையாகும். 2017 ஆம் ஆண்டில் தென்றல் சேவையின் அடையாளத்தைப் பாதுகாத்துக்கொண்டு பல்வேறு தேசிய, சமய,சமூக முக்கியத்துவம் வாய்ந்த தினங்களில் சிறப்பு நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி உள்ளது. அதற்கிணங்க தைப்பொங்கல் தினம் மற்றும் சரஸ்வதி பூசை என்பவற்றுக்காக தனித்துவம் வழங்கி கூட்டுத்தாபன வளவில் வைபவங்களை ஏற்பாடு செய்தல் முந்திய ஆண்டுகளில் போன்றே 2017 ஆம் ஆண்டிலும் விமர்சையாக இடம்பெற்றது. சிங்கள் இந்து புதுவருட தினம், நமழான் பெருநாள், ஹஜ்ஜப் பெருநாள், சுதந்திர தினம், மகளிர் தினம், உலக சிறுவர் தினம் போன்றவற்றுக்காகசிறப்பு நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன. அதற்கு மேலதிகமாக நல்லூர் திருவிழாப் பருவத்தில் களநிலை பற்றிய விபர அறிக்கைகளை வழங்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்பேசும் நேயர்களின் அறிவு மற்றும் பொழுதுபோக்கிற்காக ஒலிப்பதிவு செய்யப்பட்ட "பாட்டுக்குப் பாட்டு" எனும் இசை நிகழ்ச்சி தக்க உதாரணமாகும். நாடகம், நகைச்சுவைக் காட்சிகள் போன்ற பல்சுவை நிகழ்சிகளை உள்ளிட்ட அறிவும் பொழுதுபோக்கும் நிறைந்த பல நிகழ்ச்சிகள் 2017 ஆம் ஆண்டில் நேயர்களுக்கு வெகுமதியாக வழங்கப்பட்டன.

கிறிஸ்தவ சமய முக்கியத்துவம் வாய்ந்த தலவில மற்றும் மடுமாதா தேவாலய யாத்திரை பருவங்களில் சிறப்பு நிகழ்ச்சிகளும் களநிலை பற்றிய அறிக்கைகளை வழங்குதலும் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் கிறிஸ்தவ/ கத்தோலிக்க சமய நிகழ்ச்சிகள் பலசேவைபெறுனர்களின் அனுசரணையின் கீழ் தென்றல் சேவையினூடாக ஒலிபரப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

■ முஸ்லிம் சேவை

ஏறக்குறைய 67 வருடகால வரலாற்றினைக்கொண்ட இலங்கையின் முஸ்லிம் சமுதாயத்திற்கான முஸ்லிம் கலாசார மற்றும் இஸ்லாம் சமயப் பின்னணியை அடிப்படையாகக்கொண்டு ஒலிபரப்பாகின்ற ஒரேயொரு வானொலி அலைவரிசை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையாகும். இலங்கைவாழ் முஸ்லிம் சமூகத்தில் போன்றே தென்னிந்திய முஸ்லிம் மக்கள் மத்தியிலும் இந்த சேவை பாராட்டுகளைப் பெற்றுள்ளது. இணையத்தளத்தின் ஊடாக உலகம் பூராவிலும் உள்ள முஸ்லிம் செவிமடுக்கின்ற முஸ்லிம் சேவை நிகழ்ச்சிகளில் ஏறக்குறைய 85 % அனுசரணையாளர்களின் பங்களிப்புடன் ஒலிபரப்பப்படுகின்ற நிகழ்ச்சிகளாகும். இனக்குழுவொன்றை அடிப்படையாகக்கொண்டு ஒலிபரப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை எல்லா வேளைகளிலும் இனங்களுக்கிடையில் சகவாழ்வினையும் ஒத்துழைப்பினையும் விருத்திசெய்வதை பிரதான நோக்கமாகக்கொண்டு நிகழ்ச்சிகனை தயாரித்துள்ளதோடு 2017 ஆம் ஆண்டிலும் முஸ்லிம் சமுதாயத்தைப்போன்றே ஒட்டுமொத்த இலங்கை மக்களுக்கும் தனது ஒத்துழைப்பினை நல்கிய ஒரு வருடமாகும். இவை மத்தியில் சமய நிகழ்ச்சிகள்,சிறுவர் மற்றும் மகளிர் நிகழ்ச்சிகள், இசை மற்றும் நாடக நிகழ்ச்சிகள், இளம் சமுதாயத்தினருக்கான நிகழ்ச்சிகள், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகள், மலே மெகசின், உருது மெகசின் போன்ற நிகழ்ச்சிகளை எடுத்தக்காட்ட இயலும். அதற்கு மேலதிகமாக சிங்கள சுதேச சேவையூடாக சிங்கள மொழியில் இஸ்லாம் சமய நிகழ்ச்சியொன்றும் ஒலிபரப்பப்பட்டுள்ளது.

■ ஆங்கில சேவை

ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆங்கில சேவை கலாசார, சமய, சமூக, இரசனைசார்ந்த மற்றும் சமகால முக்கியத்துவம்கொண்ட நிகழ்ச்சிகள் மூலமாகவும் இசைசார்ந்த நிகழ்ச்சிகள் மூலமாகவும் ஆங்கில சேவையைச் சுற்றிக் குழுமியுள்ள அதிகூடிய எண்ணிக்கைகொண்ட நேயர்களை மகிழ்வித்தலை 2017 ஆம் ஆண்டிலும் சிறப்பாக ஈடேற்றி உள்ளது. புராதன மற்றும் இசைரீதியான முக்கியத்துவம்கொண்ட ஆங்கிலப் பாடல் நூலகமொன்றை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தன்னகத்தே கொண்டுள்ளதோடு அவற்றைச் சார்ந்ததாக தயாரிக்கப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் 2017 ஆம் ஆண்டில் ஒலிபரப்பப்பட்டன. இசைசார்ந்த நிகழ்ச்சிகளுக்கு மேலதிகமாக பல்வேறு நாடுகளின் சுதந்திர தின விழாக்கள், அந்நாடுகளின் விசேட நிகழ்வுகளை சார்ந்ததாக தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சிகள், சர்வதேசரீதியில் முக்கியத்துவம் வகிக்கின்ற பல்வேறு தினங்கள் சம்பந்தமான நிகழ்ச்சிகள், மே தினம், சுதந்திர தினம் போன்ற தேசிய முக்கியத்துவம் கொண்ட நிகழ்ச்சிகள் முந்திய ஆண்டினைப் போலவே 2017 ஆம் ஆண்டிலும் ஒலிபரப்பப்பட்டன. தேசிய மற்றும் கலாசார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு விழாக்கள் தொடர்பாக தயாரிக்கப்பட்ட சிறப்பு நிகழ்ச்சிகளும் 2017ஆம் ஆண்டில் ஒலிபரப்பப்பட்டன.

■ **ரஜரட்ட சேவை**

ரஜரட்ட பிரதேசத்தை உள்ளடக்கி ஒலிபரப்பாகின்ற பிரதேச வானொலி அலைவரிசையான ரஜரட்ட சேவை 2017 ஆம் ஆண்டில் பல சிறப்பு நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி உள்ளது. ரஜரட்ட சேவையானது இலங்கையின் கலை உலகிற்கு பல கலைஞர்களை கொடையாக அளித்த பிரதேச வானொலி அலைவரிசையாகும். மேற்படி கலைஞர்களை ஈடுபடுத்தி பல சிறப்பு நிகழ்ச்சிகளை 2017 ஆம் ஆண்டில் ரஜரட்ட சேவை ஒலிபரப்பி உள்ளது.

புனித நகரங்களிலொன்றாக அமைகின்ற அநுராதபுர நகரத்தில் நடாத்தப்படுகின்ற விசேட சமய வைபவங்களுக்காக ஊடக அனுசரணை வழங்குதல் 2017 ஆண்டு பூராவிலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும். அதற்கிணங்க விசேடமாக பொசொன் பௌர்ணமி தினத்தை முதன்மையாகக்கொண்டு பல நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டதோடு ஏனைய பௌர்ணமி தினங்களில் பௌர்ணமி நிகழ்சிகள், விசேட பெரஹெர நிகழ்ச்சிகள், வெசாக் வலயம் என்பவற்றுக்கான ஊடக அனுசரணை வழங்கப்பட்டமையைக் குறிப்பிட இயலும்.

பொலிஸ் பரிசோதகர் தலைமை அதிபதியை இணைத்துக்கொண்டு "பொலிசும் நீங்களும்" நிகழ்ச்சியை தொடங்கியமை 2017 ஆம் ஆண்டில் இடம்பெற்றதோடு மேற்படி நிகழ்ச்சியை இடையறாமல் ஒலிபரப்புதலும் மேற்கொள்ளப்பட்டது.

செய்திகள் மற்றும் சமகால முக்கியத்துவம்வாய்ந்த தகவல்களை சார்ந்ததாக நிகழ்சிகளை தயாரித்து ஒலிபரப்பியதோடு செய்தியின்போது குரல் பகுதிகளை ஒலிபரப்புதலும் 2017 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

விசேட தேசிய விழாக்களை முதன்மையாகக்கொண்டு நிகழ்ச்சிகளை செயற்படுத்துதல் இடம்பெற்றதோடு சுதந்திர தினம், தொழிலாளர் தினம், புதுவருட வைபவம், நத்தார் தினம் என்பவற்றுக்கான விசேட கவனம் செலுத்தப்பட்டு நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டன.

விசேட நபர்களின் ஞாபகார்த்த நிகழ்சிகளும் 2017 இல் ஒலிபரப்பாகின.

■ **வயம்ப ஹன்ட**

வயம்ப ஹன்ட வடமேல் மாகாணத்தை உள்ளடக்கத்தக்கதாக பேணிவரப்படுகின்ற பிரதேச வானொலி அலைவரிசையாகும். பிரதேச ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் தனித்துவமான தருணங்கள் பற்றிய விபரங்களை மக்களுக்கு அறிவு, இரசனை ஊடாக வழங்குவதை நோக்கமாகக்கொண்டு 2017 ஆம் ஆண்டில் வயம்ப சேவை தனது அலுவல்களை நெறிப்படுத்தி உள்ளது. தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த விசேட தினங்களையும் விசேட தேசிய விழாக்கள் தொடர்பில் முந்திய வருடங்களில் போன்றே இவ்வருடத்திலும் சிறப்பு நிகழ்ச்சிகள் செயற்படுத்தப்பட்டுள்ளதோடு அதற்கு மேலதிகமாக இதய நோய், சிறுநீரக நோய், போதைப்பொருள், குருநாகல் அனர்த்தக் குழு, சுற்றாடல் வாரம், புகையிலை எதிர்ப்பு தினம், இலத்திரனியல் கழிவுப்பொருட்களை அப்புறப்படுத்துதல் போன்ற மிகமுக்கியமான துறைகளை உள்ளடக்கியதாக நிகழ்ச்சிகளை தயாரித்து ஒலிபரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது. விஜய குமாரணதுங்க, அஜந்தா ரணசிங்க, எச். ஆர். ஜோதிபால, விஜய நந்தசிறி, எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கஈ சனல் தயாநந்த கோணார போன்ற தனித்துவமான ஆட்கள் சம்பந்தமான சிறப்பு நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டுள்ளன. மலியதேவ வித்தியாலயத்தின் உயர்தரத்தில் உன்னதமான சித்தியடைந்தவர்கள் தொடர்பான நிகழ்ச்சி, பாடசாலை பிளளைகளுக்கு சுபாவித பாடலை அறிமுகம் செய்கின்ற நிகழ்ச்சி, உள்நாட்டு நடனக்கலை சம்பந்தமான நிகழ்ச்சி போன்ற பாடசாலைப் பிள்ளைகளுக்கு பயனுள்ள பல நிகழ்ச்சிகளும் மலியதேவ பழைய மாணவர் சங்கம் ஏற்பாடுசெய்த மலியதேவ மேலா கண்காட்சிக்காக ஊடக அனுசரணை வழங்கியமையும் 2017 ஆம் ஆண்டில் ஈடேற்றப்பட்ட பணிகளாகும். அதற்கு மேலதிகமாக வயம்ப ஹன்ட 8 வது ஆண்டுநிறைவுக்காக நல்லாசி நிகழ்ச்சிகள், வாழ்த்து மற்றும் பாடல்கள் போன்ற நிகழ்ச்சிகளையும் ஒலிபரப்பி உள்ளது.

■ **றேடியோ தம்பான**

ரேடியோ தம்பான வானொலி அலைவரிசை அடிப்படையில் இலங்கையின் பூர்வீகக் குடிகளான வேடர்களை இலக்காகக்கொண்டும் தம்பானையை சார்ந்த சமுதாயத்திற்காகவும் இலங்கையில் அமுலாக்கப்படுகின்ற வர்த்தக நோக்கத்திலிருந்து விடுபட்ட ஒரேயொரு வானொலி அலைவரிசையாகும். 2017 ஆம் ஆண்டிலும் பூர்வீகக் குடிகளின் அடையாளம், சடங்குகள் மற்றும் நம்பிக்கைகள், கலைகள் போன்றவற்றை பேணிப்பாதுகாத்து அவர்களின் வாழ்க்கைக்கு முக்கியமானதாக அமைகின்ற துறைகளை ரேடியோ தம்பான உள்ளடக்கி செயற்பட்டது. 2017 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபன வெளியீட்டுப் பிரிவுடன் ஒன்றுசேர்ந்து "வனயென் எசென கீ" எனும் இறுவட்டினை தயாரித்துள்ளது. உலக பூர்வீகக் குடிகளின் தினத்தின் நிமித்தம் நடாத்தப்பட்ட வைபவத்தை ஏற்பாடுசெய்தல் மற்றும் ஊடகத் தொகுப்பு பணிகளை ஈடேற்றுதல், செவிமடுத்தல் வலயத்தைச்சேர்ந்த பிள்ளைகளுக்காக தொடர்பாடல் பயிற்சியை வழங்குதல், ரேடியோ தம்பான 9 வது ஆண்டுநிறைவு வைபவத்தை நடாத்துதல் மஹியங்கனை ரஜமகா விகாரையின் ஸ்ரீ சுமனசமன் தேவாலயத்தின் வருடாந்த பெரஹெராவின் உத்தியோகபூர்வ ஊடகத் தொகுப்பு என்பவை 2017 ஆம் ஆண்டில் ஈடேற்றிய விசேட அலுவல்களெனக் குறிப்பிடலாம்.

■ **செய்திகள் மற்றும் சமகால நிகழ்ச்சிகள் பிரிவு**

மிகவும் துல்லியமான செய்திகளையும் தகவல்களையும் பொறுப்புடனும் நம்பிக்கையுடனும் மக்களுக்கு வழங்குவதே செய்திகள் பிரிவின் முதன்மைப்பணியும் நோக்கமுமாக அமைகின்றது. 2017 ஆம் ஆண்டில் அதற்காக நாள்தோறும் 04 செய்தி அறிக்கைகள் மும்மொழியிலும் ஒலிபரப்பப்பட்டன. செய்திகளின் நம்பகத்தன்மையை தீவிரப்படுத்தும் நோக்கத்துடன் குரல் பகுதிகளை சேர்த்தல் மேற்கொள்ளப்பட்டது. இதற்கு மேலதிகமாக மணித்தியாலச் செய்திகள், நாட்குறிப்பேடு,சிறுவர் செய்திகள், பௌத்த செய்திகள் தொகுப்பும் செய்திகள் பிரிவு ஈடேற்றிய பணியாகும்.

சமூகத்தில் நிலவுகின்ற சமகால கூருணர்வுமிக்க சம்பவங்களுடன் தொடர்புடையதாக நாள்தோறும் "சுபாரதீ" நிகழ்ச்சி, அரசாங்கத்தின் அபிவிருத்திப் பணிகளை மக்கள் மத்தியில் கொண்டுசெல்லும் நோக்கத்துடன் செயற்படுத்தப்பட்ட "அத்துல் பெத்த" நிகழ்ச்சி, நெருக்கடிகள் முரண்பாடுகள் கருத்தியல்கள் ஊடாக சரியான பாதையில் பிரவேசிக்கின்ற தொனிப்பொருளின்கீழ் "சத்யோக்'ன" நிகழ்ச்சிஎன்பவை சமகால பிரிவு மூலமாக தயாரிக்கப்பட்ட விசேட நிகழ்ச்சிகளாக அறிமுகம் செய்யப்பட இயலும். 2015 ஆம் ஆண்டிலிருந்து பாராளுமன்ற கூட்டத்தொடரின் நேரலை ஒலிபரப்பு தொடங்கப்பட்டதோடு 2017 இலும் இப்பணிகள் இடையறாமல் மேற்கொள்ளப்பட்டன.

■ **அபிவிருத்திக் கூறு**

அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் 2017.01.01 தொடக்கம் 2017.12.31 வரை பங்கேற்ற பல்வேறு வைபவங்களுக்கான ஊடகத் தொகுப்பினை வழங்கும் பணிகள் அபிவிருத்தின் கூறு மூலமாக 2017 ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்டன. மேற்படி வைபவங்களில் ஜனாதிபதியவர்கள் ஆற்றிய உரைகளை பேணிப்பாதுகாத்தலும் அபிவிருத்திக் கூறின் பணியாகும். இந்த வைபவங்கள் தொடர்பான முன்கூட்டிய பிரச்சாரப் பணிகளும் அபிவிருத்திக் கூறு மூலமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் அதிமேதகு ஜனாதிபதியவர்கள் பங்கேற்ற இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளைச் சேர்ந்த அரச தலைவர்களின் மகாநாடு, அவுஸ்திரேலிய விஜயம், ஐக்கிய நாடுகளின் 72 வது பொதுச்சபை சம்மேளனம் போன்றவற்றின் களநிலைமை அறிக்கைகளை வழங்கியமையும் ஜனாதிபதியவர்களின் உரைகளை ஒலிபரப்பியமையும் 2017 ஆம் ஆண்டில் ஈடேற்றிய பணிகளாகும்.

■ **இசைப்பிரிவு (மெல்லிசை)**

2017 ஆம் ஆண்டில் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் இசைப் பிரிவு கூட்டுத்தாபனத்தின் அனைத்து அலைவரிசைகள் ஊடாகவும் தரமான இசை நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப உச்சஅளவிலான பங்களிப்பினை வழங்கியுள்ளதோடு கல்விசார் நிகழ்ச்சிகள், எளிமையான கல்விசார் நிகழ்ச்சிகள்,படைக்குந்திறன்மிக்க நிகழ்ச்சிகள், விமர்சனம்சார்ந்த நிகழ்ச்சிகள் பலவற்றை ஒலிபரப்பி உள்ளது. வானொலி இசைக்குழு முன்வைத்த "மியுரு சர" நிகழ்ச்சி, இசைக் கல்வி நிகழ்ச்சி என்றவகையில் முந்திய வருடங்களிலிருந்து தயாரிக்கப்பட்டு வருகின்ற "ஜன கீ, நூர்த்தி கீ, நாடகம் கீ, விரிது பய்லா" நிகழ்சிகளும் வட இந்திய மரபுரீதியான சங்கீதத்தை சார்ந்ததாக தயாரிக்கப்பட்ட "சரச ராவய" நிகழ்ச்சியும் நாட்டார் பாடல்கள் மற்றும் நாட்டார் பாடல்களை சார்ந்ததாக தயாரித்த "ஹெல கீ சித்தம்" நிகழ்ச்சியும் மறைந்த தலைசிறந்த இசைக்கலைஞர்களின் ஞாபகார்த்த தினங்களை சார்ந்ததாக "ஆவர்ஜனா" நிகழ்ச்சியும் பௌர்ணமி தினங்களில் "ஸ்ரத்தாஞ்சலீ" எனும் பெயரில் பௌத்த பாடல்களின் விமர்சன நிகழ்ச்சியும் "தம்மபத கீ" நிகழ்ச்சியும் 2017 ஆம் ஆண்டில் இசைப் பிரிவினால் முன்வைக்கப்பட்டன. அதற்குமேலதிகமாக "செவக சங்கஹய" "விஸ்வயே விந்தனீய பிரதிராவ" "சரல கீ" "புஞ்சிபுஞ்சி தருவகே" "நிதஹஸ் அனுஸ்மரண கவி" "சங்கீதானந்தய" "அஹசின் எஹா" "கீயக்க அசிரிய" போன்ற நிகழ்ச்சிகளும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன இசைப்பிரிவு படைப்புகளாக அமைவதோடு முந்திய வருடங்களில் போன்று 2017 ஆம் ஆண்டிலும் அவை ஒலிபரப்பப்பட்டன.

■ **வெளியீடுகள் பிரிவு**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வெளியீடுகள் சம்பந்தமாக செயற்படுகின்ற வெளியீடுகள் பிரிவு இறுவட்டுகள், சஞ்சிகைகள் என்பவற்றை தயாரித்து வருமானம் ஈட்டுகின்றது. 2017 ஆம் ஆண்டிலும் விசேடமான விற்பனை வருமானத்தை ஈட்டியுள்ள வெளியீடுகள் பிரிவானது "சினிது சுதுமுது தலாவே" "வளாகுலின் பெச'சீதல பிணிமத்த" "உதுறுசழு எந்த" "ஜீவிதே அமதாரா" "எருறு செனில்" "லிஹிணியே" போன்ற புதிய இறுவட்டுகளைத் தயாரித்துள்ளது. விசேட வைபவங்களின்போது இறுவட்டுகளை விற்பனைசெய்து 2017 ஆம் ஆண்டிலும் வருமானம் ஈட்டியுள்ளது. அதற்கு மேலதிகமாக ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வளவில் உள்ள விற்பனைக் கூடங்களிலும் தீவடங்கிலும் பரந்துள்ள விற்பனை முகவர்கள் மூலமாகவும் இறுவட்டுகளை விற்பனை செய்துள்ளது. வெளியீடுகள் பிரிவினால் "ஹிமவ் அரண"எனும் பாடல் மதிப்பாய்வு சபையினால் தெரிவுசெய்து தரப்படுகின்ற புதிய பாடல் படைப்புகளை முன்வைக்கின்ற நிகழ்ச்சியொன்று வர்த்தக சேவை ஊடாகவும் முதுபெரும் பாடலாசிரியர் ஒருவருடன் அவரது பாடல்கள் பற்றிய இரசனைமிக்க நிகழ்ச்சியாக "பனஹிந்த"நிகழ்ச்சி சுதேச சேவை ஊடாகவும் தயாரிக்கப்பட்டு ஒலிபரப்பப்பட்டுள்ளது.

■ **செவிப்புல ஆராய்ச்சிப் பிரிவு**

2017 ஆம் ஆண்டில் செவிப்புல ஆராய்ச்சிப் பிரிவனால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

1. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சுதேச சேவைகளின் நிகழ்ச்சிகள் பற்றிய நேயர்களின் மனநிறைவினை அறிந்து கொள்வதற்கான மதிப்பாய்வு
2. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சுதேச சேவைகளின் செவிப்புல தரம் பற்றிய நேயர்களின் பிரதிபலிப்பு
3. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் உள்நாட்டு சேவைகளின் நிகழ்ச்சிகள் பற்றிய நேயர்களின் பிரதிபலிப்புகள்

வானொலி நிகழ்ச்சிகளின் தரரீதியான மற்றும் கணியரீதியான மதிப்பீடு,நாளாந்த முக்கியமான தகவலல்களை வழங்குதல்,வானொலி பொன்விழாவுக்கான சாஸ்திரீய நூல்களுக்கான தகவல்களை வழங்குதல், வானொலி நூதனசாலைக்கு அவசியமான தகவல்களையும் நிழற்படங்களையும் திரட்டுதல்,ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் பற்றிய துண்டுப்பிரசுரங்களை தயாரித்தல் என்பவை செவிப்புல ஆராய்ச்சிப் பிரிவினால் 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகளாகும்.

■ **மத்திய செயற்பாட்டுப் பிரிவு**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கலையக நெறிப்படுத்தல் அலுவல்களும் ஒலிப்பதிவு அலுவல்களும் சம்பந்தமாக செயற்படுகின்ற பிரிவாக அமைவது மத்திய செயற்பாட்டுப் பிரிவாகும். கூட்டுத்தாபனம் வசமுள்ள இணைப்புக் கலையகங்கள்,பேனல் கலையகங்கள் மற்றும் ஒலிப்பதிவுக் கலையகங்களுக்கான செயற்பாட்டு உதவியாளர்களை ஈடுபடுத்துதல் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல் மத்திய செயற்பாட்டுப் பிரிவின் செயற்பொறுப்பாகும். 2017 ஆம் ஆண்டிலும் நிகழ்ச்சிகளின் தன்மைக்கிணங்க அதற்கு ஒத்துவரத்தக்க செயற்பாட்டு உதவியாளர்களை வழங்குவதன் மூலமாக கூட்டுத்தாபனத்தின் தரத்தைப் பேணிவருவதற்காக அளப்பரிய பங்களிப்பினை மத்திய செயற்பாட்டுப் பிரிவு வழங்கியுள்ளது. நேயர்களுக்கு இடையூறுகள் ஏற்படாதவண்ணம் நம்பகத்தன்மைமிக்க வானொலி ஒலிபரப்பினை பேணி வருதல் செயற்பாட்டு உதவியாளர்களின் பிரதானமான பொறுப்பாக அமைவதோடு இவ்வாண்டில் மேற்படி பணி எவ்விதமான இடையூறுகளுமின்றி ஈடேற்றப்பட்டுள்ளது.

ஸ்டீரியோ தொழில்நுட்பத்திற்கிணங்க உச்சஅளவிலான வசதிகளுடன் பாடல்களைப்போன்றே நிகழ்ச்சிகளையும் ஒலிப்பதிவு செய்வதில் மத்திய செயற்பாட்டுப்பிரிவு பங்களிப்பு செய்துள்ளதோடு வெளியாட்களுக்காகவும் வெளிநிறுவனங்களுக்காகவும் கொடுப்பனவு செலுத்துகின்ற அடிப்படையில் ஆனந்த சமரக்கோன் கலையகமும் 5 ஆம் இலக்க மற்றும் 6 ஆம் இலக்க கலையகங்களை வழங்குவதற்காக மத்திய செயற்பாட்டுப்பிரிவின் தாராளமான பங்களிப்பு 2017 ஆம் ஆண்டிலும் வழங்கப்பட்டுள்ளது.

■ **பயிற்சி நிறுவகம்**

2017 ஆம் ஆண்டில் பயிற்சிப்பிரிவு ஈடேற்றிய பணிகள் கீழே காட்டப்பட்டவாறு அமையும்.

- 20 வெளிவாரி பயிலுனர்களுக்காக ஒலிபரப்பு தயாரிப்பு மற்றும் தொடர்பாடல் சான்றிதழ் பாடநெறி
- 25 இராணுவ அங்கத்தவர்களுக்கான ஒலிபரப்பு தயாரிப்பு மற்றும் தொடர்பாடல் சான்றிதழ் பாடநெறி

அதற்கு மேலதிகமாக மெதிரிகிரிய மத்திய மகாவித்தியாலய ஊடகப் பிரிவின் 25 மாணவர்களுக்காக ஊடகப் பயிற்சி, 10 பிரதேச சந்தைப்படுத்தல் நிறைவேற்று உத்தியோகத்தர்களின் பயிற்சி, அழகியற்கலை பல்கலைக்கழகம், சப்ரகமுவ பல்கலைக்கழகம் மற்றும் ஸ்ரீ பாலீ பல்கலைக்கழக மாணவர்களுக்கான பயிற்சித் தேவையை நிவர்த்திசெய்தல், ஒலிபரப்புக் கூட்டுத்தாபன மாற்றுக்கடமை அறிவிப்பாளர் பயிற்சி, ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தொழில்நுட்ப உத்தியோகத்தர் பயிற்சி, தமிழ் அறிவிப்பாளர்களுக்கான மொழிப்பாவனை பற்றிய பயிற்சி என்பவை பயிற்சி நிறுவகத்தினால் ஈடேற்றப்பட்ட பிற சேவைகளாகும்.

■ **பொறியியல் பிரிவு**

2017 ஆம் ஆண்டில் ஒலிபரப்புக்கூட்டுத்தாபன பொறியில் பிரிவு மூலமாக செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் பின்வருமாறு அமையும்.

1. ஹப்புத்தளை எப் எம் ஒலிபரப்புக்கூடத்தை இற்றைப்படுத்தும் கருத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை நடைமுறைப்படுத்துதல் - கருத்திட்டத்தின் பெறுமதி 91.75 மில்லியன் ‘ரூபாவாகும். அதன்கீழ் மேற்கொளளப்பட்ட செயற்பாடுகள
    - அன்ரனா முறைமையை கொள்வனவுசெய்து நிறுவுதல்
    - 250 நற் பிறப்பாக்கி கருவியொன்றைக் கொள்வனவுசெய்து நிறுவுதல்.

2. இணைப்புக் கலையகங்களை (C1 - C12) இற்றைப்படுத்தும் கருத்திட்டத்தின் இரண்டாம் கட்டம் - கருத்திட்டப் பெறுமதி 40 மில்லியன் ‘ரூபா. இணைப்புக் கலையகங்களை இற்றைப்படுத்தும் கருத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் C1 - C6 கலையகங்கள் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன.

3. தகவல் தொழில்நுட்ப வசதிகளை விருத்தி செய்வதற்கான கருத்திட்டத்தின் முதலாம் கட்டத்தை நடைமுறைப்படுத்துதல். கருத்திட்டப் பெறுமதி 70 மில்லியன் ‘ரூபாவாகும்.

4. கந்துரட்ட சேவையை இற்றைப்படுத்தும் கருத்திட்டம் - கருத்திட்டப் பெறுமதி 10 மில்லியன் ‘ரூபாவாகும்.

■ சந்தைப்படுத்தல் மீரிவு

ஒலிபரப்பு நேர விற்பனை வருமானம் அதிகரிக்கின்ற போக்கு 2017 ஆம் ஆண்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ICC கிரிக்கெட் போட்டித்தொடர் உள்ளிட்ட பல்வேறு கிரிக்கெட் போட்டித் தொடர்களின் வானொலி வர்ணனை மேற்கொள்ளப்பட்டதோடு அதனூடாக வருமானம் மேம்படுத்தப்பட்டுள்ளது. சிங்கள தமிழ் புத்தாண்டு வேளையில் “ரட்டவட்டா அவுருது” உள்ளிட்ட சுபமுகூர்த்தத்தை அறிவிக்கும் பணிக்கான சேவைபெறுனரின் அனுசரணையைப் பெறுதல் இடம்பெற்றது. வெசாக்வலயம்,கண்டி தலதா பெரஹெர.சபரகமுவ சமன் தேவால பெஹெர ஆகியவை மூலமாக 2017 ஆம் ஆண்டில் வருமானத்தை ஈட்டுதல் இடம்பெற்றது. 2017 அம் ஆண்டில் ஏற்பாடு செய்யப்பட்ட “கண்டாயம் கீ பிரசங்கய” புதிய அரங்கேற்றல் அனுபவத்திற்கும் வருமானப் பிறப்பாக்கத்திற்கும் பங்களிப்புச் செய்தது.

கணக்குக் கூற்று - 2017

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்
நிதி நிலைமை பற்றிய கூற்று

(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளன.)

	குறிப்பு	31 திசெம்பர 2017	31 திசெம்பர 2016
சொத்துக்கள்			
நடைமுறையல்லா சொத்துக்கள்			
ஆதனம்,சாதனம் மற்றும் பொறித்தொகுதி	**9**	2,293,423,537	2,229,394,908
பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள்	**8**	6,536,768	1,277,887
மென்பொருள்	**9**	1,251,063	
நடைபெறுகின்ற மூலதன வேலைகள்	**10**	54,762,028	187,241,019
முதலீடு	**11**	1,000,000	1,000,000
		2,356,973,395	**2,418,913,814**
நடைமுறைச் சொத்துக்கள்			
சரக்குத்தொக்கு	**17**	27,677,332	25,907,733
வர்த்தக மற்றும் பிற வருமதிகள்	**12**	251,158,960	241,475,741
இடைப்போக்கிலுள்ள பண்டங்கள்	**Sh 18**	93,202,706	30,512,997
காசு மற்றும் காசுக்கு சமமானவை	**13**	351,718,918	320,286,094
		723,757,917	**618,182,565**
மொத்த சொத்துக்கள்		**3,080,731,312**	**3,037,096,379**
உரிமைப்பங்குகளும் பொறுப்புகளும்			
மூலதனமும் ஒதுக்கங்களும்			
வெளிப்படுத்திய மூலதனம்		307,386,085	307,386,085
மூலதன ஒதுக்கம்		19,997,092	
மீள்பெறுமானக் கணிப்பீட்டு ஒதுக்கங்கள்		14,421,999	14,421,999
தடுத்துவைத்த ஈட்டல்கள்	**14**	(36,060,404)	(108,694,335)
		305,744,772	**213,113,749**
முறையல்லா பொறுப்புகள்			
குறித்துரைத்த நன்மைக் கடப்பாடுகள்	**Sh 19**	224,904,536	241,582,628
பிற்போடப்பட்ட வருமானம் (ஜப்பான் கொடை)		70,849,537	75,218,347
அரசாங்க கொடை		863,445,527	722,868,845
திருகோணமலை கொடை		1,128,190,137	1,283,596,811
பிற்போடப்பட்ட வரி பொறுப்புகள்	**8**	79,401,520	70,970,003
		2,366,791,257	**2,394,236,634**
நடைமுறை பொறுப்புகள்			
வர்த்தக மற்றும் பிற சென்மதிகள்	**15**	266,335,226	257,847,404
நிதிசாரா பொறுப்புகள்	**16**	141,860,056	171,898,592
மொத்த பொறுப்புகள்		**408,195,282**	**429,745,996**
மொத்த உரிமைப்பங்குகளும் பொறுப்புகளும்		**3,080,731,312**	**3,037,096,379**

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டம் மற்றும் 1966 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சட்டம் ஆகியவற்றுக்கு அமைவாக இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக நிதிப்பணிப்பாளரால் சான்றுப்படுத்தப்பட்டது.

.....
பணிப்பாளர் (நிதி) திகதி : 2016

இந்த நிதிக்கூற்றை தயாரித்து சமர்ப்பிப்பதற்கான பொறுப்பை பணிப்பாளர் சபை கொண்டுள்ளது. இந்த நிதிக்கூற்று பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

.....
தலைவர்
திகதி : 2016

.....
பணிப்பாளர் சபை
திகதி : 2016

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்
விபரமான வருமானக் கூற்று

(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளன.)

	குறிப்பு	2017 டிசம்பர் 31	2016 டிசம்பர் 31
விற்பனைகள்	**1**	694,202,792	663,142,415
விற்பனைக் கிரயம்	**2**	619,161,702	621,764,705
மொத்த இலாபம்		**75,041,090**	**41,377,710**
ஏனைய தொழிற்பாட்டு இலாபம்	**3**	325,836,839	292,596,221
விநியோகச் செலவுகள்	**4**	5,361,316	5,743,906
ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள்	**5**	336,245,865	321,745,130
நிர்வாகச் செலவுகள்	**6**	329,451,940	317,162,912
தொழிற்பாட்டு இலாபம்		**(270,181,192)**	**(310,678,018)**
நிதிச் செலவுகள	**7**	5,952,777	5,555,448
அரசாங்க மானியத்துக்கு முன் இலாபம் / நட்டம்		**(276,133,969)**	**(316,233,466)**
அரசாங்க மானியம்	**3.1**	350,690,000	365,000,000
அரசாங்க மானியத்துக்கு பின் இலாபம் / நட்டம்		**74,556,031**	**48,766,534**
வரிச் செலவுகள்	**8**	(3,172,636)	6,450,961
வரிக்குப் பிந்திய இலாபம்		**71,383,395**	**55,217,495**
மொத்த அனைத்து வருமானம்		**71,383,395**	**55,217,495**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
சொத்துகளில் மாற்றம் பற்றிய கூற்று

(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளன.)

	குறிப்பு	வெளியிப்பட்ட மூலதனம்	மூலதன ஒதுக்கம்	மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்	-	நிறுத்தி வைக்கப்பட்ட வருவாய்கள	மொத்தம்
2016 ஜனவரி 1 இல் மீதி		307,386,085		14,421,999		-	321,808,084
முழு வருமானம்							
ஆண்டுக்கான முழு வருமானம்						55,217,495	55,217,495
வருமான ஒதுக்க திருத்தம்						(163,911,830)	(163,911,830)
2016 டிசம்பர் 31இல் மீதி		**307,386,085**	**-**	**14,421,999**		**(108,694,335)**	**213,113,749**
முழு வருமானம்			19,997,092				19,997,092
காலப்பகுதிக்கான முழு வருமானம்						71,383,395	71,383,395
வருமான ஒதுக்க திருத்தம்						(107,443,799)	
2017 டிசம்பர் 31இல் மீதி		**307,386,085**	**19,997,092**	**14,421,999**		**(36,060,404)**	**305,744,772**

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்
தொழிற்பாடுகளின் காசுப்பாய்ச்சல்

(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளன.)

விபரம்	2017		2016	
தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்				
வரி மற்றும் வட்டிக்கு முந்திய தேறிய இலாபம்		74,556,031		50,960,289
பின்வருவனவற்றுக்கான சீராக்கம் :				
அரச மானிய காலத்தேய்மானம்	(77,916,361)		(67,476,968)	
திருகோணமலை மானிய	(155,406,674)		(155,406,674)	
காலத்தேய்மானம்	62,529,891		45,687,595	
தேய்வு - திருகோணமலை	159,297,421		158,236,740	
பணிக்கொடை ஏற்பாடு	25,814,868		21,300,257	
ஐயக்கடன் ஏற்பாடு	5,361,316		5,743,906	
சேலாவணி இலாபம் / நட்டம	129,895		265,004	
குத்தகை வட்டி			176,345	
ESC	3,398,792	23,209,146	916,796	9,443,001
		97,765,177		60,403,290
வருமான ஒதுக்க சீராக்கம் (குறிப்பு - 19)		(362,500)		867,406
செயற்படு மூலதன மாற்றத்திற்கு முன் தொழிற்பாட்டு இலாபம				
இருப்பு அதிகரிப்பு / குறைவு	(1,769,599)		1,121,071	
வணிக மற்றும் ஏனைய வருமதிகள் அதிகரிப்பு / குறைவு	(12,217,155)		(41,105,579)	
வழிச்சரக்கு அதிகரிப்பு / குறைவு	(62,689,709)		(25,660,928)	
வணிக மற்றும் ஏனைய சென்மதிகளஅதிகரிப்பு / குறைவு	8,487,821		22,362,706	
நிதி அல்லாத பொறுப்புகள் அதிகரிப்பு / குறைவு	(30,038,536)	(98,227,178)	30,409,515	(12,873,215)
செலுத்திய பணிக்கொடை செலுத்திய வரி		(42,492,960)		(19,039,367)
செயற்பாட்டு நடவடிக்கைகளின் தேறிய காசு		(43,317,461)		29,358,114
முதலீட்டு நடவடிக்கைகளில் காசுப்பாய்ச்சல்				
அரச மானியம் (மூலதனம்)				
ஆதனங்கள், பொறிகள் உபகரணங்கள் கொள்வனவு	185,612,000		165,629,400	
நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூலதன வேலைகள	28,696,671			
	(86,952,149)		(67,720,498)	
	(52,606,237)		(53,946,740)	34,962,162
		74,750,285		
முதலீட்டுச் செயற்பாடுகளில் பயன்படுத்திய தேறிய காசு				
நிதிச் செயற்பாடுகளில் காசுப்பாய்ச்சல்			(4,885,634)	
வாடகைக் கொடுப்பனவு		-		(4,885,634)
காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றில் தேறிய அதிகரிப்பு / குறைவு		31,432,824		59,434,642
காலப்பகுதி ஆரம்பத்தில் காசும் காசுக்குச் சமமானவையும்		320,286,094		260,851,452
காலப்பகுதி இறுதியில் காசும் காசுக்குச் சமமானவையும் **(குறிப்பு 13)**		**351,718,918**		**320,286,094**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

1. பொதுவான தகவல்கள்

1.1. அறிக்கையிடும் அமைப்பாண்மை

1966 இன் 37 ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டுள்ள இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பதிவுசெய்த அலுவலகம் கொழும்பு 07, சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ளதோடு அதன் பிரதான தொழில்முயற்சி நிலையம் கொழும்பு 07 சுதத்திர சதுக்கத்தில் அமைந்துள்ளது.

1.2. பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் பிரதான செயற்பாடாக அமைந்தது ஒலிபரப்பு நேரத்தை விற்பனை செய்வதாகும்.

1.3 வெளியிடுவதற்கான அதிகாரம் அளிக்கப்பட்ட திகதி

2017 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுகள் 2018 மார்ச்சு 23 ஆந் திகதி அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டது.

1.4 பதவியணி

ஆண்டின் இறுதியில் நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை 803 ஆகும்.
ஆண்டின் இறுதியில் ஒப்பந்த ஊழியர்களின் எண்ணிக்கை 85 ஆகும். (2016.12.31-921)

2. தயாரித்தலுக்கான அடிப்படையும் இலங்கை நிதிசார் அறிக்கையிடலுக்கான நியமங்களை பிரயோகித்தலும்

இலங்கை பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இ.க.நி.) மற்றும் 1995 இன் 19 ஆம் இலக்கமுடைய இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனம் தனது நிதிக்கூற்றுகளை தயாரித்துள்ளது.

இலங்கை பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவனம், இலங்கை கணக்கீட்டு நியமங்கள் புதிய தொகுதியை வெளியிட்டுள்ளதோடு 2012 ஜனவரி 01 ஆந் திகதியில் இருந்தோ அதன் பின்னர் தொடங்குகின்ற வருடத்திற்காக அமுலுக்கு வரத்தக்கதாக தொழில்முயற்சிகள் இந்த நியமங்களை பிரதியீடுசெய்தல் அவசியப்படுத்தப்படுகின்றது.

3.1 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

இந்த நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கையில் பிரயோகித்த அடிப்படை கணக்கீட்டுக்கொள்கைகள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன. வேறுவிதமாக குறிப்பிடப்பட்டிருந்தாலேயொழிய இந்த கொள்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து வருடங்களுக்கும் தொடர்ச்சியாக பிரதியீடு செய்யப்பட்டுள்ளன.

பக்கம் 05 தொடக்கம் 23 வரை காட்டப்பட்டுள்ள குறிப்புகள் இந்த நிதிக்கூற்றுகளின் முழுமையான பகுதியை ஆக்குகின்றது.

3.1.1 தயாரித்தலுக்கான அடிப்படை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுகள் இலங்கை நிதிசார் அறிக்கையிடல் நியமங்களுக்கு அமைவாகவே தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக்கூற்றுகள் வரலாற்றுக்கிரய மற்றும் பின்னர் தெளிவுபடுத்தியுள்ள பிற திட்டவட்டமான அளவீடுகளின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுகள் மீது தாக்கமேற்படுத்துகின்ற பணவீக்கம்சார்ந்த காரணிகளுக்கான சீராக்கல்கள் மேற்கொள்ளப்படவில்லை.

இலங்கை நிதிசார் அறிக்கையிடலுக்கு அமைவாக நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கும்பொருட்டு தீர்வுக்கட்டமான கணக்கீட்டு மதிப்பீடுகளை பாவிக்கவேண்டியது அவசியமாகும். அத்துடன் கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளை பிரதியீடு செய்யும் செயற்பாங்கில் முகாமைத்துவம் தனது தீர்ப்பினை செயற்படுத்தவேண்டியது அவசியமாகும்.நிதிக்கூற்றுகள் மீது ஊகங்கள் மற்றும் மதிப்பீடுகள் முக்கியமானவையாக அமைகின்ற 04 துறைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அதில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அறிக்கை செய்யப்பட்டுள்ள அளவுகள் மற்றும் நிதிசார் அறிக்கையிடல் திகதியில் எதிர்பாராத சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை வெளிப்படுத்துதல் மற்றும் அறிக்கையிடல் காலப்பகுதிக்குள் வருமானம் மற்றும் செலவுகளின் அளவுகள் பற்றிய அறிக்கைகளும் அடங்கும். நிகழ்கால சம்பவங்கள் மற்றும் செயற்பாடுகள் பற்றி முகாமைத்துவத்தின் உச்சஅளவிலான அறிவினை இந்த மதிப்பீடுகள் அடிப்படையாகக்கொண்டபோதிலும் இறுதியில் உண்மையான பெறுபேறுகள் இந்த மதிப்பீடுகளைப் பார்க்கிலும் மாறக்கூடும்.

3.1.2 இடையறாத வழியுரிமை

நடப்புத் தொழில்முயற்சி என்றவகையில் இடையறாமல் ஓர், இருப்பினைக் கொண்டிருப்பதற்குகூட்டுத்தாபனம்கொண்டுள்ள ஆற்றல் பற்றி பணிப்பாளர்சபை மதிப்பீடொன்றை செய்துள்ளதோடு கலைக்கவோ அல்லது வர்த்தக செயற்பாடுகளை நிறுத்திவிடவோ கருதுவது கிடையாது.

3.1.3 ஐந்தொகைத் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

ஐந்தொகை திகதிக்குப் பின்னர் இடம்பெற்ற பொருண்மைரீதியான அனைத்து நிகழ்வுகளையும் பரிசீலனைசெய்து அவசியமான இடங்களில் நிதிக்கூற்றுகளில் சீராக்கங்களை செய்தல் அல்லது வெளிப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

3.1.4 ஒப்பீட்டுரீதியான தகவல்கள்

கூட்டுத்தாபனத்தினால் தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் வேறுவிதமாக குறிப்பிடப்பட்டிருந்தாலேயொழிய முந்திய வருடத்தின் கொள்கைகளுடன் தொடர்ச்சியானதாக அமைகின்றன. நடப்பு வருடத்தின் சமர்ப்பித்தல்களுடன் அமைந்தொழுகக்கூடியவகையில் அவசியமான இடங்களில் முந்திய வருடத்தின் எண்ணிக்கைகள் மீண்டும் தயாரிக்கப்பட்டுள்ளன.

3.1.5 வெளிநாட்டுப் புழக்கத்திலுள்ள பணம்

(அ) நடைமுறைசார்ந்த மற்றும் சமர்ப்பித்தலிலான புழக்கத்திலுள்ள பண அலகு

அமைப்பாண்மை இயங்குகின்ற முதனிலை பொருளாதார சுற்றாடலின் பண அலகினை (நடைமுறைசார்ந்த பண அலகு) பயன்படுத்தியே கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுகளில் உள்ளடங்கிய வகையினங்கள் அளக்கப்படுகின்றன. இந்த நிதிக்கூற்றுகள் கூட்டுத்தாபனத்தின்மற்றும் சமர்ப்பித்தலிலான பண அலகான இலங்கை ‘ரூபாவிலேயே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(ஆ) வெளிநாட்டில் புழக்கத்திலுள்ள பணக் கொடுக்கல் வாங்கல்களும் மீதியும்

வெளிநாட்டுப் புழகத்திலுள்ள கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்ட திகதிகளில் நிலவிய செலாவணி வீதம் அல்லது வகையினம் அளக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களிலான பெறுமதியைப் பிரயோகித்து நடைமுறைசார்ந்தபண அலகிற்கு மாற்றப்படுகின்றன. அத்தகைய கொடுக்கல் வாங்கல்களை தீர்ப்பதன் விளைவாக மற்றும் வெளிநாட்டுப் பணத்தில் பெயர்சுட்டப்பட்டுள்ள நிதிச்சொத்துக்களும் பொறுப்புக்களும் ஆண்டிறுதி செலாவணி வீதங்களுக்கு மாற்றப்படுகையில் தோன்றுகின்ற அந்நிய செலாவணி இலாபம் அல்லது நட்டம் வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

பக்கம் 05 தொடக்கம் 23 வரை காட்டப்பட்டுள்ள குறிப்புகள் இந்த நிதிக்கூற்றுகளின் முழுமையான பகுதியை ஆக்குகின்றது.

3.2 ஏனைய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

3.2.1 சொத்துக்களும் அவற்றைஅளவீடுசெய்கின்ற அடிப்படையும்

காசு மற்றும் கூட்டுத்தாபனத்தின் தொழில்முயற்சி நடவடிக்கைகளின் பொதுவான தொழிற்பாட்டு வட்டத்திற்குள்ளே அல்லது ஐந்தொகை திகதியில் இருந்து ஒரு வருடத்திற்குள் ஆகிய இரண்டில் மிகவும் குறுகிய காலப்பகுதியில் காசாக தேறக்கூடியவையே ஐந்தொகையில் நடைமுறை பொறுப்புகளாக வகைப்படுத்தப்பட்டுள்ள சொத்துக்கள் ஆகும்.

3.2.1.1 ஆதனம், சாதனம் மற்றும் பொறித் தொகுதி

காணிகளும் கட்டடங்களும் அடிப்படையில் தலைமையகம், பிரதேச மற்றும் ஒலிபரப்புநிலையங்களையே உள்ளடக்குகின்றன. அனைத்துவிதமான ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகள் வரலாற்றுக்கிரயத்தின் அடிப்படையிலேயே வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ஆதனம்,சாதனம் மற்றும் பொறித்தொகுதிகள் கிரயம் என்பது கையேற்றல் மற்றும் நிர்மாணித்தல் கிரயத்துடன் எதிர்பார்த்த குறிக்கோளுக்காக சம்பந்தப்பட்ட சொத்துக்களை இயங்கும் நிலைக்கு கொண்டுவர கூறப்பட நேரிடுகின்ற இடைநேர்விளைவான செலவுகளுமாகும். சொத்துக்களின் ஈட்டல் கொள்திறனை தொடர்ச்சியாக பேணிவர அல்லது மேம்படுத்தும் பொருட்டு நிரந்தர இயல்புகொண்ட சொத்துக்களை கையேற்றல்,விரிவாக்குதல் அல்லது விருத்திசெய்வதற்காக கூறப்பட்ட மூலதனச் செலவினமாக கருதப்படும். ஏனைய அடுத்தடுத்த கிரயம் சொத்தின்

கொண்டுசெல்லல் பெறுமதிக்கு உள்ளடக்கப்படுவது அல்லது தனிவேறான சொத்தாக ஏற்பிசைவு செய்யப்படுவது அந்த வகையினத்தில் அடங்கிய எதிர்கால பொருளாதார நன்மைகள் கம்பெனியை நோக்கி பாய்ந்துவருவதற்குள்ள இயலுமைகள் இருப்பின் மற்றும் கிரயத்தை நம்பிக்கையுள்ள வகையில் அளக்க இயலுமாயின் மாத்திரமே ஆகும்.

3.2.1.2 மறுசீரமைப்புக் கிரயம்

தொடக்கத்தில் மதிப்பீடுசெய்யப்பட்டசெயலாற்றுகை நியமங்களால் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நன்மைகளை இயல்புநிலைக்கு கொண்டுவர அல்லது பேணிவரும்பொருட்டு ஆதனம்,சாதனம் மற்றும் பொறித்தொகுதியை திருத்தியமைக்க அல்லது பராமரிப்பதற்காக கூறப்பட்ட செலவானது அத்தகைய செலவு கூறப்பட்ட சந்தர்ப்பத்தில் ஒரு செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படும்.

3.2.1.3 தேய்மானம்

காணிகள் தேய்மானம் செய்யப்படுவதில்லை. அனைத்துவிதமான ஆதனம்,சாதனம் மற்றும் பொறித்தொகுதிகளின் கிரயம் அல்லது மதிப்பீட்டின் பேரில் எளிய நேர்கோட்டு அடிப்படையிலேயே தேய்மானத்திற்கான ஏற்பாடுகள் கணிக்கப்பட்டுள்ளன. இதன்பொருட்டு பிரயோகித்த பிரதானமான வருடாந்த வீதங்களாக அமைவன :

கட்டடங்கள்	2.5%
சாதனமும் பொறித்தொகுதியும்	7.5%
செவிப்புல மீடிறன் உபகரணங்கள்	7.5%
தளபாடம், பொருத்திகள் மற்றும் உபகரணங்கள்	10%
ஒலிபரப்புக் கருவி	7.5%
மோட்டார் வாகனம்	25%
வாத்தியக் கருவிகள்	10%
கணினி உபகரணம்	50%
ஒலிப்பதிவு நாடாக்கள்	33.33%
சிறிய கருவிகள்	50%

ஒவ்வோர் அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதியிலும் உசிதமெனில் சொத்தின் எச்சப் பெறுமதி பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் தேய்மானம் கழிக்கும் முறையில் மீளாய்வுசெய்து சீராக்கப்படும்.

சொத்தொன்றின் கொண்டுசெல்லல் பணத்தொகை அதன் மதிப்பிடப்பட்ட அறவிடக்கூடிய பணத்தையும்விட அதிகரிக்குமாயின் அது உடனடியாக அதன் அறவிடக்கூடிய பணத்தொகைக்கு பதியப்படும்.

ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி விற்றொழித்தல் மீதான இலாபம் அல்லது நட்டம் அவற்றின் கொண்டுசெல்லல் பெறுமானத்துடன் சார்புரீதியாகவே நிர்ணயிக்கப்படுவதோடு தொழிற்பாட்டு இலாபத்தை நிர்ணயிக்கும்போது கவனத்திற் கொள்ளப்படும். மீள்கணிப்பீடு செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றவிடத்து ஏனைய ஒதுக்கங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பெறுமதி தடுத்துவைத்த ஈட்டல்களுக்கு மாற்றப்படும்.

3.2.2 முடிவுறாத மூலதன வேலைகள்

முடிவுறாத மூலதன வேலைகள் என்பது சொத்தொன்றை நிர்மாணிக்க நேரடியாக சார்ந்த பொருள்ரீதியான கிரயமும் ஏனைய கிரயங்களுமே ஆகும். முடிவுறாத வேலைகள் அவை முழுமையாக நிறைவுசெய்யப்பட்டவிடத்தும் அதன் எதிர்பார்த்த பாவனைக்காக தயார்நிலையில் உள்ளவிடத்தும் சம்பந்தப்பட்ட சொத்துக்கள் கணக்குகளுக்கு மாற்றப்படும்.

3.2.3 நிதிசார் சொத்துக்கள்

3.2.3.1 வகைப்படுத்தல்

3.2.3.2 கடனும் வருமதிகளும்

கடனும் வருமதிகளும் முனைப்பான சந்தையில் விலைகளை சமர்ப்பித்திராத நிலையான மற்றும் திட்டவட்டமான கொடுப்பனவினைக்கொண்டு பெறுதியற்ற நிதிச்சொத்துக்களாகும். அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதியில் 12 வாதங்களுக்கு மேற்பட்ட பருவமுதிர்வுக்கான நீங்கலாக அவை நடைமுறைச் சொத்துக்களில் உள்ளடக்கப்படும். இவை நடைமுறையல்லாச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படும். கூட்டுத்தாபனத்தின் கடனும்

வருமதிகளும் ஐந்தொகையில் "வர்த்தக மற்றும் பிற வருமதிகள்" மற்றும் காசும் காசுக்கு சமமானவையும் "என்பதை உள்ளடக்கியதாகும். (குறிப்பு 3.8 மற்றும் 3.9)

3.2.5.4 ஏற்பிசைவு செய்தலும் அளவீடு செய்தலும்

இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதிக்கு காட்டப்படுகின்ற நிதிச் சொத்துக்கள் தொடக்கத்தில் நியாயமான பெறுமதிக்கு ஏற்பிசைவு செய்யப்படுவதோடு கொடுக்கல் வாங்கல் கிரயமானது வருமானக்கூற்றில் செலவினமாக ஈடுசெய்யப்பட்டு காட்டப்படும். முதலீடுகளிலிருந்து காசுப்பாய்வு கிடைக்கின்ற உரிமை நிறைவடைந்துள்ளவிடத்து அல்லது உரித்துவத்தின் அனைத்து அபாயநேர்வுகளும் கணிசமான அளவில் கையளிக்கப்பட்டுள்ளவிடத்து நிதிச்சொத்துக்களை ஏற்பிசைவு செய்தல் முடிவுறுத்தப்படும். விற்பனைக்காக உள்ள நிதிச் சொத்துக்கள் மற்றும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு காட்டப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள் அடுத்தடுத்து நியாயமான பெறுமதியில் காட்டப்படும். பயனுறுதிமிக்க வட்டி முறையியனைப் பாவித்து கடனும் வருமதிகளும் மதிப்பிறக்கம்செய்த விலையில் காட்டப்படும்.

"இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதியில் காட்டப்பட்டுள்ள நிதிசார் சொத்துக்கள்" தொகுதியின் நியாயமான பெறுமதியின் மாற்றங்களிலிருந்து தோன்றுகின்ற இலாபம் அல்லது நட்டம் அவை தோன்றுகின்ற காலப்பகுதிக்குள் "ஏனைய (நட்டம்) / இலாபம் - நிகர" என்பதில் வருமானக்கூற்றில் சமர்ப்பிக்கப்படும்.

விற்பனைக்குள்ள நிதிச்சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்டுள்ள காசு மற்றும் காசு அல்லாத பிணையங்களில் நியாயமான பெறுமதியிலான மாற்றங்கள் ஏனைய விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும். விற்பனைக்காக உள்ள வகைப்படுத்தப்பட்ட பிணையங்கள் விற்பனை செய்யப்படுகின்றவிடத்து அல்லது சேதமேற்பட்டவிடத்து உரிமைப்பங்கில் ஏற்பிசைவு செய்யப்படுகின்ற திரண்ட நியாயமான பெறுமதியிலான சீராக்கங்கள் "முதலீட்டுப் பிணையங்களிலிருந்து இலாபம் அல்லது நட்டம்" என்றவகையில் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படும். பயனுறுதிமிக்க வட்டி முறையியனைப் பாவித்து கணிப்பிடப்படுகின்ற விற்பனைக்குள்ள பிணையங்களின்மீதான வட்டி பிற வருமானத்தின் ஒரு பகுதியாக வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

3.2.5.5 நிதிச்சொத்துக்களின் சேதஇழப்பு

(அ) மதிப்பிறக்கம்செய்த கிரயத்தில் காட்டப்படுகின்ற சொத்துக்கள்

ஒவ்வோர் அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதியிலும் நிதிச் சொத்துக்கள் அல்லது நிதிச் சொத்துக்கள் குழுமமொன்று சேதஇழப்பினை அடைவதற்கான பொருண்மைரீதியான சான்றுகள் உள்ளனவா என கம்பெனி மதிப்பீடு செய்கின்றது. சொத்துக்களின் ஆரம்ப ஏற்பிசைவுக்கு பின்னர் இடம்பெறுகின்ற தனியான அல்லது பல சம்பவங்களின் (சேதச் சம்பவம்) பெறுபேறாக சேதம் ஏற்பட்டுள்ளமைக்கான பொருண்மைரீதியான சான்றுகள் இருப்பின் மற்றும் மேற்படி சேதச் சம்பவம் (அல்லது சம்பவங்கள்) நிதிச் சொத்தில் அல்லது நிதிச் சொத்துக்கள் குழுமத்தில் மதிப்பீடுசெய்யப்பட்ட எதிர்கால காசுப்பாய்வுகளுக்கு நம்பிக்கைமிக்கதாக அளவிடக்கூடிய தாக்கத்தை ஏற்படுத்துமாயின் மாத்திரமே நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்துக்கள் குழுமமொன்று சேத இழப்பீடு நேரிட்டு சேத இழப்பினை ஏற்க நேரிடும்.

கடன்கொடுனர் அல்லது கடன்கொடுனர் குழுமமொன்று கணிசமான நிதிசார் வசதியினங்களை அனுபவித்து வருகின்றன என்பதற்கான உணர்த்தல்கள் அவர்கள் கடனிறுக்கவகையற்ற நிலைக்கு அல்லது வேறு ஏதேனும் நிதிசார் மறுசீரமைப்புக்கு வருவதற்கான நிகழ்தகவு மற்றும் தவற விடுதலுடன் தொடர்புபடுகின்ற நிலுவைப்பண மாற்றங்கள் அல்லது பொருளாதார நிலைமைகள் போன்ற மதிப்பீடுசெய்யப்பட்ட எதிர்கால காசுப்பாய்வுகளின் அளவிடக்கூடிய வீழ்ச்சிப்போக்கு உள்ளதென்பதை அவதானிக்ககூடிய தரவுகளை சுட்டிக்காட்டுதல் போன்றவை சேதம் பற்றிய சான்றுகளில் உள்ளடக்கப்படலாம்.

சொத்தின் கொண்டுசெல்லல் பணத்தொகைக்கும் நிதிச்சொத்தின் ஆரம்ப பயனுறுதிமிக்க வட்டி வீதத்திற்கு கழிவு வழங்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப் பாய்வுகளின் (ஏற்க நேர்ந்திராத எதிர்கால கடன் சேதம் நீங்கலாக) நிகழ்கால பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசமாகவே கடனும்

வருமதிகளும் தொகுதிக்காக சேதத்தின் அளவு அளவீடுசெய்யப்படுகின்றது. ஒருங்கிணைந்த வருமானக்கூற்றில்சொத்தின்கொண்டுசெல்லல் பணத்தொகை கழிக்கப்பட்டு நட்டத்தின் அளவு ஏற்பிசைவு செய்யப்படும். ஏதேனும் கடனின் அல்லது பருவமுதிர்வுவரை தடுத்துவைத்த முதலீட்டின் மாறுகின்ற கடன் வீதம் இருப்பின் ஏதேனும் சேத நட்டத்தை அளவீடு செய்வதற்கான கழிவு வீதமாக அமைவது உடன்படிக்கையின்கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிகழ்காலத்தில் அமுலில் உள்ள வட்டி வீதமாகும். நடைமுறைச்சாத்தியமான வழிமுறையென்ற வகையில் அவதானிக்கக்கூடிய சந்தை விலையைப் பிரயோகித்து சாதனமொன்றின் நியாயமான பெறுமதியை அடிப்படையாகக்கொண்டு கூட்டுத்தாபனம் சேதத்தை அளவீடுசெய்ய இடமுண்டு.

அடுத்தடுத்த காலப்பகுதியொன்றில் சேத நட்டத்தின் அளவு குறைவடைந்து மேற்படி குறைவடைதல் சேதமடைவதை ஏற்பிசைவு செய்தபின்னர் இடம்பெற்ற சம்பவமொன்றுடன்பொருண்மைரீதியாகசம்பந்தப்படுமாயின் (கடன்கொடுனரின் கடன் தரப்படுத்தல் விருத்தியடைதல் போன்ற) முன்னர் ஏற்பிசைவுசெய்த சேதநட்டத்தின் மீள்கணிப்பீடு வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

3.2.5.6 வர்த்தக மற்றும் பிற வருமதிகள்

வர்த்தக வருமதிகள் எதிர்பார்த்த தேறக்கூடியபெறுமதியில் காட்டப்படும். வருமதிகள் பற்றிய ஆரம்ப விதிமுறைகளின் பிரகாரம் அறவிடப்படவேண்டிய அத்தனை பணத் தொகைகளையும் கூட்டுத்தாபனத்தினால் சேகரித்துக்கொள்ள இயலாமல் போகக்கூடுமென்பதற்கான பொருண்மையான சான்றுகள் உள்ளவிடத்து வர்த்தக வருமதிகளின் சேதங்களுக்கான ஏற்பாடுகள் நிறுவப்படும். கடன்படுனர் எதிர்நோக்குகின்ற கணிசமான நிதி வசதியீனங்கள், கடன்படுனர் கடனிறுக்க வகையற்றுப்போதல் அல்லது நிதிசார் மறுசீரமைப்புக்காக உள்ள வாய்ப்புகள் போன்ற வர்த்தக வருமதிகள் பலவீனமடைந்துள்ளமைக்கான குறிகாட்டிகளாக கருதப்படும். கொடுப்பனவுக் கணக்கொன்றை பாவிப்பதன் மூலமாக சொத்தின் கொண்டுசெல்லல் செலவு குறைக்கப்படுவதோடு விபரமான வருமானக்கூற்றின் விநியோக கிரயத்திற்குள் நட்டப்பணத்தொகை ஏற்பிசைவு செய்யப்படும்.வர்த்தக வருமதியொன்றை சேகரித்துக்கொள்ள இயலாமல் போகின்றவிடத்து வருமதியான வர்த்தக பணத்தொகைக்கான கொடுப்பனவுக் கணக்கிலிருந்து அது பதிவழிக்கப்படும். ஏற்கெனவே பதிவழித்த பணத்தொகை அடுத்தடுத்து மீள்அறவீடுசெய்யும் விபரமான வருமானக் கூற்றில் விநியோகக் கிரயத்தில் வரவுவைக்கப்படும்.

வர்த்தக வருமதிகள் ஆரம்பத்தில் நியாயமான பெறுமதிக்கு ஏற்பிசைவு செய்யப்படுவதோடு அதன்பின்னர் அவை சேதமடைவதற்கான ஏற்பாடுகளைக் கழித்த பின்னர் பயனுறுதிமிக்க வட்டி முறையினைப் பாவித்து இலதாக்கப்பட்ட கிரயத்திற்கு அளவிடப்படும்.

3.2.6 கையிருப்புகள்

சரக்குத் தொக்குகள் மிகவும் குறைந்த கிரயத்தில் அல்லது நிகர தேறிய பெறுமதியிலேயே வெளிப்படுத்தப்பட்டுள்ளன. நிகர தேறிய பெறுமதி என்பது பொதுவான தொழில்முயற்சி மதிப்பீட்டு நிறைவுசெய்தலை அல்லது விற்பனை செலவினைக் கழித்தபின்னர் மதிப்பீடு செய்யப்பட்ட விற்பனை விலையாகும்.

3.2.7 காசு மற்றும் காசுக்கு சமமானவை

காசுப்பாய்வு பற்றிய ஒருங்கிணைந்த கூற்றுகளில் காசு மற்றும் காசுக்கு சமமானவற்றில் கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள காசு, அழைப்பு வைப்புகள், மூன்று மாதங்கள் அல்லது அதனைவிடக் குறைவான பருவ முதிர்வுகொண்ட ஏனைய குறுங்கால உயர் திரவத்தன்மைகொண்ட முதலீடுகளும் வங்கி மேலதிகப்பற்றும் அடங்கும். நிதிநிலைமை பற்றிய கூற்றில் வங்கி மேலதிகப் பற்றானது நடைமுறை பொறுப்பில் கடனெடுத்தலாகவே காட்டப்படுகின்றது.

3.2.8 கடனெடுத்தல் கிரயம்

அவற்றின் எதிர்பார்த்த பாவனைக்கு அல்லது விற்பனைக்காக தயாராவதற்காக அவசியமாகவே கணிசமான காலவரையறையை எடுக்கின்ற சொத்துக்களான “தகைமை பெறுகின்ற சொத்துக்கள்” கையேற்றல், நிர்மாணிப்பு அல்லது உற்பத்திக்கு நேரடியாக உடைமையாக்கிய சராசரி அல்லது திட்டவட்டமான கடனெடுத்தல் கிரயம், மேற்சொன்ன சொத்துக்கள் அவற்றின் எதிர்பாரத்த பாவனைக்கு அல்லது விற்பனைக்கு முழுமையாக தயாராகின்ற காலம்வரை மேற்படி சொத்துக்களின் கிரயத்தில் சேர்க்கப்படும்.

திட்டவட்டமான கடனெடுத்தல்களின்போது தற்காலிக முதலீட்டின் பேரில் ஈட்டப்பட்ட வருமானம், தகைமை பெறுகின்ற சொத்தின்மீது அவற்றின் செலவுகள் தீர்மானிக்கப்படும்வரை மூலதனமயமாக்கலுக்காக தகைமைகொண்டுள்ள கடனெடுத்தல்கள் கிரயத்திலிருந்து கழிக்கப்படும்.

ஏனைய அனைத்துக் கடனெடுத்தல் கிரயங்களும் அவை கூறப்படுகின்ற காலஎல்லைக்குள் இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

3.2.8 நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரிகள்

இந்த காலப்பகுதிக்குள் வரிச்செலவுகள் நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரிகளையே உள்ளடக்குகின்றன. ஏனைய விரிவான வருமானங்களில் அல்லது நேரடியாகவே பங்குகளில் கணக்கிடப்படுகின்ற வகையினங்களுக்கு அவை ஏற்புடைத்தாகின்ற அளவு தவிர்ந்த எஞ்சிய அளவுக்கே வருமானக் கூற்றில் வரிகள் ஏற்பிசைவு செய்யப்படும். இதன்போது முறையே ஏனைய விரிவான வருமானங்களில் அல்லது நேரடியாக பங்குகளிலும் வரி கணக்கிடப்படும்.

அ) நடைமுறை வரிவிதிப்பு

2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு, இறைவரி சட்டத்தினதும் அதற்கான திருத்தங்களினதும் ஏற்பாடுகளுக்கிணங்க கம்பெனிக்கு நடைமுறை வரி பொறுப்புக்கள் தோன்றும். உண்மையான பொறுப்புகளை பிரதிபலிப்பதாக முகாமைத்துவம் நம்புகின்ற மேற்படி ஏற்பாடுகளை பிரயோகித்து நிதிக்கூற்றுகளில் இந்த பொறுப்புகளுக்கான ஏற்பாடுகள் வழங்கப்படும். கொடுக்கல் வாங்கல்கள் பற்றி கூட்டுத்தாபனத்தினால் எடுக்கப்பட்ட நிலைப்பாடு வருமான அதிகாரிகளால் ஆட்சேபனைக்கு உள்ளாக்கப்படுகின்ற சந்தர்ப்பங்கள் இருக்கக்கூடும். இந்த விடயங்கள் காரணமாக தோன்றுகின்ற ஏதேனும் மேலதிக கிரயம் கூட்டுத்தாபனம் மீதான பொறுப்பினை உறுதிசெய்கின்ற சந்தர்ப்பத்தில் வரிச் செலவாக கணக்குப்பதியப்படும்.

வருமான அதிகாரசபைக்கு மீள் அறவீடுசெய்துகொள்ள அல்லது செலுத்த எதிர்பார்க்கின்ற அளவுகளிலேயே நடப்பு வருடத்திற்காகவும் முந்திய காலஎல்லைகளுக்காகவும் நடைமுறை வரிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் அளவிடப்படுகின்றது. அளவினைக் கணிப்பிடுவதற்காக பாவித்த வரி வீதம் அல்லது வரிச் சட்டமாக அமைவது ஐந்தொகை திகதியாகும்வேளையில் சட்டமாக்கப்படுகின்ற அல்லது தனியியலாக விதிக்கப்படுகின்றவையாகும். நடைமுறை வரிக்கான ஏற்பாடுகள் நிதிக்கூற்றுகளில் அறிக்கை செய்யப்பட்டுள்ளவாறு வருமானம் மற்றும் செலவு அம்சங்களை அடிப்படையாகக்கொண்டே செய்யப்படுகின்றன.

ஆ) பிற்போடப்பட்ட வரிவிதிப்பு

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரி அடிப்படை மற்றும் நிதிசார் அறிக்கையிடல் பணிகளுக்காக அவற்றின் கொண்டுசெல்லல் பெறுமதிக்கும் இடையில் ஐந்தொகைத் திகதியில் உள்ள தற்காலிக வித்தியாசங்களின் பேரில் ஐந்தொகை முறையினைப் பாவித்து பிற்போடப்பட்ட வரி ஏற்பிசைவு செய்யப்படும். தொழில்முயற்சி கலவையற்ற மற்றும் கணக்கீட்டுக்கு அல்லது வரி அறவிடத்தக்க இலாபத்தில் தாக்கமேற்படாத கொடுக்கல் வாங்கல் ஒன்றுக்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் தொடக்க ஏற்பிசைவினால் தோன்றுகின்ற தற்காலிக வித்தியாசங்கள் மற்றும்எதிர்காலத்தில மீள்கணிப்பீடு செய்யப்படாதிருக்க இடமுள்ள அளவுக்கு முதலீடுகளை சார்ந்த வித்தியாசங்களுக்காக பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகள் ஏற்பிசைவு செய்யப்படமாட்டாது. அதற்கு மேலதிகமாக நற்பெயர் தொடக்க ஏற்பிசைவின்பேரில் தோன்றுகின்ற வரிஅறவிடக்கூடிய தற்காலிக வித்தியாசங்களுக்காகவும் பிற்போடப்பட்ட வரிப்பொறுப்புகள் ஏற்பிசைவு செய்யப்படமாட்டாது. அறிக்கையிடல் தகுதியாகும்வேளையில் விதிக்கப்பட்டுள்ள அல்லது தனியிலாக விதிக்கப்பட இடமுள்ள சட்டங்களின் அடிப்படையில் தற்காலிக வித்தியாசங்கள் மீள்கணிக்கப்படுகையில் பிரயோகிக்க எதிர்பார்க்கின்ற வரி வீதங்களுக்கு பிற்போடப்பட்ட வரி கணிப்பிடப்படும். நடைமுறை வரிப் பொறுப்புகள் மற்றும் சொத்துக்களை எதிரீடு செய்வதற்காக சட்டமுறையாக அமுலாக்கவேண்டிய உரித்துவம் இருப்பின் மேற்படி வரியை அறவிடக்கூடிய அமைப்பாண்மைக்கு அது வரி அதிகாரசபையினாலேயே அறவிடப்படுகின்ற வருமான வருமான வரிகளுக்கு அவை ஏற்புடையதாயின் பிற்போடப்பட்ட வரிச்சொத்துக்களும் பொறுப்புக்களும் எதிரீடுசெய்யப்படும்.

தற்காலிக வித்தியாசங்களின் பயன்பாட்டுக்காக பிரயோகிக்கக்கூடிய எதிர்கால வரி அறவிடக்கூடிய இலாபம் தோன்றும்வரை மாத்திரமே பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஏற்பிசைவு செய்யப்படும். ஒவ்வோர் அறிக்கையிடல் திகதியிலும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மீளாய்வு செய்யப்படுவதோடு இணைந்த வரி நன்மைகள் தேறுதல் தொடர்ந்தும் இடம்பெற இயலாத அளவுக்கு குறைக்கப்படும்.

3.2.10 ஊழியர் நன்மைகள்

3.2.10.1 இளைப்பாற்று நன்மைக் கடப்பாடுகள்

அ) குறித்துரைத்த நன்மைகள் திட்டம் - இளைப்பாற்று பணிக்கொடை ஏற்பாடுகள்

குறித்துரைத்த நன்மைத் திட்டம் என்பது குறித்துரைத்த பங்களிப்புத் திட்டம் நீங்கலாக தொழிலுக்கு பிற்பட்ட நன்மைத் திட்டமாகும். குறித்துரைத்த நன்மைத்திட்டம் தொடர்பான நிதிக்கூற்றில் எற்பிசைவு செய்யப்படுகின்ற பொறுப்பாக அமைவது அறிக்கையிடல் திகதியில் குறித்துரைத்த கடப்பாடுகளின் நிகழ்காலப் பெறுமதியாகும். குறித்துரைத்த நன்மைக் கடப்பாடுகள் எதிர்வுகூறப்பட்ட அலகுக்கடன் முறையினைப் பாவித்தே கணிக்கப்படும். குறித்துரைத்த நன்மைக்கடப்பாட்டின் நிகழ்காலப் பெறுமதியானது மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால நிதிப்பாய்ச்சலுக்கு கழிவுசெய்த பின்னரே நிர்ணயிக்கப்படும்.

நன்மைகள் செலுத்தப்படுகின்ற பண அலகுகளின் மற்றும் இணைப் பொறுப்புக்களின் கால எல்லைகளுக்கு கிட்டியதாக அமைகின்ற பருவமுதிர்வு காலஎல்லைகளைக்கொண்ட வட்டி வீதத்தைப் பயன்படுத்தி நன்மைகள் செலுத்தப்படும்.

இளைப்பாற்று நன்மைக்கிரயம் பற்றி இலங்கை கணக்கீட்டு நியமம் 16 (2006 திருத்தம்) உடன் அமைந்தொழுகத்தக்கவகையில் நிரந்தர ஊழியர்கள் அனைவருக்காகவும் சேவையின் முதலாவது வருடம் நிறைவடைந்ததிலிருந்து இளைப்பாற்று நன்மைக்கான எற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தல் சட்டத்தின்படி தொடர்ச்சியாக ஐந்து வருட சேவைக்காலத்தை நிறைவுசெய்தால் மாத்திரமே ஊழியர் சம்பந்தமான பொறுப்பு தோன்றுகின்றது. பொறுப்புகளுக்காக வெளிவாரி நிதியங்கள் வழங்கப்படுவது கிடையாது.

இந்த பொறுப்புகளுக்காக வெளிவாரி நிதியங்கள் வழங்கப்படுவது கிடையாது. ஆயுட்கணிப்பாளரின் பிரதான ஊகத்தில் பின்வரும் விடயங்களும் அடங்குகின்றன.

(1) 11% வட்டி வீதம்

(2) 5% சம்பள ஏற்ற வீதம்

(3) அனைத்து ஊழியர்களினதும் இளைப்பாறும் வயது - 60 வருடங்கள

(ஆ) குறித்துரைத்த பங்களிப்புத் திட்டங்கள் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்

ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்புத்தொகை மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் பங்களிப்புத்தொகை என்பவற்றுக்காக தகைமைகொண்ட அனைத்து ஊழியர்களும் இந்தந்த பட்டயங்கள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் சம்பந்தப்பட்ட பங்களிப்பு நிதியங்களில் உள்ளடக்கப்படுகின்றனர். குறித்துரைத்த பங்களிப்புத் திட்டங்களுக்காக தொழில்தருனரின் பங்களிப்பு ஏற்கப்பட்டவிடத்து வருமானக்கூற்றில் செலவினமாக இனங்காணப்படும்.

3.2.11 அரசாங்கக் கொடை

கொடையுடன் சம்பந்தப்பட்ட நிபந்தனைகளுக்கு கூட்டுத்தாபனம் அமைந்தொழுகுகின்றதென்பதற்கும் கொடை கிடைக்கின்றதென்பதற்குமான நியாயமான உத்தரவாதம் இருப்பின் அரசாங்க கொடை அவற்றின் நியாயமான பெறுமதிக்கு ஏற்பிசைவு செய்யப்படும்.

கிரயத்துடன் தொடர்புடைய அரசாங்க கொடை பிற்போடப்படுவதோடு உத்தரவாதம்செய்ய எதிர்பார்க்கின்ற கிரயத்துடன் அவற்றை சீராக்கும்பொருட்டு அவசியமான காலப்பகுதி பூராவிலும் விபரமாக வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

ஆதனம், சாதனம், பொறித்தொகுதி மற்றும் உயிரியல் சொத்துக்களுடன் தொடர்புடைய கொடைகள் பிற்போடப்பட்ட வருமானமாக நடைமுறையல்லாப் பொறுப்புக்களில் உள்ளடக்கப்படுவதோடு இணைச் சொத்துக்களின் எதிர்பார்த்த ஆயுட்காலம் பூராவிலும் எளிமையான நேர்கோட்டு அடிப்படையில் வருமானக் கூற்றில் வரவு வைக்கப்படும்.

காலத்தேய்மான வீதங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

கட்டடங்கள்	2.5%
சாதனமும் பொறித்தொகுதியும்	7.5%
செவிப்புல அலைவரிசை உபகரணங்கள்	7.5%
தளபாடம், பொருத்திகள் மற்றும் உபகரணங்கள்	10%
ஒலிபரப்பிகள்	7.5%
மோட்டார் வாகனங்கள்	25%

3.2.12 ஏற்பாடுகள்

இறந்தகால சம்பவமொன்றின் பெறுபேறாக நிகழ்கால சட்ட மற்றும் உடன்பாடுசார்ந்த கடப்பாட்டினை கூட்டுத்தாபனம் கொண்டுள்ளவிடத்து மேற்படி கடப்பாடுகளை தீர்ப்பதற்காக பொருளாதார நன்மைகளை செயலுருப்படுத்திவளங்களின் பாய்ந்துசெல்லல் அவசியமாகக்கூடியவிடத்தும் கடப்பாட்டின் பெறுமதிக்கு நம்பிக்கைமிகுந்த மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளவிடத்து எற்பாடுகள் இனங்காணப்படும்.

3.2.13 எதிர்பாரா பொறுப்புகளும் எதிர்பாரா சொத்துக்களும்

எதிர்பராத பொறுப்பு என்பது கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதான எதிர்பாராத எதிர்கால சம்பவமொன்று அல்லது பல சம்பவங்கள் தோன்றுதல் அல்லது தோன்றாமை மூலமாக தனது வழியுரிமை நி'ரூபிக்கப்படுகின்ற கடந்தகால சம்பவங்கள் மூலமாக மேற்படி கடப்பாடுகளிலிருந்து விடுபடுவதற்காக வளங்கள் புறத்தே பாய்ந்து செல்வதற்கான இயலுமை இல்லையென்பதால் ஏற்பிசைவுசெய்யப்படாத நிகழ்காலக் கடப்பாடு தோன்றுவதற்கான இயலுமைகொண்டட கடப்பாடு ஆகும். நம்பிக்கைமிக்கதாக அளவிட இயலாத பொறுப்பொன்று நிலவுகின்ற மிகவும் பலவீனமான சந்தர்ப்பங்களிலும் பொறுப்பொன்று இனங்காணப்படாவிடினும் அத்தகைய ஒன்றின் வழியுரிமை நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்படுகின்றன. எதிர்பாராத பொறுப்பொன்றினை கூட்டுத்தாபனம் ஏற்பிசைவு செய்யாவிட்டாலும் அது நிலவுதல் நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்படும்.

எதிர்பராத சொத்து என்பது கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதான எதிர்பாராத எதிர்கால சம்பவமொன்று அல்லது பல சம்பவங்கள் தோன்றுதல் அல்லது தோன்றாமை மூலமாக தனது வழியுரிமை நி'ரூபிக்கப்படுகின்ற இறந்தகால சம்பவங்களிலிருந்து தோன்ற இடமுள்ள சொத்தாகும். கூட்டுத்தாபனம் எதிர்பாராத சொத்துக்களை இனங்காணாதபோதிலும் பொருளாதார நன்மைகள் உள்நோக்கி பாய்ந்துவருதல் இடம்பெறக்கூடிய போதிலும் அது உண்மையிலேயே நிரந்தரமானதாக அமையாத சந்தர்ப்பங்களில் அத்தகையவற்றின் வழியுரிமை வெளிப்படுத்தப்படுகின்றது.

3.2.14 வர்த்தக சென்மதிகள்

பொதுவான தொழில்முயற்சி அலுவல்களில் வழங்கலாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பண்டங்கள் அல்லது சேவைகளுக்காக செலுத்தப்படவேண்டிய கடப்பாடுகளே வர்த்தக சென்மதிகளாகும். செலுத்தப்பட வேண்டியது ஒரு வருடத்திற்குள் அல்லது அதற்கு குறைவான காலப்பகுதிக்குள் எனில் (அல்லது அதைப்பார்க்கிலும் காலம் நீண்டதாக அமையின் தொழில்முயற்சியின் பொதுவான தொழிற்பாட்டு வட்டத்தில்) சென்மதியான கணக்குகள் நடைமுறை பொறுப்பு என்றவகையில் வகைப்படுத்தப்படும்.

வர்த்தக சென்மதிகள் தொடக்கத்தில் நியாயமான பெறுமதிக்கு ஏற்பிசைவு செய்யப்படுவதோடு அதன் பின்னர் பயனுறுதிமிக்க வட்டி முறையினைப் பாவித்து இலதாக்கிய பெறுமதியில் அளக்கப்படும்.

3.2.15 நிதிக் குத்தகை கடப்பாடுகள்

குத்தகைபெற்ற வகையினங்களின் உரித்துவத்திற்கு இடைநேர்விளைவான அனைத்து அபாயநேர்வுகளும் நன்மைகளும் கணிசமான அளவில் கூட்டுத்தாபனத்திடம் கையளிக்கப்படுகின்ற நிதிக்குத்தகையின் பேரில் பெற்றுக்கொண்ட ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி குத்தகையின் தொடக்கத்தில் குத்தகைக்குப்பெற்ற ஆதனத்தின் நியாயமான பெறுமதியைப் பார்க்கிலும் குறைவானதாக அமையின் திரண்ட தேய்மானம் கழிக்கப்பட்டு தொடக்கத்தில் குறைந்தபட்ச குத்தகை செலுத்துதல் பெறுமதியின் நிகழ்கால பெறுமதிக்கு மூலதனமாக்கப்படும்.

செலுத்தவேண்டிய மொத்த வட்டி தொங்கல் வட்டியாக கணக்குப் பதியப்படும். நேரொத்த கடன் குத்தகை அளிப்பு பெறுனருக்கு செலுத்தவேண்டிய பணத்தொகையாக அறிக்கையிடப்படும். செலுத்திய தவணை பொறுப்பினை குறைப்பதற்காக பிரயோகிக்கப்படும்.

ஆண்டுக்காக அறவிடப்பட்ட வட்டி தொங்கல் கணக்கில் இருந்து வருமானக் கூற்றுக்கு மாற்றப்படும்.

3.2.16 வருமானக் கூற்று

3.2.16.1 வருமானத்தை ஏற்பிசைவு செய்தல்

கிடைத்த அல்லது வருமதியான கைம்மாறின் நியாயமான பெறுமதிக்கு இணங்க வருமானம் கணிப்பிடப்படுவதோடு வழங்கப்பட்ட சேவைக்காக வருமதியான பணத்தொகை சுட்டிக்காட்டப்படுவதோடு கழிவும் பெறுமதியும் சேர்பெறுமதி வரி கழிக்கப்பட்டுகுறிப்பிடப்படும். வருமானத்தின் அளவினை நம்பிக்கைமிக்கவகையில் அளவிடக்கூடியவிடத்து: எதிர்கால பொருளாதார நன்மைகள் கூட்டுத்தாபனத்தைநோக்கி பாய்ந்துவர வாய்ப்புள்ளவிடத்து: மற்றும் கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு செயற்பாட்டுக்காகவும் திட்டவட்டமான மூலப்பிரமாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளவிடத்து கூட்டுத்தாபனம் வருமானத்தை ஏற்பிசைவு செய்யும். கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு வாடிக்கையாளர் இனம், கொடுக்கல் வாங்கலின் இனம் மற்றும் ஒவ்வொரு தயாரிப்பினதும் திட்டவட்டமான தகவல்களை கவனத்திற்கொண்டு கூட்டுத்தாபனம் தனது நன்மை மதிப்பீடுகளுக்குவரலாற்றுரீதியான பெறுபேறுளை அடிப்படையாகக் கொள்கின்றது.

(அ) ஒலிபரப்புக்கால விற்பனை

வருமானம் ஒலிபரப்பு நேர விற்பனையை உள்ளடக்குகின்றது. வர்த்தக விளம்பரங்கள் ஒலிபரப்பப்படுகையில் ஒலிபரப்பு நேரத்தை விற்பனை செய்யும் வருமானம் ஏற்பிசைவு செய்யப்படும்.

(ஆ) வட்டி வருமானம்

சேகரித்துக்கொள்ளல் தொடர்பில் சந்தேகம் நிலவினாலேயன்றி கால அடிப்டையில் அட்டுறு வட்டி என்றவகையில் (சொத்தின் பயனுறுதிமிக்க விளைவினை கவனத்திற்கொண்டு) வட்டி வருமானம் எற்பிசைவு செய்யப்படும்.

(இ) ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி விற்றொழித்தல் மீதான நிகர இலாபம் மற்றும் நட்டம்

ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி விற்றொழித்தல் மீதான நிகர இலாபம் அல்லது நட்டத்தை நிர்ணயித்தலானது நிகர விற்பனை வருமானம் ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகளின் கொண்டுசெல்லல் பெறுமதியுடனான இணக்கஞ்செய்தலாக அமைவதோடு வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

ஈ) பிற வருமானம்

ஏனைய அனைத்து வருமானங்களும் அட்டுறு அடிப்படையிலேயே ஏற்பிசைவு செய்யப்படும்.

3.2.17.1 செலவுகளை ஏற்பிசைவுசெய்தல்

அ) தொழிற்பாட்டுச் செலவுகள்

கூறப்பட்ட கிரயம் மற்றும் திட்டவட்டமான வருமான வகையினத்தின் ஈட்டலுக்கு இடையிலான நேரடியான தொடர்பின் அடிப்படையிலேயே வருமானக் கூற்றில் செலவுகள் ஏற்பிசைவு செய்யப்படும்.தொழில்முயற்சியை பேணிவருகையிலும் வினைத்திறன்மிக்க நிலைமைக்குள்ளே ஆதனம்,சாதனம் மற்றும் பொறித்தொகுதியை பராமரிக்கையிலும் கூறப்படுகின்ற அனைத்துச் செலவுகளும் ஆண்டுக்கான இலாபத்தை / நட்டத்தை முடிவுசெய்கையில் வருமானத்திலிருந்து கழித்தே வருமானக்கூற்றில் செலவுகள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. அறவிடமுடியாத மற்றும் ஐயக்கடன், அறிந்த அனைத்துவிதமான பொறுப்புகள் மற்றும் ஆதனம்,சாதனம் மற்றும் பொறித்தொகுதியின்பேரில் தேய்மானத்திற்காகவும் எற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆ) நிதிசார் செலவுகள்

வட்டி வருமானம் அட்டுறு அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்படும். கடனெடுத்தல் கிரயம் அவை கூறப்பட்ட காலப்பகுதிக்குள் செலவினமான ஏற்பிசைவு செய்யப்படும்.

3.2.18 ஒப்பீட்டுரீதியான எண்ணிக்கைகள

ஆவசியமான சந்தர்ப்பங்களில் நடப்புவருடத்தில் செய்யப்படுகின்ற சமர்ப்பணங்களுடன் அமைந்தொழுகும்பொருட்டு ஒப்பீட்டுரீதியான எண்ணிக்கைகள் சீராக்கப்பட்டுள்ளன.

4. தீர்வுக்கட்டமான கணக்கீட்டு மதிப்பீடுகளும் தீர்ப்புகளும்

நிதிக்கூற்றுகளை தயாரிக்கையில் கணக்கீட்டுக் கொள்கைகளை பிரயோகித்தல்மீது தாக்கமேற்படுத்துகின்ற தீர்ப்பளிப்புகள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள் மற்றும் அறிக்கை செய்யப்பட்ட சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவினங்களும் அறிக்கையிடல் தினத்தில் எதிர்பாராத பொறுப்புக்களை வெளிப்படுத்துதல் போன்றவற்றை கவனத்திற்கொள்ள வேண்டியநிலை ஏற்படும். எவ்வாறாயினும் இந்த ஊகங்கள் மற்றும் மதிப்பீடுகள் பற்றிய நிச்சயமற்றதன்மை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் கொண்டுசெல்லல் பெறுமதியில் பொருண்மைரீதியான மாற்றங்களை தேவைப்படுத்துகின்ற பெறுபேறுகளை ஏற்படுத்தக்கூடும்.

தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அடிப்படையாக அமைந்த மதிப்பீட்டு வரலாற்றுரீதியான அனுபவங்கள் மற்றும் ஏனைய தோற்றுவாய்களிலிருந்து வசதியாக இனங்காண இயலாத சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் எதிர்பாராத கொண்டுசெல்லல் அளவு பற்றிய தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை மேற்கொள்கையில் அடிப்படையைத் தயாரித்துக்கொள்கின்ற சந்தப்பத்திற்கேற்ற நிலைமைகளின்கீழ் நியாயமானவையென நம்பப்படுகின்ற ஏனைய பலவிதமான காரணிகளின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

தீர்ப்புகள்,மதிப்பீடுகள் மற்றும் அடிப்படையாக அமைந்த மதிப்பீடுகள் இடையறாத அடிப்படையில் மீளாய்வு செய்யப்படும். கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள்அத்தகைய திருத்தங்கள் நடப்பு மற்றும் வருங்கால காலஎல்லைகளில் தாக்கமேற்படுத்துமாயின் மேற்படி மதிப்பீடுகள் திருத்தப்படுகின்ற காலஎல்லைக்குள் எற்பிசைவு செய்யப்படும். இ.க.நி. பிரயோகிக்கப்படுகையில் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் மதிப்பீட்டு நிதிக்கூற்றுகள் மீது கணிசமான தாக்கத்தை ஏற்படுத்த இயலும்.

(அ) இளைப்பாற்று நன்மைகள்

இளைப்பாற்றுக் கடப்பாடுகளின் நிகழ்காலப் பெறுமதி பல்வேறு ஊகங்களைப் பாவித்து ஆயுட்கணிப்பு அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்ற பல்வேறு காரணிகளில் தங்கியுள்ளது. ஓய்வூதியத்திற்கான நிகர கிரயம் (வருமானம்) நிர்ணயிக்கப்படுகையில் பிரயோகிக்கப்படுகின்ற ஊகங்களுக்கு கழிவு வீதம் உள்ளடங்கும். இந்த ஊகங்களிலான ஏதேனும் மாற்றம்ஓய்வூதியக் கடப்பாடுகளின் கொண்டுசெல்லல்பணத்தொகை மீது தாக்கமேற்படுத்தும்.

உசிதமான கழிவு வீதத்தை ஒவ்வொரு வருட இறுதியிலும் கூட்டுத்தாபனம் நிர்ணயிக்கும். ஓய்வூதியக் கடப்பாடுகளை தீர்க்க அவசியமென எதிர்பார்க்கப்படுகின்ற எதிர்கால காசுபாய்தலின் நிகழ்காலப் பெறுமதியை நிர்ணயிப்பதற்காக பாவிக்கவேண்டிய வட்டி வீதமாக அமைவது இதுவேயாகும். உசிதமான கழிவு வீதத்தை நிர்ணயிக்கையில் கூட்டுத்தாபனம் நிறுவனம்சார் பிணைமுறிகளின் வட்டி வீதத்தை கவனத்திற்கொள்ளும். ஓய்வூதியக் கடப்பாடுகள் மற்றும் ஏனைய பிரதான ஊகங்கள் நிகழ்கால சந்தை நிலைமைகளை பகுதியளவில் அடிப்படையாகக் கொள்கின்றது.

(ஆ) வருமான வரி வருமானம்

கூட்டுத்தாபனம் வருமான வரிக்கு கட்டுப்பட்டதாகும். வருமான வரிக்கான ஏற்பாடுகளை நிர்ணயிக்கையில் கணிசமான தீர்ப்பொன்று அவசியமாகும். பெரும்பாலான கொடுக்கல் வாங்கல்களும் கணிப்பிடல்களும் உள்ளதோடு அவற்றுக்காக இறுதி வரி நிர்ணயித்தல் நிச்சயமற்றதாகும். மேலதிக வரி கிடைக்க உள்ளதா என்பது பற்றி மதிப்பீடுகளின் அடிப்படையில் எதிர்பார்த்த வரி கணக்காய்வுச் சிக்கல்களுக்காக கூட்டுத்தாபனம் பொறுப்புகளை எற்பிசைவு செய்யும். இந்த விடயங்களில் இறுதி வரிப் பெறுபேறு தொடக்கத்தில் அறிக்கையிடப்பட்ட அளவுகளைப் பார்க்கிலும் மாறுகின்ற வேளையில் அந்த மாற்றங்கள் அத்தகைய நிர்ணயிப்புகள் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதிக்குள் நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வருமான வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மீது தாக்கமேற்படுத்தும்.

5. நிதிசார் அபாயநேர்வு முகாமைத்துவம்

5.1 நிதிசார் அபாயநேர்வுக் காரணிகள்

கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை அதனை நிதிசார் அபாயநேர்வு கலப்பிற்கு திறந்துவிடுகின்றது. சந்தை அபாயநேர்வு, (புழக்கத்திலுள்ள பணம், நியாயமான பெறுமதி வட்டி வருமான அபாயநேர்வு, காசுப்பாய்வு வட்டி வீத அபாயநேர்வு மற்றும் விலை அபாயநேர்வினை உள்ளிட்டதாக) கடன் அபாயநேர்வு மற்றும் திரவத்தன்மை அபாயநேர்வு என்பவை அவற்றில் அடங்கும். கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த கடன் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் கூட்டுத்தாபனத்தின் நிதிச் செயலாற்றுகை மீது பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய பாதகமான பெறுபேறுகளை குறைப்பதை இலக்காகக்கொண்டுள்ளது.

பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளின் கீழ் நிதிப்பிரிவினால் அபாயநேர்வு முகாமைத்துவம் மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) சந்தை அபாயநேர்வு

(i) அந்நிய செலாவணி அபாயநேர்வு

கூட்டுத்தாபனம் தனக்கு அவசியமான உபகரணங்களை சர்வதேசரீதியாக இறக்குமதி செய்வதோடு அடிப்படையில் அமெரிக்க டொலர்களுடன் சம்பந்தமான புழக்கத்திலுள்ள பணம் திறந்தநிலையில் உள்ளமை காரணமாக தோன்றுகின்ற அந்நிய செலாவணி அபாயநேர்வுகளுக்கு திறந்தநிலையை அடைகின்றது. எதிர்கால வணிக கொடுக்கல் வாங்கல்களிலிருந்தும் ஏற்றுக்கொண்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளிலிருந்து தோன்றுகின்ற தனது அந்நிய செலாவணி அபாயநேர்வு முகாமைத்துவத்தை மேற்கொள்ளும்பொருட்டு கூட்டுத்தாபனம்உள்நாட்டு முகவர்களுடன் உடன்படிக்கைகளை செய்துகொள்கின்றது.

(ii) விலை அபாயநேர்வு

வர்த்தகப் பண்ட விலைகளின் அபாயநேர்வுக்கு கூட்டுத்தாபனம் திறந்தநிலைக்கு உள்ளாகின்றது. பிரதான வழங்காளர்களுடன் உடன்படிக்கைகளுக்கு வருவதன் மூலமாக கூட்டுத்தாபனம் அபாயநேர்வினை குறைக்கின்றது.

(iii) கடன்அபாயநேர்வு

அடிப்படையில் வர்த்தக வருமதிகளாலேயே கடன் அபாயநேர்வுக்கு திறந்தநிலை அடைவதோடு சேவை வழங்குவதற்கு முன்னராக தனது புதிய வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் கடன் அபாயநேர்வினை முகாமைத்துவம் செய்கின்ற மற்றும் பகுப்பாய்வு செய்கின்ற பொறுப்பு கூட்டுத்தாபனத்திற்கு உண்டு.

காசு மற்றும் காசுக்கு சமமானவை, வங்கி மற்றும் நிதி நிறுவனங்களில் உள்ள வைப்புக்களைப் போன்றே வாடிக்கையாளர்களிடமிருந்து வருமதியானவை மற்றும் வணிக கொடுக்கல் வாங்கல்களுக்கு கடன் திறந்தநிலை காரணமாவே கடன் அபாயநேர்வு தோன்றுகின்றது. வங்கி மற்றும் நிதி நிறுவனங்களுக்காக சுயாதீனமாக தரப்படுத்தப்பட்ட குறைந்த பட்சம் "யு'தரப்படுத்தலைக்கொண்ட தரப்பினர் மாத்திரம் ஏற்பிசைவு செய்யப்படுவர். அபாயநேர்வுக் கட்டுப்பாடு வாடிக்கையாளரின் நிதிநிலைமை, இறந்தகால அனுபவங்கள் மற்றும் ஏனைய காரணிகளை கவனத்திற்கொண்டு கடனின் தரம் மதிப்பீடு செய்யப்படும். உள்ளக மற்றும் வெளிவாரி வகைப்படுத்தலை அடிப்படையாகக்கொண்டு ஒற்றைக் கடன் எல்லைகள் விதிக்கப்படும். கடன் எல்லைகளின் பயன்பாடு அடிக்கடி மேற்பார்வை செய்யப்படும்.

(iv) திரவத்தன்மை அபாயநேர்வு

கூட்டுத்தாபனத்தினால் நிதிசார் எதிர்வுகூறல் மேற்கொள்ளப்படுவதோடு கூட்டுத்தாபனத்தின் திரவத்தன்மை அவசியப்பாடுகளை உறுதிப்படுத்தும்பொருட்டு அடிக்கடி மீளாய்வு செய்யப்படும். அத்தகைய எதிர்வுகூறலின்போது கூட்டுத்தாபனத்தின் கடன் நிதியாக்கத் திட்டம், நியதிச்சட்ட அமைந்தொழுகுதல் கவனத்திற்கொள்ளப்படும். செயற்படு மூலதன முகாமைத்துவத்திற்காக அவசியமாகின்ற மீதியைப் பார்க்கிலும் கூட்டுத்தாபனத்தினால் தடுத்துவைக்கப்பட்டுள்ள மேலதிக பணத்தொகை கடப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்காக பொருத்தமான பருவமுதிர்வுகொண்ட வட்டி வருமானத்தை ஈட்டும்பொருட்டு பருவ வைப்புகளுக்கு மாற்றப்படும்.

6. இணைந்த தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்

தொடர்பின் பெயர்	*பதவி*	*கொடுக்கல் வாங்கலின் தன்மை*
திரு. சித்திக் .எம். பாறூக்	தலைவர்	கிடையாது
திரு. சுதர்ஷன குணவர்தன	பணிப்பாளர்சபை உறுப்பினர்	கிடையாது
திரு. எம்.ஜே.ஆர். டேவிட்	பணிப்பாளர்சபை உறுப்பினர்	கிடையாது
திரு. டபிள்யு .ஜயசிறி	பணிப்பாளர்சபை உறுப்பினர்	கிடையாது
திரு..பி.கே.ஆர். பாலசூரிய	பணிப்பாளர்சபை உறுப்பினர்	கிடையாது
திரு. தனுஷ்க ராமநாயக்க	பணிப்பாளர்சபை உறுப்பினர்	கிடையாது

குறிப்பு - 1

வருவாய்

விபரம்	2017	2016 சீராக்கிய	சீராக்கல்	2016 அங்கீகரித்தவை
ஆசிய சேவையின் ஒலிபரப்பு நேர விற்பனை	9,995,273	11,891,588		11,891,588
T.W.R. ஒலிபரப்பு நேர விற்பனை	87,213,294	87,816,670		87,816,670
உள்நாட்டு சேவையின் ஒலிபரப்புநேர விற்பனை	447,967,196	411,490,841	(1,625,640)	413,116,481
தயாரிப்பு அறவீடுகள் - உள்நாட்டு சேவை	5,797,736	4,986,309		4,986,309
வருவாய் திருகோணமலைக் கருத்திட்டம்	136,055,907	140,731,469		140,731,469
மரண அறிவித்தல்கள்	4,015,157	4,096,908		4,096,908
FEBA ஒலிபரப்பு நேர விற்பனை	3,158,229	2,128,630		2,128,630
	694,202,792	**663,142,415**	**(1,625,640)**	**664,768,055**

குறிப்பு - 2

விற்பனைக் கிரயம்

விபரம்	2017	2016
சம்பளம், வேதனம் மற்றும் படிகள்	311,412,493	313,401,377
ஊழியர் சேமலாப நிதியம்	33,642,153	32,696,029
ஊழியர் சேமலாப நிதியம்	6,231,252	6,253,413
பிரயாணம் மற்றும் வாழ்க்கைச் செலவுப்படி	594,179	729,201
நிகழ்ச்சி செலவீடுகள்	8,096,193	15,332,877
மாற்றுக்கடமை பணியாளர்கள்	5,993,254	6,213,542
வாகன வாடகை அறவீடுகள்	7,016,262	3,975,371
பராமரிப்புக் கிரயம்	7,154,606	4,742,199
தொடர்புபடுத்தல் அறவீடுகள்	4,685,473	6,111,988
மின்சாரம்	168,280,801	168,462,025
தொழில்முயற்சி மேம்பாட்டு செலவீடுகள்	4,008,371	4,312,221
ஒலிபரப்பு நேர விற்பனை மீதான தரகு (உள்நாட்டு)	61,209,216	58,729,448
ஒலிபரப்பு நேர விற்பனை மீதான தரகு (வெளிநாட்டு)	837,449	805,014
	619,161,702	**621,764,705**

குறிப்பு - 3

பிற தொழிற்பாட்டு வருமானம்

விபரம்	2017	2016 சீராக்கிய	சீராக்கல்	2016 அங்கீகரித்தவை
கடன்கள் மீதான வட்டி	6,867,807	5,187,266	977,626	4,209,640
பல்லின வருமானம் (பிற)	72,534,847	52,989,091	1,698,618	51,290,473
திரும்பிவந்த காசோலைகளுக்காக விளம்பர முகவர்களிடமிருந்து அபராதம்	48,967	469,884		469,884
வீட்டு வாடகை	136,671	111,863		111,863
சுற்றுலா பங்களாவிடமிருந்து வருமானம்	559,089	435,000		435,000
விசேட ஒலிப்பதிவுகள்	933,353	546,683		546,683
இறக்குமதியார்கள் விற்பனையாளர்களுக்கு உரிமமளித்தல்	7,979,249	7,890,389		7,890,389
கெசெற்றுகளின் விற்பனை	3,037,992	1,852,360		1,852,360
அபராதக் கணக்கு	-	1,900		1,900
சுற்றுலா பங்களாவிலிருந்து வருமானம் - அம்பேவெல	389,725	172,596		172,596
பிரசுரங்களின் விற்பனை	26,104	55,545		55,545
உப மொத்தம்	**92,513,803**	**69,712,579**	**2,676,244**	**67,036,335**
அரசாங்க கொடையை பதிவழித்தல் மூலமாக இலதாக்கல்	77,916,361	67,476,968		67,476,968
திருகோணமலை கொடை பதிவழித்தல் மூலமாக இலதாக்கல்	155,406,674	155,406,674		155,406,674
உப மொத்தம்	**233,323,036**	**222,883,642**	**-**	**222,883,642**
கூட்டு மொத்தம்	**325,836,839**	**292,596,221**	**2,676,244**	**289,919,977**

குறிப்பு - 3.1

அரசாங்க கொடை

விபரம்	2017	2016
உரிமக் கட்டணங்களுக்கான அரசாங்கக் கொடை	350,690,000	365,000,000
	350,690,000	**365,000,000**

வானொலி உரிமக்கட்டணங்களுக்கு மாற்றாக 350.69 மில்லியன் ‘ரூபா அரசாங்கத்திடமிருந்து கிடைத்தது.

குறிப்பு - 4

விநியோகச் செலவு

விபரம்	2017	2016 சீராக்கிய	சீராக்கல்	2016 அங்கீகரித்தவை
அறவிட முடியாத மற்றும் ஐயக்கடன்களுக்கான ஏற்பாடுகள்	5,361,316	5,743,906		5,743,906
	5,361,316	**5,743,906**	**-**	**5,743,906**

குறிப்பு - 5

பிற தொழிற்பாட்டுக் கிரயம்

விபரம்	2017	2016 சீராக்கிய	சீராக்கல்	2016 அங்கீகரித்தவை
வெளிப்புற ஒலிபரப்பு அமைப்புகளுக்கான பங்களிப்பு	976,347	788,302		788,302
செய்திச் சேவை மற்றும் செய்திச் சுருக்கங்கள்	213,650	954,240		954,240
விளம்பரமும் பிரச்சாரமும்	710,130	910,724		910,724
மின்சாரமும் எரிசக்தியும்	4,872,410	5,793,040	460,585	5,332,455
தபால் மற்றும் தொலைபேசி	12,937,963	14,183,473		14,183,473
அச்சிடலும் காகிதாதிகளும்	3,673,618	3,835,166		3,835,166
மோட்டார் வாகன ஓட்டச் செலவுகள்	13,318,357	13,123,058		13,123,058
ஒலிபரப்புக் கருவிகளின் பழுதுபார்த்தல்களும் பராமரிப்பும்	10,686,070	10,869,464		10,869,464
இசைக் கருவிகளின் பழுதுபாரத்தல்களும் பராமரிப்பும்	5,550	140,000		140,000
தளபாடங்கள் மற்றும் பொருத்திகளின் திருத்தவேலைகளும் பராமரித்தல்களு	5,065,010	3,957,408		3,957,408
கட்டடம் மற்றும் தோட்டத்தின் திருத்தவேலைகளும் பராமரித்தலும்	18,256,946	9,158,706		9,158,706
தேய்மானம்	62,529,891	46,187,595	500,000	45,687,595
தேய்மானம் திருகோணமலை	159,297,421	158,236,740		158,236,740
திருகோணமலை செலவுகள்	22,301,224	28,017,049		28,017,049
கெசெற்றுகள் செலவீடுகள்	423,842	-	-	-
வரிவிதிப்பு (நுளுஊ)	3,398,792	3,200,569	2,283,773	916,796
டீவு செலவுகள்	10,484,554	9,477,157		9,477,157
வாகன வாடகை அறவீடுகள்	605,350	3,152,698		3,152,698
முத்திரைத் தீர்வை	66,665	46,550		46,550
வானொலி அலைவரிசை அறவீடுகள்	6,422,076	9,713,193	-	9,713,193
	336,245,865	**321,745,130**	**3,244,358**	**318,500,772**

குறிப்பு - 6

நிருவாகக் கிரயம்

விபரம்	2017	2016 சீராக்கிய	சீராக்கல்	2016 அங்கீகரித்தவை
கொடுப்பனவுகள் - கூட்டுத்தாபன தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கான	1,507,320	977,000		977,000
சம்பளம், வேதனம் மற்றும் கொடுப்பனவுகள்	172,603,708	177,644,083		177,644,083
ஊழியர் சேமலாப நிதியம்	24,247,104	23,370,923		23,370,923
ஊழியர் நம்பிக்கை நிதியம்	4,942,682	4,965,963		4,965,963
பணியாளருக்கான மேலதிக நேரப்படிகள்	20,502,348	21,287,568		21,287,568
மாற்றுக்கடமை பணியாளர்கள்	11,900,981	11,556,015		11,556,015
ஒப்பந்த பணியாளர்களுக்கான ஊதியம்	40,589,644	37,881,678		37,881,678
பணியாளர் பயிற்சி அறவிடுகள் (உள்நாடு)	8,800	25,500		25,500
பிரயாணமும் வாழ்க்கைச் செலவுப்படியும் - (வெளிநாடு மற்றும் உள்நாடு)	2,611,444	2,848,980		2,848,980
விடுமுறைதினப் படி	2,604,961	1,960,928		1,960,928
பணிக்கொடை	25,814,868	21,300,257		21,300,257
தலைவரின் களியாட்டம்	439,876	472,773		472,773
பணிப்பாளர் நாயகத்தின் களியாட்டம்	101,605	104,740		104,740
நலனோம்பல்	1,960,129	1,737,466		1,737,466
மருத்துவ சேவை	132,958	191,023		191,023
பொதுவான அறவீடுகள்	1,600,529	964,946		964,946
பிரத்தியேக பாதுகாப்புச் சேவை	5,526,700	538,050		538,050
வாடகை வீதமும் வரிகளும்	6,328,397	6,078,588		6,078,588
காப்புறுதி	3,401,400	443,912		443,912
கணக்காய்வுக் கட்டணங்கள்	550,000	550,000		550,000
சட்டக் கட்டணங்கள்	1,474,415	1,108,418		1,108,418
பிரசுரங்களும் பருவவெளியீடுகளும்	416,400	692,063		692,063
பணிக்கொடை, வழக்குகள் மற்றும் பிறவற்றுக்கான தண்டப்பணம்	185,672	462,037		462,037
	329,451,940	**317,162,912**	**-**	**317,162,912**

6.1) 2017 ஆம் ஆண்டில் பணியாளர்களது உறவினர்களின் மரண அறிவித்தல்களை ஒலிபரப்பு செய்வதற்காக ரூபா.680,938.50. தொகையை கூட்டுத்தாபனம் செலவுசெய்துள்ளது.

2017 ஆம் ஆண்டில் முடிவடையாத வழக்குகள்

உயர்நீதிமன்றத்தில் நிறைவு பெறாத இரண்டு வழக்குகள் உள்ளன.

இவற்றுள் ஒரு வழக்கின் விபரம் வருமாறு, இதில் வழக்கு எண் டி.சி 23089 எம்.ஆர் இன் படி வழக்குத் தொடுத்தவருக்கு ரூபா.10,000,000.00 மற்றும் வழக்குச் செலவுகளையும் வழங்குமாறு தீர்ப்பளிக்கப்பட்டது. வழக்கு இல. எம்.சி : 64,296.00 இன் படி கூட்டுத்தாபனத்தினால் தொடுக்கப்பட்ட மற்றுமொரு வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நிறைவுபெறாதுள்ளது.

இரு வழக்குகள் உயர் நீதிமன்றத்திலும் ஐந்து வழக்குகள் மாவட்ட நீதிமன்றத்திலும் உள்ளன. இதில் ஒரு வழக்கில் 8 மில்லியனும் வட்டியும் மற்றைய வழக்கில் ரூபா.5,917,275.00 மற்றும் வட்டியும் 10% வீத தரகும் ஐக்கிய அமெரிக்க டொலர் 26775 இலிருந்து வழங்கப்பட வேண்டும். நான்கு வழக்குகள் நீதவான் நீதிமன்றத்திலும் மூன்று வழக்குகள் தொழில் நியாய மன்றத்திலும் நிறைவு பெறாது உள்ளது.

குறிப்பு - 7

நிதிக்கிரயம்

விபரம்	2017	2016 சீராக்கிய	சீராக்கல்	2016 அங்கீகரித்தவை
வங்கி அறவீடுகள்	458,770	461,014		461,014
மேலதிகப்பற்று வட்டி	5,425,308	4,600,117		4,600,117
பரிமாற்றத்திலான ஆதாயம் / (இழப்பு)	(2,952)	256,004		256,004
கடனட்டைத் தரகு	71,650	52,969		52,969
குத்தகை வட்டி	-	176,345		176,345
	5,952,777	**5,555,448**	**-**	**5,555,448**

குறிப்பு - 8

8 (i) வருமான வரி

விபரம்	2017	2016
கணக்குகளின் பிரகாரம் நிகர இலாபம் / நட்டம்	**(276,133,969)**	**(316,233,466)**
கூட்டுக		
அனுமதிக்க இயலாத செலவுகள்		
தேய்மானம்	62,529,891	46,187,595
திருகோணமலை தேய்மானம்	159,297,421	158,236,740
அறவிடமுடியாக் கடன் ஏற்பாடுகள்	5,361,316	5,743,906
பணிக்கொடைக்கான ஏற்பாடு	25,814,868	21,300,257
களியாட்டம்	541,480	577,513
பொருளாதார சேவை அறவீடு	3,398,792	916,796
	256,943,767	**232,962,807**
கழிக்க		
அனுமதியளிக்கத்தக்க செலவுகள்		
மூலதன விடுதொகை	221,309,776	182,631,352
குத்தகை வாடகை	-	4,885,634
பணிக்கொடை கொடுப்பனவு	42,492,960	19,039,367
	263,802,736	**206,556,353**
வரிஅறவிடத்தக்க இலாபம் / (நட்டம்)	(282,992,938)	(289,872,012)
முன்கொண்டுவந்த வரி இழப்புகள்	(3,395,727,025)	(3,105,900,013)
முன்கொண்டுசென்ற மொத்த வரி இழப்புகள்	(3,678,719,963)	(3,395,727,025)
வருமான வரிக்கான ஏற்பாடு		

வருமானத்தில் இருந்து விளையும் இலாபத்தின் 28% வருமான வரிக்கு கூட்டுத்தாபனம் கடப்பாடுடையது. கூட்டுத்தாபனத்தின் சீராக்கப்பட்ட வரிவிதிக்கப்படக்கூடிய இலாபத்தை கருத்திற்கொண்டு வருமான கணக்கின் மீதான நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடொன்று செய்யப்பட்டுள்ளது.

8 (ii) பிற்போடப்பட்ட வரிவிதிப்பு கணிப்பீடு மற்றும் LKAS 12 இன் படி பிற்போடப்பட்ட வரிவிதிப்பினை அங்கீகரித்தல் பற்றி கவனத்திற் கொள்ளுதல்.

பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

விபரம்	2017	2016
நிதி நிலைமை		
பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகள்	79,401,520	79,401,520
பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள்	(6,536,768)	(6,536,768)
நிகர பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள்	72,864,752	72,864,752
விரிவான வருமானக் கூற்று		
விரிவான வரிப் பொறுப்புகள்	8,431,518	8,431,518
விரிவான வரிச் சொத்துக்கள்	(5,258,882)	(5,258,882)
நிகர பிற்போடப்பட்ட வருமான வரி வருமானம் / (செலவுகள்)	3,172,636	3,172,636

குறிப்பு - 9

ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி இ.ஒ.கூ.

மொத்த கொண்டுசெல்லல் கணக்கு கிரயத்தில	01.01.2017 இல் மீதி ரூ.	சேர்த்தவை / மாற்றப்பட்டவை ரூ.	விற்றொழித்தவை / மாற்றல்கள் ரூ	31.12.2017 இல் மீதி ரூ.	தேய்மானத்திற்கான ஏற்பாடு 01.01.2017 ரூ.	காலப்பகுதிக்கான அறவீடு ரூ.	முந்திய வருடத்திற்கான சீராக்கம்	தேய்மானத்திற்கான எற்பாடு 31.12.2017 ரூ.	31.12.2017 இல் NBW
காணி	7,764,234		(2,908)	7,761,326			-		7,761,326
கட்டடம்	173,629,897	209,408,759		383,038,656	129,375,673	6,820,256	-	136,195,929	246,842,727
சாதனமும் பொறித்தொகுதியும்	641,774,226	6,832,192		648,606,419	488,618,372	8,664,777	-	497,283,149	151,323,270
இசைக் கருவிகள்	7,241,190	-		7,241,190	6,821,962	68,092	-	6,890,054	351,136
மோட்டார் வாகனங்கள்	76,715,695	11,850	(22,613,870)	54,113,675	72,879,104	1,611,568	(22,613,870)	51,876,802	2,236,874
நீதிக் குத்தகையிலான சொத்துக்கள் - மோட்டார் வாகனங்கள்						-	-		
தளபாடங்களும் பொருத்திகளும்	133,786,196	10,551,425		144,337,621	115,456,415	4,251,804	-	119,708,219	24,629,402
பதிவுகருவிகளும் நாடாக்களும்	24,924,749	63,500		24,988,249	24,888,820	40,472	-	24,929,292	58,957
செவிப்புல அலைவரிசை	885,333,519	36,368,347		921,701,866	744,205,781	10,916,099	-	755,121,880	166,579,986
மாற்றிகள்	1,509,832,026	23,464,431	(8,996,000)	1,524,300,457	991,446,361	23,860,412	-	1,015,306,773	508,993,684
கணினிக் கருவிகள்	43,709,462	4,954,594		48,664,056	35,676,506	6,277,056	-	41,953,562	6,710,494
வாசிகசலை புத்தகங்கள்	451,590		(250)	451,340		-	-		451,340
சிறிய கருவிகள்	146,384			146,384	118,086	19,354	-	137,440	8,943
	3,505,309,170	**291,655,099**	**(31,613,028)**	**3,765,351,240**	**2,609,487,080**	**62,529,891**	**(22,613,870)**	**2,649,403,100**	**1,115,948,140**

ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி திருகோணமலை

மொத்த கொண்டுசெல்லும் கணக்கு கிரயத்தில்	01.01.2017 இல் மீதி ரூ.	சேர்த்தவை / திருகோணமலை சொத்துக்கள் ரூ.	விற்றொழிதல்/ மாற்றல்கள் ரூ.	31.12. 2017 இல் மீதி ரூ.	தேய்மானத்திற்கான ஏற்பாடு 01.01.2017 ரூ.	காலப்பகுதிக்கான அறவீடு ரூ.	முந்திய ஆண்டுக்கான சீராக்கம்	தேய்மானத்திற்கான ஏற்பாடு 31.12.2017 ரூ.	31.12.2017 இல் NBW ரூ.
சாதனமும் பொறித்தொகுதியும்	178,847,308		-	178,847,308	67,035,477	13,413,549	-	80,449,025	98,398,282.82
மோட்டார் வாகனங்கள்	4,344,000	3,200,000	-	7,544,000	4,344,000	400,000	-	4,744,000	2,800,000.00
தளபாடங்களும் பொருத்திகளும்	2,839,794		-	2,839,794	1,064,923	212,985	-	1,277,908	1,561,886.32
அலுவலக சாதனம்	7,782,753		-	7,782,753	3,891,378	778,275	-	4,669,653	3,113,100.31
மின்பிறப்பாக்கிகள்	206,429,150		-	206,429,150	77,409,868	15,482,186	-	92,892,054	113,537,095.96
செவிப்புல அலைவரிசை	53,354,383		-	53,354,383	19,246,348	4,001,579	-	23,247,927	30,106,456.17
மாற்றிகள்	1,502,945,613		-	1,502,945,613	552,660,901	112,720,921	-	665,381,822	837,563,790.83
கணினிக் கருவிகள்	52,624,075		-	52,624,075	52,624,075	-	-	52,624,075	-
சிறிய கருவிகள்	4,632,471		-	4,632,471	1,737,176	347,435	-	2,084,611	2,547,859.87
கருவி	159,206,556		-	159,206,556	59,419,140	11,940,492	-	71,359,632	87,846,924.36
	2,173,006,103	**3,200,000**	**-**	**2,176,206,103**	**839,433,285**	**159,297,421**	**-**	**998,730,706**	**1,177,475,396.64**

அருவச் சொத்து

விபரம்	01.01.2017 இல் மீதி ரூ.	சேர்த்தவை / திருகோணமலை சொத்துக்கள் ரூ.	விற்றொழிதல்/ மாற்றல்கள் ரூ.	31.12. 2017 இல் மீதி ரூ.	தேய்மானத்திற்கான ஏற்பாடு 01.01.2017 ரூ.	காலப்பகுதிக்கான அறவீடு ரூ.	முந்திய ஆண்டுக்கான சீராக்கம்	தேய்மானத்திற்கான ஏற்பாடு 31.12.2017 ரூ.	31.12.2017 இல் NBW ரூ.
கணினி மென்பொருள் திருகோணமலை கருத்திட்டம்	**12,124,157**	**1,435,500**	-	**13,559,657**	**12,124,157**	**184,438**	-	**12,308,595**	**1,251,063**

குறிப்பு - 10

மூலதன வேலைகளிலான முன்னேற்றம்

தேய்மானம்	2017	2016 சீராக்கிய	சீராக்கல்	2016 அங்கீகரித்தவை
மூலதன வேலைகளிலான முன்னேற்றம்	54,762,028	187,241,019	(584,178)	187,825,197
	54,762,028	**187,241,019**	**(584,178)**	**187,825,197**

குறிப்பு - 11

கூட்டுத்தாபனம் லங்காபுவத் லிமிரெட்டில் ஒரு மில்லியன் ‘ரூபாவை முதலீடு செய்தது.

முதலீடு

தேய்மானம்	2017	2016
லங்கா புவத் லிமிரெட்டில் முதலீடு	1,000,000	1,000,000

குறிப்பு - 12

வர்த்தக மற்றும் பிற வருமதிகள்

தேய்மானம்	2017	2016 சீராக்கிய	சீராக்கல்	2016 அங்கீகரித்தவை
ஒலிபரப்பு நேர கடன்படுனர்	233,610,423	221,673,715	(1,490,694)	223,164,409
கழிக்க : நிதிசார் சொத்துக்களின் சேதஇழப்பு	(112,091,242)	(109,557,306)		(109,557,306)
பணியாளருக்கான கடன்	3,324,093	3,104,409	(4,011,805)	7,116,214
பணியாளருக்கான பிற முற்பணங்கள்	1,010,767	360,061	(7,684,737)	8,044,798
ஊழியர் கடன்படுனர்கள் ஊ.சே.நி.	283,755	306,530		306,530
முன்கூட்டியே செலுத்தியவை	-	1,071,399		1,071,399
வழங்கலாளர்களுக்கான முற்கொடுப்பனவு	4,408,911	8,000,713		8,000,713
சில்லறை கடன்படுனர்கள்	20,250,728	19,138,364	(3,613,149)	22,751,513
P.M.G. நடைமுறைக்கணக்கு - மரண அறிவித்தல்	-	0	(7,997,854)	7,997,854
டுயுமுர்யுனுயு கிளைக் கணக்கு	12,807,862	12,807,862		12,807,862
G.S.T. கட்டுப்பாட்டுக் கணக்கு	237,267	237,267		237,267
வருமதியான வருமானம் (பிற)	44,079,742	41,475,962	1,898,618	39,577,344
பிடித்துவைத்தல் வரி (வருமானம்)	33,874,191	33,499,303		33,499,303
P.M.G. நடைமுறைக்கணக்கு வானாலி அனமதிப்பத்திரக் கட்டணங்கள்	-	0	(195,700)	195,700
பிற வைப்புகள்	9,362,462	9,357,462		9,357,462
	251,158,960	**241,475,741**	**(23,095,321)**	**264,571,062**

குறிப்பு - 13

நிதி மற்றும் காசுக்கு சமனானவைகள்

தேய்மானம்	2017	2016 சீராக்கிய	சீராக்கல்	2016 அங்கீகரித்தவை
இலங்கை வங்கி - மாத்தறை	18,878	48,457		48,457
மக்கள் வங்கி சர்வதேசப் பிரிவு	53,466,272	190,426		190,426
இலங்கை வங்கி - டொரிங்டன் - பிரதான கணக்கு	(5,699,421)	21,118,762		21,118,762
இந்திய அரச வங்கி	402,609	402,609		402,609
இலங்கை வங்கி - அநுராதபுரம்	-	(18,590)		(18,590)
இலங்கை வங்கி - கண்டி	249,773	(290,954)		(290,954)
நேசன் ட்ரஸ்ட் வங்கி	11,175,433	16,392,792		16,392,792
இலங்கை வங்கி - டொரிங்டன் - வானொலி உரிமம்	31,999,146	8,527,932		8,527,932
இலங்கை வங்கி - டொரிங்டன் - எப்.எம். கருத்திட்டம்	27,088	27,088		27,088
கட்டு நிதி	111,708	88,577		88,577
இலங்கை வங்கி - டொரிங்டன் - ஒலிநாடா விற்பனை	7,886,948	13,188,431		13,188,431
இலங்கை வங்கி - மெட்ராஸ்	1,610,446	1,164,445		1,164,445
காசேடு திருகோணமலைக் கருத்திட்டம்	33,970,423	47,321,241		47,321,241
இலங்கை வங்கி - சேமிப்பு	96,394	92,621		92,621
நிலையான வைப்புகள்	63,368,597	58,499,697		58,499,697
சென‌சும	15,053	60,053		60,053
எல்லைக் கணக்கு (மக்கள் வங்கி)	153,019,572	153,472,508		153,472,508
	351,718,918	**320,286,094**	**-**	**320,286,094**

குறிப்பு - 14

தருத்துவைத்த ஈட்டல்கள்

தேய்மானம்	2017	2016
தொடக்க மீதி	**(108,694,335)**	**(126,541,868)**
2016 ற்கு முந்திய வருவாய் ஒதுக்கம்		
+ சீராக்கம்	42,026,922	(31,817,813)
(-) சீராக்கம்	(8,015,353)	47,985,402
விரிவான வருமானம்	**71,383,395**	**(53,537,552)**
	(32,761,032)	**55,217,495**
கூட்டுத்தொகை	**(36,060,404)**	**(108,694,335)**

குறிப்பு - 15

வர்த்தக மற்றும் பிற சென்மதிகள

தேய்மானம்	2017	2016 சீராக்கிய	சீராக்கல்	2016 அங்கீகரித்தவை
ஒலிபரப்பு நேர விற்பனை கடன்கொடுனர்	12,749,748	5,075,315	(165,537)	5,240,852
மீளளிக்கவேண்டிய நானாவித வைப்புகள்	5,458,716	4,680,695		4,680,695
அட்டுறு செலவினங்கள்	240,372,845	232,503,730	5,846,709	226,657,021
ஊ.சே.நி.	3,744,899	3,513,074		3,513,074
சில்லறைக் கடன்கொடுனர்	2,869,945	7,275,313	562,500	6,712,813
பிராந்திய நடைமுறைக்கணக்கு	354,980	21,500	21,500	
ஆநு"ள பாதுகாப்பு வைப்பு	566,754	576,347		576,347
சென‌சும - சுனாமி	15,053	60,053		60,053
O.P. இற்கான பயிற்சிப் பாடநெறி - கொத்தமலை அக்கடமி	-	590,283		590,283
கடன்கொடுனர் கட்டுப்பாட்டுக் கணக்கு	-	3,438,710		3,438,710
ரஜரட்ட சுற்றுலா பங்களா	202,285	112,384		112,384
	266,335,226	**257,847,404**	**6,265,172**	**251,582,232**

குறிப்பு - 16

நடைமுறையல்லாப் பொறுப்புகள்

தேய்மானம்	2017	2016 சீராக்கிய	சீராக்கல்	2016 அங்கீகரித்தவை
என்எஸ்எல்	15,007,806	15,007,806		15,007,806
தேசத்தைக் காத்தல் நிதி	(12,418)	(12,418)		(12,418)
உழைக்கும்போதே செலுத்தும் வரி	102,229	149,526		149,526
வற் கட்டுப்பாட்டுக் கணக்கு	42,176,103	46,477,679		46,477,679
ஈஎஸ்சி	53,563,211	55,785,351	2,283,773	53,501,578
என்பிரீ	30,327,431	53,794,953		53,794,953
தேசிய பாதுகாப்பு நிதி	2,835	2,835		2,835
வருமான வரிக்கான ஏற்பாடு	692,759	692,759		692,759
உள்நாட்டு இறைவரிக்கு சென்மதியான முத்திரை தீர்வை	100	100		100
	141,860,056	**171,898,592**	**2,283,773**	**169,614,819**

குறிப்பு - 17

சரக்குத்தொக்கு

தேய்மானம்	2017	2016
சரக்குத்தொக்குகள் (கெசெற்றுகளும் இறுவட்டுகளும்)	3,729,602	3,536,443
நுகரக்கூடிய வகையினங்கள்	23,947,730	22,371,290
	27,677,332	**25,907,733**

2017 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவுபெற்ற ஆண்டுக்கான கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தொடர்பில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No. எம்ஈ/ஏ/எஸ்எல்பீசீ/1/17/477

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 2018 நவம்பர் 19

தலைவர்,
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1966 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தான அதிகாரச்சட்டத்தின் 27 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவம் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினது 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தைத் தவிர, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் இணங்காமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01

நியமத்தின் 15 ஆம் பந்தியின் பிரகாரம், நிதி நிலைமைக் கூற்றில் அரசாங்க மானியமானது, உரித்துக்களின் கீழ் வேறானதொரு விடயமாக இனங்காணப்பட வேண்டுமாயினும், ஜேர்மன் அரசாங்க மானியமாகிய ரூபா 1,128,190,137, யப்பான் மானியமாகிய ரூபா 70,849,537, அரச மானியமாகிய ரூபா 863,445,527 என்பன நடைமுறை அல்லாத பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19

(i) சேவையின் பின்னரான நலன்களுக்குரிய பொறுப்பை மதிப்பீடு செய்வதற்கு முன்கூட்டிய கூறுச் செலவின அடிப்படை பயன்படுத்தப்படுவதாகக் குறிப்பிடப்பட்டபோதும், நியமத்தின் 75 ஆம்

பந்தியின் பிரகாரம் பயன்படுத்தப்பட்ட ஆயுட்கால வரலாற்று அடிப்படை வெளிப்படுத்தப்பட்டிராததுடன், ஆண்டிற்குரிய ஆயுட்கால இலாபம் அல்லது நட்டம் இனங்காணப்படவில்லை.

(ii) நியமத்தின் 83 ஆம் பந்தியின் பிரகாரம், சேவையின் பின்னரான நலனுக்குரிய தரகுக்கு திறைசேரிப் பிணைமுறி அடிப்படையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டுமாயினும், எதுவித அடிப்படையுமின்றி 11 சதவீத தரகு விகிதத்தை கூட்டுத்தாபனம் பயன்படுத்தியிருந்தது.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 21

(i) நியமத்தின் 23(அ) பந்தியின் பிரகாரம், 2007 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 வரை கூட்டுத்தாபனத்தின் வெளிநாட்டுக் கடன்பட்டோரின் அளவாகிய 20,035 அமெரிக்க டொலர்கள் மற்றும் இந்திய ரூபா 3,346 என்பன மீளாய்வாண்டினது டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலவிய செலாவணி விகிதத்தில் மாற்றம் செய்யப்பட்டு ரூபா 3,070,427 ஆக அதனை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்குப் பதிலாக, கடன்பட்டோர் உருவாகிய ஆண்டின் இறுதித் தினத்தில் உள்ளவாறான செலாவணி விகிதத்தில் காட்டியமையால், மீளாய்வாண்டில் வெளிநாட்டுக் கடன்பட்டோர் ரூபா 417,416 குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ii) நியமத்தின் 23(அ) பந்தியின் பிரகாரம், வெளிநாட்டு நாணயத்தில் உள்ள நிதிசார் விடயத்தை அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் நிலவும் செலாவணி விகிதத்தின் அடிப்படையில் மாற்றஞ் செய்ய வேண்டுமாயினும், சென்னையில் உள்ள இலங்கை வங்கிக் கிளைக் கணக்கில் உள்ள மீதியாகிய இந்திய ரூபா 676,658 இந்திய ரூபாவுக்கு நிகரான இலங்கை ரூபா 2.3854 ஆகிய 2017 டிசெம்பர் 31 ஆந் திகதி நிலவிய செலாவணி விகிதத்தில் மாற்றஞ் செய்யப்படாமையால் நிதி நிலைமைக் கூற்றில் அம்மீதி ரூபா 3,654 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேற்படி காரணத்தால் இனங்காணப்படக்கூடிய காலப்பகுதிக்குரிய சாதகமான அந்நியச் செலாவணி வேறுபாடாகிய ரூபா 3,654 பெறுமதியானது இலாபக் கணிப்பீட்டின்போது இனங்காணப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 7 இன் 7 ஆம் பந்தி மற்றும் நிறுவனம் இனங்கண்டுகொண்டிருக்கும் கொள்கை என்பவற்றுக்கமைய, முதலீடு கையேற்கப்பட்ட நாளிலிருந்து முதிர்ச்சியடைவதற்குச் செல்லும் காலம் 03 மாதங்கள் குறைவாக உள்ள முதலீடுகள் மாத்திரமே காசு மற்றும் காசுக்கு நிகரானவையாகக் காட்டப்பட வேண்டுமாயினும், 03 மாதங்களுக்கு மேற்பட்ட முதிர்ச்சியடைந்த ரூபா 63,368,597 பெறுமதியான நிலையான வைப்புகள் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் காசு மற்றும் காசுக்கு நிகரான விடயமாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) நிறுவனம் இனங்கண்டு கொண்டிருந்த கொள்கையின் பிரகாரம், வங்கி மேலதிகப்பற்று கடனாகக் கருதப்பட்டு நடைமுறைப் பொறுப்பின் கீழ் காட்டப்பட வேண்டுமாயினும், அதற்கு முரணாக மீளாய்வாண்டின் முடிவில் உள்ளவாறான வங்கி மேலதிகப் பற்றாகிய ரூபா 5,699,421 காசு மற்றும் காசுக்கு நிகரானவையாக எதிர்மறைப் பெறுமதியுடன் காட்டப்பட்டமையால் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்து மற்றும் நடைமுறைப் பொறுப்பு என்பன அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆறு மாதங்களில் முதிர்ச்சியடையும் 04 நிலையான வைப்புகளில் பெற வேண்டிய வட்டி வருமானத்தைக் கணிப்பிடுகையில் அரையாண்டு வட்டி வீதத்தைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக வருடாந்த வட்டி வீதம் பயன்படுத்தப்பட்டமையால் வட்டி வருமானமும் பெற வேண்டிய வட்டி வருமானமும் ரூபா 344,481 அதி கூடிய மதிப்பீட்டுக்குள்ளாகியிருந்தன.

(ஆ) கூட்டுத்தாபனத்திற்குரிய சீதுவயில் உள்ள காணியின் ஒரு பகுதி 2005 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்டபோது பெறப்பட்ட மூலதன இலாபம் ரூபா 19,997,092 ஆகும். இது தேக்கி வைத்த சம்பாத்தியக் கணக்கில் செலவு வைக்கப்படாது மூலதன ஒதுக்கக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) அளவைகளுக்குப் பயன்படுத்தும் ரூபா 425,000 கிரயமுடைய பவர் லொகர் எனப்படும் உபகரணம் 2016 ஆம் ஆண்டில் தொலைந்திருந்தது. எனினும், இயந்திரம் மற்றும் உபகரணக் கணக்கிலிருந்து அதனை நீக்குவதற்கு கணக்காய்வுத் தினமான 2018 செம்படெம்பர் 3 வரை நடவடிக்கை எடுக்கப்படாமையால் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இயந்திரம் மற்றும் உபகரணக் கணக்கில் காணப்பட்ட மீதி அயேளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 1979 ஆம் ஆண்டில் குத்தகைக்குப் பெறப்பட்ட கட்டிடத்தின் உரித்துக்காக மார்க்பெட் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்ட ரூபா 250,000 கட்டிடக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. அக்குத்தகை உடன்படிக்கை 2015 யூன் 01 ஆந் திகதி முடிவடைந்து அதன் உரித்து மீண்டும் நுவரெலியா பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டபோதும், கட்டிடக் கணக்கிலிருந்து அதன் பெறுமதியையும் அதற்குரிய தேய்மான நிதியேற்பாட்டையும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காததால் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காணப்படும் கட்டிடப் பெறுமதி அதே தொகையால் அதிகரிக்கப்பட்டும் தேய்மான நிதியேற்பாடு ரூபா 250,000 அதிகரிக்கப்பட்டும் காட்டப்பட்டிருந்தன.

(உ) 2017 ஆம் ஆண்டிற்கான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியைக் கணிப்பிடும் போது கருத்திற் கொள்ளப்பட்டிருக்க வேண்டிய வரிக்குட்பட்ட மொத்த வருமானம் ரூபா 536,777,714 ஆகும். எவ்வாறாயினும், கூட்டுத்தாபனம் கருத்திற் கொண்ட தொகை ரூபா 524,226,609 மாத்திரமே. இதனால் 2017 ஆம் ஆண்டிற்கான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி ரூபா 251,022 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) பெறுமதி சேர் வரிக்குரிய வருமானத்தைக் கணிப்பிடுகையில் ரூபா 5,722,380 பெறுமதியான 04 வாகன விற்பனை வருமானம் கருத்திற் கொள்ளப்படாமையால் 2017 செப்டம்பருக்கான பெறுமதி சேர் வரிக் கொடுப்பனவு ரூபா 858,357 குறைவாகச் செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாகனங்களை வாடகைக் கொள்வனவு அடிப்படையில் கொள்வனவு செய்கையில் பயன்பாட்டிற்கேற்ப வரி மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

(எ) அரச வங்கி நடைமுறைக் கணக்கொன்றிற்குத் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கியில் வைப்பிலிடப்படாது கையிலிருந்த காசாகிய (Cash in Hand) ரூபா 122,529 கையிலுள்ள காசுக் கணக்கில் வரவு வைக்கப்படாது வங்கியிலிடப்பட்ட காசாக காசேட்டில் பதிவு செய்யப்பட்டு தேறாத வைப்பாக வங்கி கணக்கிணக்கக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) 1959 மே 29 ஆந் திகதி சுவீகரிகரிக்கப்பட்ட இடமொன்றை 2009 ஆம் ஆண்டின் போது விளையாட்டு மைதானம் ஒன்றிற்காக ஹோமகம பிரதேச செயலாளரிடம் ஒப்படைத்து அதன் புத்தகப் பெறுமதியாகிய ரூபா 186,563 மற்றும் அங்குள்ள கட்டிடத்தின் பெறுமதியாகிய ரூபா 247,441 மற்றும் அக்கட்டிடத்திற்குரிய கட்டிடத் தேய்மான நிதியேற்பாடான ரூபா 235,069 என்பன புத்தகங்களிலிருந்து அகற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஐ) திருகோணமலை மீள் ஒலிபரப்புக் கூட விற்பனை வருமானத்துக்குரிய ரூபா 22,301,224 விற்பனைக் கிரயம் ஏனைய செயற்பாட்டுச் செலவினத்தில் காட்டப்பட்டதால் 2017 ஆம் ஆண்டின் மொத்த இலாபம் அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) நெடுங்கால வாடகைக் கொள்வனவு அடிப்படையில் பல்வேறு அரச நிறுவனங்களிலிருந்தும் கூட்டுத்தாபனம் பெற்றிருந்த காணிகளின் பொருட்டு அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 122,614,833 கணக்கிலிடப்படவில்லை.

2.2.4 எதிர்பாராப் பொறுப்புகள்

வழக்காளிகளுக்கு ரூபா 10 மில்லியன், ரூபா 1,783,587, ரூபா 80,311 எனக் கொடுப்பனவை வழங்க வேண்டுமெனும் 3 வழக்குத் தீர்ப்புகளுக்கு எதிராகக் கூட்டுத்தாபனம் உயர் நீதிமன்றம், விண்ணப்ப நீதிமன்றம், மேல் நீதிமன்றம் என்பவற்றிற்கு விண்ணப்பித்துள்ளபோதும் இவ்வழக்குகள் தொடர்பாக கணக்குகளில் நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை.

2.2.5 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட ஒலிபரப்புக் காலக் கடன் கொடுத்தோர் பட்டோலையில் காணப்படும் மீதி ரூபா 12,824,165 ஆகும். ஆயினும், கணக்குப் பிரிவு ஒலிபரப்புக் காலக் கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூபா 12,749,748 ஆகும். அதற்கமைய, ஒலிபரப்புக் கால கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கடன் மீதிக்கும் கடன் கொடுத்தோர் பட்டோலை மீதிக்குமிடையே ரூபா 74,417 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின்போது நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட ஒலிபரப்புக் காலக் கடன்பட்டோர் பட்டோலையில் காணப்படும் மீதி ரூபா 226,557,638 ஆகிய போதும், கணக்குப் பிரிவு ஒலிபரப்புக் காலக் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூபா 233,214,273 ஆகியமையால் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி மற்றும் கடன்பட்டோர் பட்டோலை மீதிக் கூட்டுத் தொகைகளுக்கிடையே ரூபா 6,656,635 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

2.2.6 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிநாட்டு வர்த்தக கடன்பட்டோர் மற்றும் பெற வேண்டிய வைப்புகளினது நிதிக் கூற்று மீதியையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையிலுள்ள மீதியையும் கணக்கிணக்கஞ் செய்தபோது ரூபா 35,720,721 க்கான இனங்காணப்படாத மீதியை உள்ளடக்கி இந்தப் பட்டோலை மீதியை நிதிக்கூற்றுக்களது மீதிக்குச் சமமாக்கிச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டில் இந்திய அரச வங்கிக் கணக்கு சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின்போது, வங்கி உறுதிப்படுத்தலின் பிரகாரம் குறித்த வங்கிக் கணக்கின் மீதி இந்திய ரூபா 179,278 ஆகியபோதும், கூட்டுத்தாபனக் கணக்கின் பிரகாரம் அம்மீதி இந்திய ரூபா 182,176 ஆகவிருந்தது.

2.2.7 கணக்காய்விற்கான சான்றின்மை

கணக்குகளில் உள்ள பின்வரும் ஒவ்வொரு சொத்துக்கள், பொறுப்புகள், கொடுப்பனவுகள் என்பன தொடர்பாக அவற்றிற்கு எதிரே சுட்டிக் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

	கணக்கு விடயம்	பெறுமதி	சமர்ப்பிக்கப்படாத சான்று
		ரூபா	
(அ)	காணி	7,764,234	நிலையான சொத்துக்கள் பதிவேடு, நேரடிச் சரி, பிழை பார்த்தல் அறிக்கைகள்
(ஆ)	கட்டிடங்கள்	168,923,977	நேரடிச் சரி, பிழை பார்த்தல் அறிக்கைகள், நிலையான சொத்துப் பதிவேடு, வெளிநாடுகளிலிருந்து நன்கொடையாக கிடைத்த சொத்துக்கள் தொடர்பான கோவைகள்
(இ)	தலைமை அலுவலகப் புதியக் கட்டிடம்	189,338,449	கட்டிட நிர்மாண வேலைக்குரிய அங்கீகரிக்கப்பட்ட திட்டம், செலவின மதிப்பீடு, செய்த வேலைக்கான சான்றிதழ், இன்வொய்சுகள்
(ஈ)	லக்ஹன்ட கிளை வர்த்தகக் கடன் கொடுத்தோர்	12,807,802	கோவை விபரம் மற்றும் பெறுமதிக் கணிப்பு எவ்வாறு தயாரிக்கப்பட்டது என்பதைக் காட்டும் பட்டோலைகள்
(உ)	கொடுப்பனவுகள்	33,613,157	45 கொடுப்பனவு உறுதிச் சான்றுகள்
(ஊ)	இந்திய அரசு வங்கிக் கணக்கு மீதி	182,176	மீதிகளது உறுதிப்படுத்தல்
		412,629,795	

2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய ரூபா 149,420,035 கூட்டுத் தொகையையுடைய மீதியில் 1981 முதல், அதாவது 36 ஆண்டுகளாக, தீர்வு செய்யப்படாதிருக்கும் மீதிகள் இருந்தன.

(ஆ) மீளாய்வாண்டிகது டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வெளிநாட்டுக் கடன்பட்டோர் மீதி ரூபா 62,267,095 ஆகும். இதில் உள்ளடங்கிய ரூபா 59,692,746 பத்து ஆண்டுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்தவையாகும். இவற்றைத் தீர்வு செய்வதற்குப் போதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 82,612,880 கூட்டுத் தொகையையுடைய 136 வர்த்தகக் கடன்பட்டோருக்கு மீதிகளை உறுதி செய்வதற்கான கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தபோதும், அதில் ரூபா 1,063,687 பெறுமதியான 7 கடன்பட்டோர் மாத்திரமே பதில் வழங்கியிருந்ததுடன், அக் கடன்பட்டோரும் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டிய கடன் மீதி எதுவுமில்லை என உறுதி செய்திருந்தனர்.

2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	இணங்காமை
(அ) 2013 ஏப்ரல் 30 ஆந் திகதி திருத்தஞ் செய்யப்பட்டவாறான 2009 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தேசத்தைக்	இந்த அதிகாரச்சட்டத்தின் 4 (i), (ii) பிரிவுகளின் பிரகாரம், தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியைச் செலுத்துகையில் குறித்தவொரு மாதத்தின் வரி அடுத்து வரும் மாதத்தின் 20 அல்லது அதற்கு

கட்டியெழுப்பும் வரி அதிகாரச்சட்டம்	முன்னர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வழங்கப்பட வேண்டுமாயினும், அதிகாரச்சட்டத்தின் 8(டீ) பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு கரீலாண்டிற்குமுரிய வரி தொடர்பான அறிக்கைகள் அடுத்து வரும் காலாண்டின் 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். எனினும், கூட்டுத்தாபனம் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியை ஒவ்வொரு மாதத்தின் போதும் 02 மாத தாமதத்தின் பின்னரே கொடுப்பனவு செய்திருந்தது. அவ்வாறே, காலாண்டு அறிக்கைகளும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குக் குறித்த தினத்தில் அனுப்பி வைக்கப்படவில்லை.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்

(i) நிதிப்பிரமாணம் 177	கணக்கில் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு இனங்காணப்பட்டிராத மொத்த நேரடி வரவாகிய ரூபா 1,002,063 தீர்வு செய்யப்படுவது 2018 மே 31 வரை நடைபெறவில்லை. அம்மீதியுள் 2016 முதல் முன்கொண்டு வரப்பட்டவாறிருக்கும் ரூபா 49,318 மீதியும் உள்ளடங்கியிருந்தது.
(ii) நிதிப்பிரமாணங்கள் 396(ii), (iii)	2018 மே 31 ஆந் திகதியளவில் செல்லுபடிக் காலம் காலாவதியாகி 06 மாதங்களைக் கடந்தும் கொடுப்பனவுக்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்த ரூபா 918,136 பெறுமதியான 23 காசோலைகள் சம்பந்தமாகப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ)	பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பந்தியின் (அ), (ஆ) பிரிவுகள்	பொருட் கொள்வனவு செய்யும் நிறுவனம் பிரதான பொருட் கொள்வனவுத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டும். குறைந்தது 3 ஆண்டுகளுக்கான எதிர்பார்க்கப்படும் பொருட் கொள்வனவுகள், பிரதான பொருட் கொள்வனவுத் திட்டத்தில் நிரல்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், கூட்டுத்தாபனத்தால் 2017 ஆம் ஆண்டிற்காக மாத்திரமே பொருட் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.
(ஈ)	1978 டிசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையின் 3 ஆம் பட்டோலை 2.11 ஆம் பந்தி	சுற்றறிக்கைப் பிரகாரம், நிலையான சொத்துப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிராததுடன், அதற்குப் பதிலாக கணனி மூலம் முறையாக சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருந்தது. அந் நிலையான சொத்துப் பதிவேட்டில் காணிகள், கட்டிடங்கள், வாகனங்கள், மின் உற்பத்தி இயந்திரங்கள் (ஜெனரேட்டர்), டிரான்ஸ் மீட்டர் போன்ற முக்கியமானவை பலவற்றினது விபரம் உள்ளடக்கப்படவில்லை.
(உ)	2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை	கணனிகள், துணைப் பாகங்கள், மென் அணிகள் சம்பந்தமாக வேறாக ஒரு நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட வேண்டுமாயினும், நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படவில்லை.
(ஊ)	2003 யூன் 02 ஆந் திகதிய பீஈ 12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கை (i) 7.2 ஆம் பந்தி	2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 27,677,392 பெறுமதியான கையிருப்புடன் உள்ள கூட்டுத்தாபனம் கையிருப்பு அறிக்கைகளைப் பேணுவதற்குப் புத்தகங்களை (Manually) பயன்படுத்தியிருந்தது. குறித்த பிரமாணத்தின்படி, கணனிக் கணக்கீட்டு முறைமை அல்லது

		குறைந்தது விநியோகப் பத்திர பெக்கேஜ் (Ms-Excel) என்பவற்றைப் பயன்படுத்தி கையிருப்பு அறிக்கைகளைப் பேணாமையால், இறுதிக் கையிருப்பு அறிக்கையைப் பெறுவதில் குறிப்பிடத்தக்களவு காலம் செல்வது அவதானிக்கப்பட்டது.
	(ii) 7.4.5 ஆம் பிரிவு	கூட்டுத்தாபனம் வருடாந்தம் குழுக்களை நியமித்து சகல நிலையான சொத்துக்களும் உள்ளதைச் சரி, பிழை பார்க்க வேண்டுமாயினும், மீளாய்வாண்டில் வாகனங்கள் சரி, பிழை பார்க்கப்படவில்லை.
(எ)	2015 மே 25 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் (i) பீஈடீ 01/2015	(i) உத்தியோகபூர்வ வாகனம் அல்லது வாகனத்திற்கான படியைப் பெறுவதற்கு அருகதை உடையவர் 2006 ஆம் ஆண்டினது முகாமைத்துவச் சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கை எம்எஸ்டீ 03 இலக்கப் பிரகாரம் Hm 1-1 தரம் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திலான பதவி வகிக்கும் உத்தியோகத்தராக வேண்டுமாயினும், தற்போது கூட்டுத்தாபனத்தில் அச்சம்பள அளவுத் திட்டத்தில் உள்ளடங்காத பணிப்பாளர்களுக்கு 2017 டிசெம்பர் 01 முதல் மாதாந்தப் போக்குவரத்து படியாக ரூபா 20,000 வழங்கப்பட்டிருந்தது.
		(ii) இப்படி வழங்கப்பட்டவர்களுள் சம்பள அளவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படுவதற்குத் தகைமை அற்ற மற்றும் போலியான கல்விச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்து தற்போது பணிப்பாளர் பதவியில் உள்ள பணிப்பாளர்

ஒருவர் இருப்பதும் அவதானிக்கப்பட்டது.

(ஏ)	2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி	பயன்படுத்தப்பட முடியாத நிலையில் உள்ள வாகனங்களை இனங்கண்டு அவற்றைக் கைதவிர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமாயினும், 2 முதல் 10 ஆண்டுகளாகப் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் உள்ள ரூபா 1,300,000 மீள் பெறுமதியுடைய 2 வாகனங்கள் மற்றும் கிரயத்தை இனங்காண முடியாத வாகனம் ஒன்றும் சுற்றறிக்கைப் பிரகாரம் கைதவிர்ப்புச் செய்யப்படவில்லை.

3. நிதிசார் மீளாய்வு

3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறு ரூபா 71,383,395 இலாபம் ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 55,217,495 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேற்றில் ரூபா 16,165,900 அதாவது, 29 சதவீத அதிகரிப்பு தென்படுகின்றது. ஏனைய செயற்பாட்டு வருமானம் 33 சதவீதமான ரூபா 22,801,224 அதிகரிப்புக்குள்ளானமையே நிகர இலாப அதிகரிப்புக்கான பிரதான காரணமாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்கையில் 2013, 2014 ஆண்டுகளில் நிகர நட்டம் ஏற்பட்டிருந்ததுடன், 2015, 2016 மற்றும் மீளாய்வாண்டில் நிகர இலாபம் ஏற்பட்டிருந்தது. நிதிப் பெறுபேற்றில் ஊழியர்களுக்கான ஊதியம், அரசாங்கத்திற்குச் செலுத்திய வரி மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களது தேய்மானம் என்பவற்றை மீண்டும் சீராக்கல் செய்யும்போது 2016 ஆம் ஆண்டில் ரூபா 813,039,252 ஆகவிருந்த பங்களிப்பு 2017 ஆம் ஆண்டில் ரூபா 812,076,634 வரை குறைவடைந்திருந்தது.

3.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது கணக்குகளில் காணப்படும் புள்ளி விபர பெறுமதிகளின் பிரகாரம் நடைமுறை விகிதமும் துரித விகிதமும் முறையே 1.77 மற்றும் 1.71 ஆகியபோதும், நடைமுறைச் சொத்துக்களில் உள்ளடங்கிய கடன்பட்டோரில் 02 முதல் 42 ஆண்டுகள் வரையான பழமை வாய்ந்த உள்ளூர் கடன்பட்டோர் மீதி ரூபா 53,413,844 மற்றும் வெளிநாட்டுக் கடன்பட்டோர் மீதியான ரூபா 61,918,484 என்பன உள்ளடங்கியமையால் கடனை அறவிடும் ஆற்றலும் திரவவியலும் இல்லாதிருப்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது மொத்த இலாப விகிதம் 6.24 சவீதம் முதல் 10.81 சதவீதம் வரை அதிகரித்திருந்ததுடன், திருகோணமலை ஒலிபரப்புக் கூட விற்பனை வருமானத்துடன் தொடர்புடைய விற்பனைக் கிரயம் ஏனைய கிரயங்களின் கீழ் காட்டப்பட்டமையே இதற்கான பிரதான காரணம் என அவதானிக்கப்பட்டது.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிகர இலாப விகிதம் 8.3 சதவீதம் முதல் 10.82 சதவீதம் வரை அதிகரித்திருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏனைய நானாவித வருமானம் அதிகரித்திருந்தமை இதற்கான காரணமாகியது.

3.3 கூட்டுத்தாபனத்திற்கு எதிராக அல்லது கூட்டுத்தாபனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டபூர்வ நிகழ்வுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பீபல்ஸ் டிரஸ்ட் கிரடிட் இன்வெஸ்மென்ட் கம்பனியால் கூட்டுத்தாபனத்தில் ஒலிபரப்பட்ட நிகழ்ச்சிகளுக்காக பெற வேண்டிய ரூபா 150,000 தொகையை அறவிடுவதற்காக அந்நிறுவனத்திற்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பிரதிவாதி வசிப்பிடத்திலிருந்து சென்றுள்ளதால் வழக்கைத் தொடரமுடியாது 02 ஆண்டுகளுக்கு மேலாக நீதிமன்றம் வழக்கை ஒத்தி வைத்திருந்தது.

(ஆ) லங்கா சீமெந்து கம்பனியின் கூட்டுத்தாபனத்தினால் ஒலிபரப்புச் செய்யப்பட்ட நிகழ்ச்சிகளுக்காக பெற வேண்டியிருந்த ரூபா 471,715 தொகையை அறவிடுவதற்காக அந்நிறுவனத்திற்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்

வழக்கு தொடரப்பட்டிருந்த போதிலும், ரீட் கட்டளையொன்று எடுப்பதற்கு பிரதிவாதியின் சொத்துக்களை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றத்தினால் செய்யப்பட்ட கட்டளையொன்றின் பிரகாரம் கம்பனியின் சொத்துக்கள் தொடர்பான விபரங்களை சமர்ப்பிப்பதற்கு கூட்டுத்தாபனம் செயற்படாமையால் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நீதிமன்றத்தால் வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

(இ) நிறைவேற்றுதர விற்பனை உத்தியோகத்தர் ஒருவரால் 02 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட மோசடிகள் காரணமாக ரூபா 4,716,813 மற்றும் ரூபா 7,551,750 தொகையினை அறவிடுவதற்காக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திலும் கொழும்பு மாகாண நீதிமன்றத்திலும் 02 வழக்குகள் தொடரப்பட்டிருந்த போதிலும் பிரதிவாதி குடியிருந்த இடத்தை விட்டுச் சென்றிருந்தமை காரணமாக வழக்கினை நடாத்திச் செல்ல முடியாமையால் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நீதிமன்றத்தால் வழக்கு விசாரணை செய்யப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) கிராந்துறுகோட்டை ஒலிபரப்புக்கூட பெண் ஊழியர் ஒருவருக்கு சேமலாப நிதியம் கொடுப்பனவு செய்யப்படாமைக்கு எதிராக கொழும்பு மஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்குத் தீர்ப்பின்படி பங்களிப்புத் தொகையாக ரூபா 80,311 உடன் தண்டப்பணமாக ரூபா 80,311 கொடுப்பனவு செய்யப்பட வேண்டுமாயினும் அதற்கு எதிராகக் கூட்டுத்தாபனம் கொழும்பு மாகாண நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்திருந்ததுடன், இவ்வழக்குத் தொடர்பாக வழக்குக் கட்டணமாக மாத்திரம் மீளாய்வாண்டு இறுதி வரை ரூபா 245,000, அதாவது, கொடுப்பனவு செய்ய வேண்டிய இழப்பீட்டுத் தொகையிலும் மும்மடங்கு அதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

4.1.1 திட்டமிடல்

(அ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4(6) ஆம் பிரிவின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டத்துடன்

சமர்ப்பிக்கப்பட வேண்டிய உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம், 2017 - 2019 காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படவில்லை. 2012 - 2016 ஆம் காலப்பகுதிக்குரிய கூட்டிணைந்த திட்டமே கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்தது.

4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1974 ஆம் ஆண்டு தொடக்கம் கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்திருந்த சொத்துக்களில் விற்பனை செய்த அல்லது பயன்படுத்தாது அப்புறப்படுத்தப்பட்ட சொத்துக்களது கிரயத்தை இனங்காணக்கூடியவாறான பதிவேடுகள் பேணப்பட்டிருக்காமையால் அச் சொத்துக்களது கிரயம் கணக்கிலிருந்து அகற்றப்படாது, அதன் காரணமாக, மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட நிலையான சொத்துக்களது மீதியும் நிறுவனத்தில் நேரடியாகக் காணக்கூடியதாகவுள்ள சொத்துக்களுக்குமிடையே வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதுடன், இந்நிலைமையைச் சீராக்குவதற்குப் பொறுப்பாக உள்ளவர்கள் இவ்வறிக்கைத் தினம் வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 02 ஆம் இலக்கக் களஞ்சியக் கையிருப்பு பொருட் கணிப்பு அறிக்கையின் பிரகாரம் பயன்படுத்தப்பட முடியாத சில பொருட்களைக் கைதவிர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தபோதும், அவ்வாறு கைதவிர்ப்புச் செய்யப்பட வேண்டிய பொருட்கள் எவை என்பதைக் கையிருப்புக் கணிப்புத் தாள்களில் குறிப்பிட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனம் பெற்ற வங்கி மேலதிகப்பற்றுக்குச் செலுத்தப்பட்ட மேலதிகப்பற்று வட்டி ரூபா 5,419,200 ஆகும். நிலையான வைப்பு மூலம் பெறப்பட்ட வட்டி வருமானம் ரூபா 4,868,900 ஆகும். அதற்கமைய, மேலதிகத் தொகையை நிலையான வைப்பிலிட்டு மேலதிகப் பற்றைப்

பெற்றிருந்தமையால் கூட்டுத்தாபனம் இழப்பிற்குள்ளான தொகை ரூபா 550,300 என அவதானிக்கப்பட்டது.

(ஈ) தற்போது கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்து தாமாகவே விலகிச் சென்றுள்ள, கூட்டுத்தாபனத்தில் பணியாற்றிய சந்தர்ப்பத்திலும் வேறு நிறுவனங்களுக்கு அவ்வவ்போது விடுவிக்கப்பட்டிருந்த நபர் ஒருவருக்கு 2004 தொடக்கம் 2009 வரை கொடுப்பனவு செய்திருந்த மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய ரூபா 144,722 கணக்காய்வுத் தினமான 2018 செப்டெம்பர் 03 ஆந் திகதியளவிலும் மீளளிப்புச் செய்யப்படாதிருந்தது.

(உ) இருபத்தொரு ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட ரூபா 221,965 பண மோசடி மற்றும் 2007 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அவ்வாறானதொரு ரூபா 281,110 பணமோசடி என்பன காரணமாக நிறுவனத்திற்கு நட்டம் ஏற்பட்டுள்ளமை உறுதியாகியபோதும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் குறித்த இழப்புகள், நட்டங்களைத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நாணயக் கடிதத்தை திறப்பதற்கென ஆரம்பிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்ட வங்கிக் கணக்கொன்றில் ஆண்டு முழுவதும் ரூபா 153 மில்லியனுக்கு மேற்பட்ட பணம் இருந்ததுடன், அத்தொகை வங்கிக் கணக்கில் இருந்தமையால் வட்டி வருமானம் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. அதனை சாதாரண சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்திருந்தால் குறைந்தது ரூபா 14,356,565 வட்டி வருமானத்தையாவது கூட்டுத்தாபனம் சம்பாதித்திருக்க ஏதுவாக இருந்திருக்கும்.

(எ) சீனோர் (CEYNOR) நிறுவனம் தொடர்பாக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஒலிபரப்பிய செய்தி ஒன்றால் சீனோர் (CEYNOR) நிறுவனத்தின் முன்னாள் தலைவர் ஒருவருக்கு மான நஷ்டம் ஏற்பட்டதாகக் கூறி அத்தலைவர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்ததுடன், அதற்கமைய கூட்டுத்தாபனம் ரூபா 10 மில்லியன் கொடுப்பனவு செய்ய வேண்டுமெனவும் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது. இதற்கமைய, கூட்டுத்தாபனம் தனது நோக்கத்திற்கு உட்படும் விதத்தில் ஒழுக்க நெறியுடன் ஒலிபரப்பின் ஊடாக சம்பிரதாயத்தை ஏற்படுத்தவும் பொறுப்புடன் நடுநிலையான தாவல்களை வழங்குவதற்குமான நோக்கம் சிதறும் வண்ணம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பொருட் கணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட 2017 பெப்ரவரி 17 ஆந் திகதியின்போது 99 கையிருப்புப் பொருட்கள் கணக்காய்வில் பரிசீலிக்கப்பட்டிருந்தன. அவற்றுள் 12 விடயங்களது புத்தக மீதிகளுக்கும் உள்ளவாறான மீதிகளுக்குமிடையே வேறுபாடுகள் நிலவியபோதும், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பொருட் கணிப்புச் சபையினது அறிக்கையில் இவ்வேறுபாடுகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. உள்ளவாறான மீதியும் கையிருப்புச் சபையினது புத்தக மீதியும், சமமாக உள்ளதாகக் காட்டப்பட்டிருந்தது. அவ்வாறே, கையிருப்புக் கணிப்பின்போது கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட 01 ஆம் இலக்கக் களஞ்சியத்தில் இருந்த பயன்படுத்தப்படாதிருந்த 19 மின்சாரத் துணைப்பாகக் கையிருப்பும் குறித்த வருடாந்தப் பொருட் கணிப்புச் சபையினது அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

4.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகமாகப் பணியாற்றிய உத்தியோகத்தர் 2015 சனவரி 19 முதல் அப்பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தார். எவ்வாறாயினும், ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 19(3)(ஆ) பிரிவின் பிரகாரம் அவ்வுத்தியோகத்தர் முன்னர் தாம் வகித்த பதவியாகிய பிரதிப் பணிப்பாளர் நாயகப் பதவியில் அமர்த்தப்படவில்லை. அதற்குப் பதிலாக அமைச்சரவையின் அங்கீகாரமின்றி பணிப்பாளர் சபையினது அங்கீகாரத்துடன் 2015 ஒக்டோபர் 19 முதல் கூட்டுத்தாபனத்தின் மதியுரையாளர் பதவி ஒன்றில் அமர்த்தப்பட்டபோதும், தாம் அப்பதவியை பொறுப்பேற்க முடியாது என அறிவித்திருந்தார். எனினும், பணிப்பாளர் நாயகத்திற்குரிய உத்தியோகபூர்வ மனை, உத்தியோகபூர்வ வாகனம், எரிபொருள், சம்பளம், ஊழியர் சேமலாப நிதியம், தொலைபேசிக் கட்டணம் என 2015 முதல் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,227,353 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வுத்தியோகத்தர் ஓய்வுபெற்றுச் சென்றதன் பின்னர் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் 06 மாதகால சேவை நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. குறித்தவொரு பொறுப்பும் ஒப்படைக்கப்படாது ஓய்வு பெறுவதற்கு முன்னர் பெற்ற சம்பளமும் ஏனைய வசதிகளும் அங்கீகரிக்கப்பட்டிருந்தன.

(ஆ) ஸ்பானிய வழங்குனர் நிறுவனம் ஒன்றினது விற்பனை முகாமையாளரது 2017 சனவரி 25 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் கேட்கும் வசதிகள் அடங்கிய கணனி தொடர்பான தொழிற்சாலைப் பயிற்சிக்கு கூட்டுத்தாபனத்திலிருந்து பங்குபற்றும் 2 உத்தியோகத்தர்களது சகல செலவுகளையும் ஸ்பானிய வழங்குனரே ஏற்றுக் கொள்வதாகக் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், உள்ளூர் முகவர் நிறுவகத்தினது முகாமைத்துவப் பணிப்பாளரது கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு 2 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 341,848 உணவுக்கான செலவினமாக வழங்கப்பட்டிருந்தது.

4.5 குறைபாடுகளாகத் தோற்றுபவை

2016 ஆம் ஆண்டின்போது தலைமை அலுவலகத் தொடர்புக் கூடம் c_1 - c_{12} நவீனமயப்படுத்தப்படல் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படும் சந்தர்ப்பத்திலேயே கூடத்திற்குத் தேவைப்படும் 12 கேட்கும் கலவைகள் (Mixer Console) கொள்வனவு செய்யப்படுவதற்குத் திட்டமிடப்பட்டு அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறிருக்க, 2016 ஆம் ஆண்டில் 06 Mixer Console மற்றும் மேலும் 06 ஐ 2017 ஆம் ஆண்டிலும் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் மூலம் நிறுவனத்திற்கு ரூபா 6,452,319 இழப்பு ஏற்பட்டிருந்தது.

4.6 நிதியத்தை குறைவாகப் பயன்படுத்துதல்

2017 ஆம் ஆண்டில் மூலதனச் செலவினமாகப் பெறப்பட்ட அரசாங்க மானியம் ரூபா 214.3 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும், கொடுப்பனவு உறுதிச் சான்றுகளின் மூலம் மூலதனச் செலவினம் ரூபா 175.6 மாத்திரமே ஆகியமையால் மூலதனச் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தில் ஏறக்குறைய 18 சதவீதம் எஞ்சியிருந்தது.

4.7 பயன்படுத்தப்படாத / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரணவிலவில் அமைந்துள்ள அமெரிக்க குரல் ஒலிபரப்பு நிலையம் பயன்படுத்தி கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைத்துள்ள செயற்படும் நிலையில் உள்ள சிறிய அலைவரிசை டிரான்ஸ்மீட்டர் இயந்திரம் ஒன்று கணக்காய்வு மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பமாகிய 2018 செப்டெம்பர் 3 வரை எதுவிதத்திலும் பயன்படுத்தப்படாது,

பாதுகாப்பற்றவாறு திருகோணமலை ஒலிபரப்பு வளாகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பழுதுபார்த்துப் பயன்படுத்தக் கூடிய மோட்டார் வாகனம் ஒன்று 1 ½ ஆண்டுகள் பூராகவும் பயனற்றவாறு கொழும்பு தலைமை அலுவலக வளாகத்தில் இருந்தது.

4.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

குறித்த தினத்தில் வரியைச் செலுத்தாமையால், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரி நிலுவை அறிக்கைகளின் பிரகாரம், கணக்காய்வுத் தினமான 2018 செப்டெம்பர் 17 ஆந் திகதியளவில் பொருளாதாரச் சேவைக் கட்டணம், தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, பெறுமதி சேர் வரி நிலுவையாக ரூபா 90,054,857 மற்றும் அவற்றிற்குரிய மொத்தத் தண்டப்பணமாக ரூபா 51,684,603 என்பன உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட வேண்டியிருந்தது.

4.9 இனங்காணப்பட்ட இழப்புகள்

2018 மார்ச் மாதத்தில் ஹப்புத்தளை ஒலிபரப்புக்கூட வளாகத்தில் இருந்த ரூபவாஹினி நிறுவனத்திற்குரியதும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் பாதுகாக்கப்பட வேண்டியதுமான ஆர்எப் கேபள் ஒன்றினது பகுதி அத்துமீறி வெட்டி அகற்றப்பட்டமை தொடர்பாக ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப்பட்டபோதும், ஏறக்குறைய 3½ அங்குல சுற்றளவுடைய செம்பிலான இக்கம்பி தொலைந்து போனதால் ஏற்பட்ட இழப்பைப் பொறுப்பானவர்களிடமிருந்து அறவிடுவதற்கு கணக்காய்வுத் தினமான 2018 செப்டெம்பர் 03 ஆந் திகதியளவிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.10 முறையாகச் சுவீகரிக்கப்படாத காணிகளில் / சொத்துக்களில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒலிபரப்புத் திணைக்களம் செயலாற்றியதும், தற்போது ஒிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் பயன்படுத்தப்படுவதுமான கொழும்பில் உள்ள 2.5036 ஹெக்டேயார் காணி 1949 தொடக்கம் பயன்படுத்தப்பட்டவாறிருந்தபோதும், இதுவரை நிறுவனம் சட்டபூர்வமாக அதனைச் சுவீகரிப்பதற்குத் தவறியிருந்தது.

(ஆ) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.3.1 ஆம் பந்தியின் பிரகாரம், கட்டிடங்களை நிர்மாணிக்கும்போது பொருட் கொள்வனவு நிறுவனம் காணியைச் சுவீகரிக்கும் நடவடிக்கைகளை நிறைவேற்றியுள்ளதாகவும் செயற்திட்டம் தடையின்றி அமுலாகுவதற்குத் தேவையான ஏனைய சகல விடயங்களும் நிறைவேற்றியுள்ளதாகவும் உறுதி செய்யப்படுவது பொருட் கொள்வனவு உத்தியோகத்தர்களது பொறுப்பும் கடமையும் ஆகுமாயினும், பொறுப்பானவர்களிடமிருந்து விளக்கம் பெறப்படாது கூட்டுத்தாபனம் தனது உரித்தாகக் கொண்டிருந்த பழைய கட்டிடத்துடன் கூடிய 23 பர்ச்சஸ் வளமுடைய "அனிவத்த பஹிரவ கந்த" எனும் இடத்திலிருந்து 500 மீட்டர் தூரத்தில் உள்ள உயர்கல்வி அமைச்சிற்குச் சொந்தமான காணி ஒன்றில் கந்துரட்ட சேவைக்கென இருமாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் ஒப்பந்தகாரர் ஒருவருக்கு ரூபா 1,579,442 வழங்கியிருந்தது.

(இ) முதலீட்டுச் சபையால் வழங்கப்பட்ட பயணஞ் செய்யும் நிலையில் உள்ள வாகனமொன்று 2010 ஆம் ஆண்டில் ரூபா 2,300,000 ஆக மீளப் பெறுமதியிடப்பட்டுக் கணக்கிலிடப்பட்டிருந்தது. எனினும்,அதன் உரித்தைச் சரிவர சுவீகரிப்பதற்கு 2018 செப்டெம்பர் 3 ஆந் திகதியளவிலும் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

4.11 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட நிறுவனத்தின் வளங்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பந்தியின் பிரகாரம் அரச கூட்டுத்தாபன ஊழியர்கள் அமைச்சரவை அங்கீகாரமின்றி வேறு நிறுவனங்களுக்கு விடுவிக்கப்படலாகாது. எனினும், நிர்வாக (கிராமிய) உத்தியோகத்தர் ஒருவரும் முதலாம் தரத்தில் உள்ள அறிக்கை வழங்குனர் ஒருவரும் அமைச்சரவையின் அங்கீகாரமின்றி ஏனைய இரு அமைச்சுக்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர்.

4.12 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 செப்டெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளுடன் இணங்கி வருமாறு,

புதிய ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு விதிமுறைகள் கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 ஆகஸ்ட் மாதமளவிலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் நிரந்தர பதவியணியினரது எண்ணிக்கை 803 ஆகும். அதில் 302 பேர் மிகையாக இருந்தோராகும்.

(இ) கூட்டுத்தாபனத்தின் 03 பிரதான நிறைவேற்றுதரப் பதவிகளான மேலதிகப் பணிப்பாளர் நாயகம், பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிதி), பிரதிப் பணிப்பாளர் நாயகம் (பொறியியல்) என்பன 03 முதல் 09 ஆண்டுகளாக வெற்றிடமாக இருந்தன. அவ்வாறே, பிரதிப் பணிப்பாளர் நாயகம் (பொறியியல்), பணிப்பாளர், பொறியியல் (கூடம்), பொறியியல் அத்தியட்சகர் பொறியியலாளர் போன்ற பதவிகளில் 01 முதல் 04 ஆண்டுகளாக 08 வெற்றிடங்கள் நிலவின. இவ்வெற்றிடங்கள் நிரப்பப்படாமையால் பொறியியல் பிரிவின் கடமைகள் தரம் வாய்ந்தனவையாக நிறைவேற்றப்படாது போனமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்படாத 47 பதவிகளுக்கு 227 பேர் பதவிகளில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

(உ) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆட்சேர்ப்பு நடைமுறையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம், உள்ளக விண்ணப்பதாரர் பொறியியலாளர் பதவிக்கு நியமனஞ் செய்யப்படும்போது கூட்டுத்தாபனத்தின் முதலாந்தர தொழில்நுட்ப உதவியாளர் தரத்தில் 05 ஆண்டுகால சேவையைப் பூர்த்தி செய்திருக்க வேண்டுமாயினும், 1985 ஆம் ஆண்டிலும் 2002 ஆம் ஆண்டிலும் முதலாந்தர தொழில்நுட்ப உதவியாளர் பதவியில் 05 ஆண்டுகால சேவையைப் பூர்த்தி செய்திராத 2 உத்தியோகத்தர்கள் பொறியியலாளர் பதவிக்கு நியமனஞ் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

4.13 வர்த்தகச் சந்தைப் பிரிவு

இலங்கை விற்பனை ஆராய்ச்சிப் பணியகத்தின் (LMRB) அறிக்கையின் பிரகாரம் 29 ஒலிபரப்பு அலை வரிசைகளில் 2017 செப்தெம்பர் மாதமளவில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் பராமரிக்கப்படும் 08 பிரதான உள்ளூர் சிங்கள சேவைகளுள் சிங்கள ஜாதிக சேவை 10 ஆம் இடத்திலும் ஏனைய 07 சேவைகள் அதற்குக்

குறைந்த இடத்திலும் இருந்தன. பிரதேச சேவைகளில் றுஹுனு சேவை 24 ஆம் இடத்தில் இருந்தது.

5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

5.1 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினது செயலாளரினால் வெளியிடப்பட்ட கடிதம் மற்றும் நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் செயலாற்ற வேண்டுவதுடன், மீளாய்வாண்டு தொடர்பாக தமது பரப்பெல்லைக்குள் வரும் பணிகளை எவ்வாறு நிறைவேற்ற வேண்டுமென்பதைக் கூட்டுத்தாபனம் அறிந்திருக்கவில்லை.

(ஆ) மேற்கூறியவாறு 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாகக் கூட்டுத்தாபனம் அறிந்திராமையால் அப்பணிகள் தொடர்பான நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள், அவ்விலக்கை எய்தும் வழிவகைகள், இலக்கை அளவிடுதல் போன்றவற்றுக்கான சுட்டுக்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

6.1 பொருட் கொள்வனவும் ஒப்பந்தச் செயற்பாடுகளும்

6.1.1 பொருட் கொள்வனவு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க மூலதனப் பங்களிப்புடன் நடைபெறும் பொருட் கொள்வனவுகளுக்கு மாத்திரமே வருடாந்த பொருட் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், மீண்டெழும் பங்களிப்புடைய மற்றம் கூட்டுத்தாபன நிதியத்தின் மூலம் நடைபெறும் பொருட் கொள்வனவுகளும் உள்ளடங்குமாறு குறைந்தது 03

ஆண்டுகளுக்கான பொருட் கொள்வனவுத் திட்டமேனும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கமைய, ஓராண்டிற்கு மேலாகத் தொடரக் கூடிய செயற்திட்டங்களுக்கான பொருட் கொள்வனவுகள் மற்றம் பொருட் கொள்வனவுக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு இதுவரை குழுவின் சிபாரிசு அமுலாகாதிருக்கும் பொருட் கொள்வனவுகளும் எதுவித பகுப்பாய்வுக்கும் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016, 2017 ஆம் ஆண்டுகளில் தலைமை அலுவலக தொடர்புக் கூடத்தை நவீனமயப்படுத்தல் மற்றும் FM அலைவரிசைக் கூடத்தை நவீனமயப்படுத்தல் என்பவற்றிற்கு முறையே ரூபா 80 மில்லியன் மற்றும் ரூபா 193.75 எனப் பொருட் கொள்வனவுகளுக்குத் திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் முறையே ரூபா 43 மில்லியன் மற்றும் ரூபா 88.7 மில்லியன் பொருட் கொள்வனவுகள் மாத்திரமே நடைபெற்றதால் முறையே ரூபா 37 மில்லியன் மற்றும் ரூபா 105.05 மில்லியன் என்பவற்றிற்கான பொருட் கொள்வனவுகள் திட்டமிட்டபடி நடைபெறவில்லை.

(இ) வருடாந்தம் ஏறக்குறைய ரூபா 200 மில்லியனுக்கான கொள்வனவுகளைக் கூட்டுத்தாபனம் மேற்கொண்டபோதும், பொருட் கொள்வனவுக்கென வேறாக ஒரு பிரிவு இல்லாமையால் உள்ளகக் கட்டுப்பாடு நலிவடைவதற்குப் பெருமளவு காரணமாக அமைந்தது. அதற்கமைய, பொருட் கொள்வனவின்போது தவறு ஏற்படக்கூடிய சாத்தியத்தைக் குறைப்பதற்கான கொள்கை, நடைமுறை, விதிகள் மற்றும் தாபன வியூகம் போன்ற உள்ளகக் கட்டுப்பாட்டு விதிமுறைகள் அறிமுகஞ் செய்து வைக்கப்படாதிருந்தன.

6.2 ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

2015 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

6.3 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையின் தீர்வு செய்யப்படாத பந்திகள் பின்வருமாறு

(அ) புத்தூரில் அன்டனா கோபுரத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள், நிர்மாணத்திற்கான நிதி மற்றும் தொழில்நுட்ப ஆற்றலினைக் கவனத்தில் கொள்ளாமல் பெறுகைகள் வழிகாட்டிகளிலிருந்து விலகி 2011 யூலை 16 ஆந் திகதி கைப்பணிகள் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக முற்பணமாக கைப்பணிகள் சபைக்கு ரூபா 9,126,933 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது ஒப்பந்தம் கைவிடப்பட்டிருந்தது. செலுத்திய முற்பணத் தொகையில் ரூபா 4,348,041 மாத்திரம் கூட்டுத்தாபனத்திற்கு மீள செலுத்தப்பட்டமையால், ரூபா 4,778,892 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) 1996 ஆம் ஆண்டின்போது 60 மீட்டர் மற்றும் 100 மீட்டர் உயரமான 2 அன்டனா கோபுரங்களை கொண்டு வருவதற்காக ரூபா 23,119,683 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், கோபுரங்களைப் பொருத்துவதற்காக தனியார் நிறுவனமொன்றுக்கு முற்பணமாக ரூபா 2,568,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. பொருத்தப்பட வேண்டிய இடங்கள் தீர்மானிக்கப்பட்டிராமையால், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கோபுரங்கள் பொருத்தப்பட்டிராததுடன், அந்த உபகரணங்கள் ஏக்கலை நிலப்பிரதேசத்தில் பாதுகாப்பற்ற முறையில் குவித்து வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) கூட்டுத்தாபனத்தினால் ரூபா 860,000 செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்த இரு வீடுகளுக்குரிய (அநுராதபுரம் மற்றும் கண்டி) ஒப்படைப்பு சான்றிதழைப் பெற்று உரிய முறையில் உரித்தினை பெற்றுக்கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம், ஏதாவதொரு சொத்தின் மூலம் எதிர்கால நலன் நிறுவனத்தை வந்தடையுமாயின், அச்சொத்தினது கிரயம் விசுவாசமாகக் கணிப்பிடக் கூடியதாகவிருந்தால் அதனை ஒரு சொத்தாக இனங்காண முடியுமாயினும், ஊடக அமைச்சிலிருந்து பெறப்பட்ட ரூபா 2,200,000 காப்புறுதிப் பெறுமதியுடன் கூடிய 058-6222 ஆம் இலக்க மோட்டார் வாகனம்2014 தொடக்கம் கூட்டுத்தாபனத்தால் பயன்படுத்தப்பட்டபோதும் அது நிலையான சொத்தாக இனங் காணப்பட்டுக் கணக்கிலிடப்பட்டிருக்கவில்லை.

(உ) பழுதடைந்து 10 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்படாது ஏகல ஒலிபரப்பு வளாகத்தில் தரித்து வைக்கப்பட்டிருக்கும் மஹாவலி அதிகாரசபையால் வழங்கப்பட்ட ஸ்ரீ 60-355 இலக்கமுடைய வாகனம் 2010 ஆம் ஆண்டில் ரூபா 150,000 பெறுமதியில் மீள மதிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்பட்டிருந்தபோதும், இதுவரை அதன் உரித்தை தீர்வு செய்து அதனைக் கூட்டுத்தாபனம் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் அதனை கைதவிர்ப்புச் செய்ய முடியாத நிலைமையும் உருவாகியிருந்தது.

(ஊ) 1989 ஆம் ஆண்டில் யப்பானிய ரூபவாஹினி மற்றும் யப்பானிய ஒலிபரப்பு நிலையம் (NHK) என்பவற்றின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டத்தின் முடிவில் ஒலிபரப்புக்கூடக் கட்டிடம் மற்றும் சகல இயந்திரங்கள் என்பன 1993 ஆம் ஆண்டில் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தலைமை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அக்காணியும் கட்டிடங்களும் 2011 யூலை 29 ஆந் திகதிய விலை மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் ரூபா 960,000,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தபோதும், சொத்து எதுவுமே கணக்கிலிடப்பட்டிராததுடன், செயற்திட்டத்துடன் தொடர்புடைய கோவை எதுவுமே கணக்காய்விற்குச் சமர்பிக்கப்படவுமில்லை.

(எ) உடன்படிக்கைப் பிரகாரம், குத்தகை வாடகையைச் செலுத்தாமையால் கூட்டுத்தாபனத்திற்குரிய நுவரேலியா "நிவஹன" விடுமுறை விடுதியின் குத்தகையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு குத்தகையாளர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருந்தபோதும், 2005 முதல் 2014 பெப்ரவரி வரை உடன்படிக்கைப் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய குத்தகை வாடகையாகிய ரூபா 5,106,500 மற்றும் குத்தகையை பெற்றவரிடமிருந்து சொத்தினது உரித்தை மீண்டும் பெறுவதற்கு 2010 ஆம் ஆண்டு முதல் செலவாகிய வழக்குச் செலவினமாகிய ரூபா 2,151,206 ஐ அறவிடுவதற்குக் கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 ஆகஸ்ட் 31 வரை கூட்டுத்தாபனம் சட்டபூர்வ நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஏ) அம்பேவல ஒலிபரப்புக் கூடத்தை நிர்மாணிப்பதற்கு 1984 ஆம் ஆண்டில் நுவரேலியா மற்றம் வெலிமடை பிரதேச செயலகங்களின் அதிகாரத்துக்குட்பட்ட ஏறக்குறைய 30 ஏக்கர் காணி அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், குத்தகை உடன்படிக்கையின் மூலம் சட்டரீதியாக இக்காணியைச் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திராததுடன், 2017 டிசெம்பர் 31 வரை உத்தேச பணிக்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இக்காணியில் நுவரேலியா பிரதேச

செயலகத்திற்குரிய ஏறக்குறைய 06 ஏக்கர் காணிக்கான குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கையில் இக்காணியின் ஒரு பகுதியை "விதுலங்கா" எனும் தனியார் நிறுவனத்திற்கு வழங்குவதற்கு பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுத்திருந்தார். வெலிமடை பிரதேச செயலாளருக்குரிய ஏறக்குறைய 24 ஏக்கர் காணியின் குத்தகை உரித்தைப் பெறுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. காணியில் உள்ள சுற்றுலா விடுதிகள் இரண்டை மாத்திரமே கூட்டுத்தாபனம் நடாத்தியவாறிருந்தது.

(ஐ) எப்எம் ஒலிபரப்புக் கூடத்தை நிர்மாணிப்பதற்கு 1990 ஆம் ஆண்டின்போது ரூபா 50,000 க்குக் கொள்வனவு செய்திருந்த 1.503 ஹெக்டேயார் கலபுவாவயில் உள்ள செழிப்பான காணி கணக்காய்வுத் தினமான 2018 செப்டெம்பர் 03 வரை உத்தேச பணிக்குப் பயன்படுத்தப்படாதிருந்தது. அதில் 19.77 பர்ச்சஸில் கோபுரம் ஒன்றை அமைத்து லங்கா பெல் நிறுவனம் 2011 ஆம் ஆண்டு முதல் இயங்கியவாறிருந்தது. மாதாந்தம் ரூபா 15,000 ஐ செலுத்துவதற்கு அந்நிறுவனம் உடன்பட்டிருந்தபோதும், இதுவரை சட்டபூர்வமாக குத்தகை உடன்படிக்கையில் ஈடுபடுவதற்கு இயலாது போனமையால் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் நிறுவனம் பெற வேண்டிய காணி வாடகை வருமானத்தை அறவிட முடியாதிருந்தது.

(ஒ) நுவரேலியா பிரதேச செயலாளருடன் ஏற்பட்ட உடன்படிக்கைப் பிரகாரம் குத்தகை உடன்படிக்கை மூலம் பெறப்பட்ட நுவரெலியா "நிவஹன" விடுமுறை விடுதியின் குத்தகைக் காலம் 2015 ஒக்டோபரில் முடிவடைந்திருந்தது. அத்தினம் முதலாக சொத்தின் உரித்து பிரதேச செயலாளரைச் சாருமாயினும் அதனைக் கருத்திற் கொள்ளாது 2015 யூன் 01 முதல் 03 ஆண்டுகளுக்கு மாதாந்தம் ரூபா 290,000 குத்தகை வாடகைக்கு விடுமுறை விடுதியை நடாத்துவதற்கான குத்தகை ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான குத்தகை வாடகை நிலுவை ரூபா 725,000 ஆகும். இவ்வாறு கூட்டுத்தாபனத்திற்கு உரித்தற்ற சொத்து ஒன்றை குத்தகைக்கு வழங்குவது சர்ச்சைக்குரிய விடயமாக அவதானிக்கப்பட்டது.

(ஓ) ஒலிபரப்புச் சேவையை தன்னிச்சையாக இயங்கச் செய்வதற்கு 2008 முதல் பல சந்தர்ப்பங்களில் ரூபா 3,212,113 கூட்டுத் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2017 டிசெம்பர் மாதமளவிலும் அச்சேவை மூலம் பெறக்கூடிய வசதிகளைப் பெறுவதற்கு இயலுமானவாறு அம் மென் அணி 03 சேவைகளில் மாத்திரமே ஈடுபடுத்தப்பட்டிருந்தது. மென் அணியைப் பெறுதவற்கு பெருமளவு

பணத்தைச் செலவழித்தபோதும், அநேக பணிகள் இதுவரை தன்னிச்சையாகச் செயற்படாமை அவதானிக்கப்பட்டது.

(ஒள) ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 125 ஏக்கர் சீதுவ காணியில் ஒவ்வொன்றும் 10 பேர்ச்சஸ் உடைய 1027 துண்டுகள் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் இணக்கமில்லாது 2000 - 2001 காலப்பகுதியின்போது கட்டானை பிரதேச செயலாளரினால் பொதுமக்களுக்கிடையே வழங்கப்பட்டிருந்தது. 2018 செப்டெம்பர் 3 ஆந் திகதிய கணக்காய்வுத் தினம் வரை காணியின் உரித்து கூட்டுத்தாபனத்திற்குரியதாகவிருந்தபோதும், இழப்பீட்டைப் பெறுவதற்கு போதியளவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(க) 2016 ஒக்டோபர் 19 முதல் 2017 ஒக்டோபர் 27 வரையான காலப்பகுதியில் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பில் இருக்கையிலேயே மின் உற்பத்திப் பிரிவில் பயன்படுத்தப்பட்டவாறிருந்த ரூபா 425,000 பெறுமதியான கவர் லொகர் அளவை உபகரணம் தொலைந்திருந்ததுடன், பாதுகாப்புப் பிரிவினரின் வாக்குமூலத்திற்கமைய இந்த இயந்திரம் அப்பிரிவிலேயே தொலைந்து போயிருந்தமை உறுதியாகியிருந்தும் ஏற்பட்ட இழப்பைப் பொறுப்பான நபர்களிடமிருந்து கணக்காய்வுத் தினமான 2018 செப்டெம்பர் 05 ஆந் திகதியளவிலும் அறவிட்டிருக்கவில்லை.

7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது கூட்டுத்தாபனத் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை	அவதானிப்புகள்	
(அ) சொத்து முகாமைத்துவம்	(i)	கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட காணிகளது சட்ட ரீதியான உரித்தைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்காமை.

(ii) கூட்டுத்தாபனத்திற்குரிய காணிகளைப் பாதுகாப்பதற்கு இயலாமை மற்றும் பெருமளவு காணி பயன்படுத்தப்படாமை.

(iii) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமானபோதும் அது பயன்படுத்தப்படாமையால் வெளி நபர்கள் அவற்றை அத்துமீறிக் கைப்பற்றல்

(iv) காணிகளும் கட்டிடங்களும் நேரடிச் சரி, பிழை பார்த்தலுக்கு உட்படுத்தப்படாமை.

(v) பல நிலையான சொத்துக்களது கிரயம் மற்றும் அவை எங்குள்ளன என்பவற்றை வெவ்வேறாக இனங்காண முடியாமையால் பெருமளவு பழமை வாய்ந்த சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தும் அவற்றை புத்தகங்களிலிருந்து நீக்கியிராமை.

(vi) வாகனங்கள் நேரடி சரி, பிழை பார்த்தலுக்கு உட்படுத்தப்படாமை.

(ஆ) பெற வேண்டிய கணக்குகள்

(i) 42 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்த கடன் மீதிகள் அறவிடப்படாதிருந்தமை.

(ii) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கும் பட்டோலைகளுக்குமிடையே உள்ள

			வேறுபாடுகளை இனங்கண்டு அவற்றை இணக்கஞ் செய்வதற்கான நடவடிக்கை எடுக்காமை.
(இ)	கையிருப்புக் கட்டுப்பாடு	(i)	கையிருப்புக் கணிப்பின்போது இனங்காணப்பட்ட கையிருப்புக் குறைகளையும் மிகைகளையும் பொருட் கணிப்புச் சபை அறிக்கையிடாமை.
		(ii)	கையிருப்பு விடயங்களது தரவுகள் கணனி மயப்படுத்தப்படாமையால் கையிருப்பு அறிக்கைகளைப் பெறுவதில் அதிக காலம் ஏற்பட்டமை.
(ஈ)	கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்	(i)	கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கிற்கும் பட்டோலைகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை இனங்கண்டு அவற்றை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை.
		(ii)	சேர்ந்து நின்ற செலவினம் 02 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்குமிடையே கொடுப்பனவு செய்யப்படாதிருத்தல் மற்றும் அச் சேர்ந்து நின்ற செலவினங்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய காலம் கடந்தோ அல்லது உள்ளவாறு பொறுப்பு இல்லாத செலவினம் இருப்பின் அவற்றைப் பகுப்பாய்வு செய்து தீர்வு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாமை.
		(iii)	வரிக்குரிய பொறுப்பு மற்றும் ஆண்டிற்குரிய உரிமை முறையாக

		இனங்காணப்பட்டு அவற்றைக் குறித்த தினத்தில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் அந்நிலுவை வரிக்குத் தண்டப்பணம் செலுத்த வேண்டியேற்பட்டமை.
(உ)	பதவியணி நிர்வாகம்	(i) ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்படாமை
		(ii) அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்குத் தொடர்ந்து ஆட்சேர்க்கப்படுவதால் மிகை ஏற்பட்டமை.
		(iii) முறையாக நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டிருந்தும் பதவிக்குரிய தகைமைகள் அற்றோர் இரத்துச் செய்யப்பட்ட நேர்முகப் பரீட்சைகளின் பெயரால் ஆட்சேர்க்கப்பட்டமை.
(ஊ)	கணக்கீடு	(i) கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டு விதிமுறைகள் நாளதுவரையாக்கப்படாமை
		(ii) சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம், செலவினக் கணக்குகளில் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டமை.
		(iii) கணக்கீட்டின்போது பிரதான தோற்றுவாய் ஆவணமான நாட்குறிப்பு இலக்கங்கள், பெறுமதி, குறியீடு என்பவற்றைக் குறிப்பிடுகையில் குறைபாடுகள் நிலவியமை.

(எ) பொருட் கொள்வனவு

(i) விரிவான பொருட் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்படாமை.

(ii) ஒலிபரப்புக்கூட நவீனமயப்படுத்தல் ஒப்பந்தங்களின்போது குறைபாடுகளுடன் அவை ஒப்படைக்கப்பட்டமை.

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

2017 ஆம் ஆண்டு கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் கருத்துக்கள்

1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14 (2) (சீ) பிரிவின் பிரகாரம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31 ஆந் தேதியில் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

மேலே குறிப்பிட்ட விடயங்கள் பற்றிய தங்களின் எம்ஈடி/ஏ/எஸ்எல்பீசீ/1/17/477 இலக்கமும் 2018.09.20 திகதியும் கொண்ட 14 (2) (சீ) வரைவு அறிக்கையுடன் தொடர்புடையது.

இவ்வறிக்கை சம்பந்தமாக கணக்காய்வு அத்தியட்சகருடன் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்கள் 2018.09.21 மற்றும் 25 ஆகிய திகதிகளில் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளின்போது தயாரித்த அறிக்கைக்கு மேலதிகமானது.

அறிக்கையின் 1.2,1.3 பந்திகளில் குறிப்பிட்ட விடயங்களுடன் இணங்குகிறேன்.

2.2.1 இந்த பந்தியில் குறிப்பிட்ட தகவல்கள் 2017.12.31 ஆந் திகதியில் முடிவடைந்த கணக்குகளின்படி சரியானதே. ஆனால் 2016 ஆம் ஆண்டுடன் சார்புரீதியாக 2017 ஆம் ஆண்டில் அரச கொடைகளை சீராக்க முன்னர் தொழிற்பாட்டு நட்டம் குறைவடைந்துள்ளது. அரசாங்கத்திற்காக அமுலாகின்ற அரச ஒலிபரப்பானது திறைசேரி நிதியேற்பாடுகளின் பேரில் பேணிவரப்படுகின்றதெனக் கருத்திற்கொண்டு கூட்டுத்தாபனத்தின் வழியுரிமை தொடர்பில் நிச்சயமற்றதன்மை நிலவுகின்றதெனும் அபிப்பிராயத்துடன் இணங்க இயலவில்லை.

2.2.2 **இலங்கை கணக்கீட்டு நியமங்கள**

(அ) நியமம் இலக்கம் 01

கணக்குகளை மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டில் இறுதிக் கணக்குகளில் சரக்குத்தொக்குப் பண்டங்கள் குறிப்புகளின்கீழ் வெளிக்கொணரப்பட்டுள்ளன.

(ஆ) நியமம் இலக்கம் 07

i 2018 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கறிக்கைகள் மூலமாக சரிசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ii 2018ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் மூலமாக நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) நியமம் இலக்கம் 17

நுவரெலியா காணி

இது அம்பேவெலயில் அமைந்துள்ள நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவுக்குச் சொந்தமான காணியாகும். அதாவது அக்காணித்துண்டினை 2.520 ஹெக்டெயார் பகுதியை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு குத்தகை உடன்படிக்கையின் பேரில் வழங்க கௌரவ அமைச்சர் அங்கீகரித்து மதிப்பீடு நுவரெலியா பிரதேச செயலாளரால் கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க மேற்படி ஆரம்பத் தொகையான 'ரூ.1,248,000/= 2013.11.21 ஆந் திகதிய 072938 ஆம் இலக்கமுடைய இலங்கை வங்கி காசோலை மூலமாக செலுத்தப்பட்டுள்ளது. அதன் பின்னர் 2014.08.29 ஆந் திகதிய கடிதம் மூலமாக நுவரெலியா பிரதேச செயலாளரால் இக்காணியை மீண்டும் நிலஅளவைசெய்ய அவசியமெனவும் அதற்கான காரணம் விண்ட் பவர் பிரைவேற் கம்பெனிக்கு 2014.02.21 ஆந் திகதி 2.3583 ஹெக்டெயார் வழங்கப்பட்டுள்ளமையால் நுவரெலியா காணிப்பகுதியிலிருந்து அந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள பகுதியை நீக்கி எஞ்சிய பகுதியை மாத்திரம் கூட்டுத்தாபனத்திற்கு குத்தகைக்கு வழங்குவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக நுவரெலியா பிரதேச செயலாளரின் அறிவித்தலின்பேரில் கூட்டுத்தாபனத்தினால் 2016.08.04 ஆந் திகதிய 686015 ஆம் இலக்கமுடைய இலங்கை வங்கி காசோலை மூலமாக 'ரூ.59,716.30 பணத்தொகை நுவரெலியா சிரேஷ்ட நிலஅளவையாளர் அத்தியட்சகருக்கு செலுத்தப்பட்டுள்ளது. அதற்கமைவாக நிகழ்காலத்தில் நிலவுகின்ற காணி அளவின் அடிப்படையில் பணத்தொகை மீள்மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். இது சம்பந்தமாக பிரதேச செயலாளர் செயலாற்றி வருவதோடு நிலுவை குத்தகை பற்றி அறிவிக்கப்படவில்லை. கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிலுவைக் குத்தகைத்தொகை கிடையாதென்பதை அறிவிக்கிறேன்.

குச்சவெளி காணி

இக்காணி டொயிஸ்வெல் கருத்திட்டத்தைப் பேணி வருவதற்காக கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டில் குத்தகைக் காலத்தை நீடிப்பதற்காக குத்தகை உரிமையை கூட்டுத்தாபனம் கோரியுள்ளது. அதற்கிணங்க குத்தகை செலுத்துவதற்காக கிழக்கு மாகாண காணி ஆணையாளரால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. அந்த குத்தகைத் தொகையை நீக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு செயலாளர் மூலமாக வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஹுன்னஸ்கிரிய காணி

ஹுன்னஸ்கிரிய ஒலிபரப்பு நிலையம் அமைந்துள்ள காணிக்காக அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்-

திற்கு கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள குத்தகைத் தொகை செலுத்தவேண்டி உள்ளது.

ii உடன்படிக்கை இன்மையால் தகவல்கள் பற்றிய குறிப்பினைப் பதிதல் 2018 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் மூலமாக மேற்கொள்ளப்படும்.

(ஈ) நியமம் இலக்கம் 19

i. 2018 ஆம் ஆண்டில் கணக்குகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

ii. கணக்குகளை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

iii. 2018 ஆம் ஆண்டில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) நியமம் இலக்கம் 21

i. 2018 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் மூலமாக சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ii. 2018 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் மூலமாக சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.2.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2018 ஒகஸ்ட் 31 இல் சரிசெய்யப்பட்டுள்ளது.

(ஆ) 2018 ஆம் ஆண்டின் ஓகஸ்ட் 31 இல் சரிசெய்யப்பட்டுள்ளது.

(இ) 2018 ஆம் ஆண்டின் ஜனவரி, பெப்ரவரி மாதமளவில் இது பிராந்திய அலுவலகங்கள் மூலமாக நாளேட்டுக் குறிப்புகள் இடப்பட்டு சரிசெய்யப்படும். இது பொதுவான நடைமுறையாகும்.

(ஈ) இது சம்பந்தமாக விசாரணையொன்று மேற்கொள்ளப்படுவதால் அவ்வறிக்கையின் விதப்புரைகளின் பேரில் சொத்துக்களிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(உ) கட்டடம் ரூ. 250,000/= இற்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. கட்டடம் அமைந்துள்ள காணி பிரதேச செயலாளரிடமிருந்து குத்தகைபெறப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

(ஊ) கணக்காய்வு அவதானிப்பு சரியானதே.

(எ) இந்த கணக்கீட்டு முறைமை சரிசெய்யப்பட்டுள்ளது.

(ஏ) ரஜரட்ட நடைமுறைக்கணக்கிற்கும் காசேட்டுக்கும் இடையிலான வித்தியாசத்திற்கான காரணங்களைக் கண்டறிந்து நாளேட்டுக் குறிப்புகள் மூலமாக சரிசெய்யப்பட்டுள்ளது.

(ஐ) இந்த மீதி 2017 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் கிடைப்பனவுகள் காசேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஒ) 2018 ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதத்தில் இந்த வித்தியாசம் கண்டுபிடிக்கப்பட்டு சரிசெய்யப்பட்டுள்ளது.

(ஓ) 2018 ஆம் ஆண்டில் வங்கி இணக்கக்கூற்று சரிவர சீராக்கப்பட்டுள்ளது.

(ஔ) இது வங்கியின் வழுவாகும். வங்கி இது தொடர்பில் செயலாற்றி வருகின்றது. வங்கி இரண்டு சந்தர்ப்பங்களில் கூட்டுத்தாபன வங்கிக் கணக்கிலிருந்து அறவிட்டுள்ளது. மிகுதி கணக்குகள் சரிசெய்யப்பட்டுள்ளன.

(க) கணக்குகளிலிருந்து சம்பந்தப்பட்ட பெறுமதி (காணிகள் கணக்கு) நீக்கப்படல் வேண்டும். 2018 இறுதிக் கணக்குகள் மூலமாக சரிசெய்யப்படும்.

(ங) 2018 ஆம் ஆண்டின் காலாண்டு கணக்கறிக்கைகள் மூலமாக ஏற்கெனவே சரிசெய்யப்பட்டுள்ளது.

2.2.5 எதிர்பாராத பொறுப்புகள்

தீர்க்கப்படாத சட்டச் சிக்கலொன்று என்பதால் ஐந்தொகைக்குறிப்பு மூலமாக வெளிப்படுத்தப்பட உள்ளது.

2.2.6 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(அ) 2018 ஆம் ஆண்டில் இறுதிக் கணக்குகள் மூலமாக சரிசெய்யப்பட உள்ளது.

(ஆ) அட்டவணை கடன்படுனர் மீதிக்கும் கடன்படுனர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிக்கும் இடையில் வித்தியாசம் கிடையாது. திருகோணமலை கருத்திட்டத்தின் கடன்படுனர் மீதி இற்றைவரை நிலவுதல் வித்தியாசத்திற்கு காரணமாகும்.

2.2.7 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

(அ) கூட்டுத்தாபன சபைகளால் நியமிக்கப்பட்ட கணக்குகளை சரிசெய்யும் துணைக்குழுவினால் அவதானிக்கப்பட்டு சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) இது சம்பந்தமாக ஏற்புடைய ஆவணங்கள் இல்லாமையால் கடனை தீர்க்க நடவடிக்கை எடுப்பது சிரமமாகும்.

(இ) இது சம்பந்தமாக ஏற்புடைய ஆவணங்கள் கிடையாது.

2.2.8 வருதியான மற்றும் சென்மதியான கணக்குகள்

(அ) கணக்காய்வு ஐயவினா சரியானதே.

(ஆ) நிதிச் சிக்கல்கள் சம்பந்தமாக நியமிக்கப்பட்ட குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(இ) வர்த்தக கடன்படுனர்கள் மீதிகளை உறுதிப்படுத்தினாலும் இல்லாவிட்டாலும் கூட்டுத்தாபனத்தின் கணக்குகளுக்கிணங்க நிலவுகின்ற மீதிகளை அறவிட்டுக்கொள்ள ஏற்புடைய நடவடிக்கைகள் சந்தைப்படுத்தல் பிரிவினால் ஈடேற்றப்படுகின்றது.

2.2.9 கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை

(அ) காணிகள் - கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணிகள் பற்றிய வகைப்படுத்தப்பட்ட பதிவேடு கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கட்டடங்கள் - கட்டடங்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டு வருகின்றது.

(இ) தலைமையக புதிய கட்டடம் - இந்த கட்டடம் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்டதோடு திட்டத்தைத் தவிர்ந்த ஏனைய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(ஈ) 10 வருடங்களுக்கு மேலாக கணக்குகளில் நிலவுகின்ற வர்த்தக மற்றும் பிற வருமதிகளின் மீதிகள் (லக்ஹன்ட கிளைக் கணக்கு) - இது சம்பந்தமாக லக்ஹன்ட நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ) கொடுப்பனவு வவுச்சர்கள் - கணக்காய்வுக்காக சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஊ) இந்திய அரச வங்கி கணக்கு மீதி - இது சம்பந்தமான வங்கிக்கூற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2.3. சட்டங்கள், விதிகள் , முகாமைத்துவ தீர்மானங்களுடன் அமைந்தொழுகாமை

(அ) பிராந்திய சேவைகள் மூலமாக வரவழைத்துக்கொள்ள தாமதித்தமை மற்றும் நிதிசார் வசதியீனங்கள் காரணமாக இந்த தாமதம் ஏற்பட்டுள்ளது.

(ஆ) இந்த காசோலைகளை செல்லுபடியற்றதாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ) ஆண்டுதோறும் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படுகின்றது.

(ஈ) நிலையான சொத்துக்கள் பதிவேடு கணினிமயப்படுத்தி இற்றைப்படுத்தப்பட்டு வருகின்றது.

(உ) கணினி துணைச்சாதனங்கள் மற்றும் மென்பொருட்கள் சம்பந்தமாக தனிவேறான நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணிவரப்படுகின்றது.

(ஊ) i. நிதிப்பிரிவு சம்பந்தமாக புதிய கணினி மென்பொருள் அறிமுகஞ் செய்யப்பட்ட பின்னர் இந்த சிக்கல் தீர்த்துவைக்கப்பட உள்ளது.

ii. 2018 ஆம் ஆண்டில் நியமிக்கப்படுகின்ற வருடாந்த குழு மூலமாக வாகனங்கள் உருப்படியாக பரிசோதிக்கப்பட உள்ளன.

(எ) i. 2006 ஆம் ஆண்டில் முகாமைத்துவ சுற்றிக்கை மூலமாக கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்களுக்காக ர் - ஆ சம்பள அளவுத்திட்டம் முன்மொழியப்பட்டுள்ளபோதிலும் கூட்டுத்தாபனத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறையினைத் தயாரித்து ஏற்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருந்தமையால் கூட்டுத்தாபன பணிப்பாளர்களுக்கு மேற்படி சம்பளத்திட்டம் அமுலாக்கப்படுவதில்லை. எனினும் கூட்டுத்தாபன பணிப்பாளர்களுக்காக கூட்டுத்தாபன வாகனங்கள் மூலமாக போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டிருந்தன. கூட்டுத்தாபன வாகனங்கள் மூலமாக பணிப்பாளர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குகையில் செலவாகின்ற கிரயத்தைக் கருத்திற்கொண்டு 2017.12.01 ஆந் திகதி தொடக்கம் கூட்டுத்தாபனத்தின் அனைத்துப் பணிப்பாளர்களுக்கும் வீட்டிலிருந்து கூட்டுத்தாபனத்திற்கு வருகைதரவும் மீண்டும் வீட்டுக்குச் செல்லவும் வழங்கப்பட்டிருந்த பிரயாண வசதிகளை வழங்காதிருக்கவும் அதற்குப் பதிலாக ரூ. 20,000/= கொடுப்பனவு செலுத்தவும் கூட்டுத்தாபனத்தின் சபை தீர்மானித்துள்ளது.

ii. 2017.11.23 ஆந் திகதி நடைபெற்ற 2017/13அம் இலக்க கூட்டுத்தாபன சபைக் கூட்டத் தீர்மான இலக்கம் 13 இன்படி கூட்டுத்தாபனம் ஆட்சேர்ப்பு நடைமுறையை அங்கீகரித்துக்கொண்டு 2006 சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பளப் படிநிலைகளில் உள்ளீர்த்து முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 1/2015 இன் பிரகாரம் ரூ. 50,000/ஸ்ரீ போக்குவரத்துக் கொடுப்பனவுடன் எரிபொருள் கொடுப்பனவு செலுத்தப்படும் வரை கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்களுக்காக ரூ. 20,000/= கொடுப்பனவினை மாத்திரம் செலுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(ஏ) கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்கள் அனைத்தும் ஓட்டப்படுவதிலிருந்து அகற்றப்பட்டுள்ளது. அரச நிதிச் சுற்றறிக்கை 2/2015 இன்படி விற்றொழிப்பதற்காக ஏற்புடைய அறிக்கை நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

3 நிதிசார் மீளாய்வு

3.1 நிதிப்பெறுபேறுகள்

3.2 பகுப்பாய்வுரீதியான நிதிசார் மீளாய்வு

(அ) மிகவும் பழமையான கடன் மீதிகளை அறவிட்டுக்கொள்வதிலான இயலுமையும் திரவத்தன்மையும் கிடையாதென்பதை ஏற்றுக்கொள்வதோடு அறவிட இயலாத கடன்களை கணக்கிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) கணக்காய்வு அவதானிப்பு சரியானதே.

(இ) கணக்காய்வு அவதானிப்பு சரியானதே.

3.3 கூட்டுத்தானத்திற்கு எதிராக அல்லது கூட்டுத்தாபனத்தினால் தொடங்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள்

(அ) கணக்காய்வு அவதானிப்பு சரியானதே.

(ஆ) கணக்காய்வு அவதானிப்பு சரியானதே. சட்டப்பிரிவின் அறிவுறுத்தலின் பிரகாரம் எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(இ) கணக்காய்வு அவதானிப்பு சரியானதே.

(ஈ) மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

4. தொழிற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றுகை

4.1.1 திட்டமிடல்

(அ) உள்ளக கணக்காய்வுத் திட்டமும் செயற்பாட்டுத் திட்டமும் தனித்தனியான ஆவணங்களாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(ஆ) 2016 - 2020 வரையான கூட்டாண்மைத் திட்டம் தயாரிக்கப்பட்டு கூட்டுத்தாபன சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கூட்டுத்தாபன சபை அங்கீகாரத்தின் பின்னர் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட உள்ளன.

4.1. 2 செயற்பாடும் மீளாய்வும்

செயற்பாட்டுத் திட்டம் திட்டமிடப்பட்ட கணக்காய்வு மென்பொருள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மூலமாக பல நிகழ்ச்சிகள் ஈடேற்றப்பட்டுள்ளன.

4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

(அ) இந்த நிலைமையை தவிர்த்துக்கொள்வதற்காக 2014 ஆம் ஆண்டில் இருந்து மீள்கணிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சம்பந்தப்பட்ட குழு மூலமாக பெறப்பட்டு அறிக்கைக்கிணங்க சரிசெய்து கொள்ளலாம்.

(ஆ) 2018 ஆம் ஆண்டிலிருந்து பாவனைக்கு எடுக்காத பண்டங்களை அகற்ற முன்னர் அவற்றின் கிரயத்தையும் தேய்மானம் கழித்த பெறுமதியையும் இனங்கண்டு சொத்துக்களை அகற்றும் கணக்கில் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

(இ) கணக்காய்வு அவதானிப்பு சரியானதே.

(ஈ) கணக்காய்வு அவதானிப்பு சரியானதே.

(உ) இது சம்பந்தமாக விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

4.3 தொழிற்பாட்டு வினைத்திறமையீனம்

இது பற்றி விசாரித்தறிந்து 2018 இல் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

4.4 கட்புலனாகும் முறைகேடுகள்

C1 - C12 வரையான நிலையக் கலையகங்களுக்காக 12 ஆஜைநச களின் அவசியப்பாடு திட்டமிடப்பட்டிருந்தபோதிலும் திட்ட அமுலாக்கல் வசதிக்காக (C1 - C12) கலையகங்கள் நாளாந்த ஒலிபரப்பு நடவடிக்கைகளுக்காக பாவிக்கப்படுகின்ற நிலையக் கலையகங்கள் அனைத்தையும் ஒரேநேரத்தில் திருத்தியமைப்பதிலான சிரமங்கள் காரணமாக இரண்டு படிமுறைகளில் இரண்டு வருடங்களில் மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது. அதற்கிணங்க கேள்வி கோரலும் இரண்டு தடவைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கிணங்க கலையக இலக்கம் C1 - C12 வரை முதலாவது படிமுறை என்றவகையில் 2016 இல் கேள்வி கோரல் இடம்பெற்றதோடு இரண்டாவது படிமுறையாக 2017 இல் C1 - C6 கலையகங்களும் கட்டுப்பாட்டுக் கலையகமும் புதுப்பிக்கப்பட்டது. அதேவேளையில் பெறுகை வழிகாட்டிக்கோவையின் விதிமுறைகளுக்கிணங்க உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் அளபுருக்கள் வெவ்வேறாக தயாரிக்கப்பட்டன. இரண்டாவது படிமுறையில் Mixer இற்கான அளபுருக்கள் இற்றைப்படுத்தப்பட்டன.

4.5 நிதியங்களின் குறைப்பயன்பாடு

கணக்காய்வு அவதானிப்பு சரியானதே. நடைமுறைச் சிக்கல் காரணமாக மேற்படி செலவுகளை செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

4.6 செயலற்றுப்போன/ குறைவான பயன்பாட்டிலுள்ள சொத்துக்கள்

அ. அமெரிக்காவின் குரல் சேவையில் பாவிக்கப்பட்ட குறுகிய அலை டிரான்ஸ்மீற்றர் கருவியொன்று 2017 ஆம் ஆண்டில் கொடையாக கிடைத்தது உண்மையாகும். எனினும் நிகழ்காலத்தில் திருகோணமலை ஒலிபரப்பு நிலையத்தில் ஒலிபரப்பாகின்ற ஒலிபரப்பு நேரம் குறைந்துள்ளது. இதுவரை நிகழ்ச்சிகளை வழங்கிய Feeba D. W. Ray எனும் நிறுவனம் தனது நிகழ்ச்சிகளை நிறுத்திக்கொண்டமையே இதற்கான காரணமாகும். இந்த டிரான்ஸ்மீற்றர் கருவியை பொருத்துவதற்காக அதிக கிரயத்தை ஏற்கநேரிடும். மேற்படி நிலைமையின்கீழ் இது பயனுறுதியற்ற பொருளாதாரச் செயற்பாடாகும்.

ஆ. கணக்காய்வு குறிப்பிட்டுள்ள நிசான் ரக மோட்டார் கார் 1995 இல் உற்பத்தி செய்யப்பட்ட மோட்டார் வாகனமாகும். மிகவும் பழமையான இந்த வாகனத்தை பாவனையிலிருந்து அகற்றி விற்றொழிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

4.7 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பதிவேடுகளுக்கிணங்க செலுத்தவேண்டிய வரித்தொகையாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள தொகை சரியானதே. தற்போது வரிச் சலுகையைப் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவை நிரூபமொன்று சமர்ப்பிக்கப்பட உள்ளது.

4.8 இனங்காணப்பட்ட நட்டங்கள்

அ. இது தொங்கல் மீதியாக அமையாததால் தொங்கல் கணக்கில் உள்ளடக்க இயலாது. இந்த மீதி கட்டாயமாக கூட்டுத்தானத்திற்கு அறவிடப்படவேண்டிய பணத்தொகையாக அமைவதால் பல்லின கடன்படுனராக காட்டப்பட்டுள்ளது.

ஆ. சேமிப்புக் கணக்கொன்றில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

இ. விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4.9 முறைசார்ந்தவகையில் கையேற்கப்படாத காணிகள்/ ஆதனங்களில் கருத்திட்டங்களை தொடங்குதல்.

(அ) ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் இருப்பாட்சி செய்யப்பட்டுவந்த இந்த காணிப்பகுதியை இறையிலி அளிப்புப் பத்திரமொன்று மூலமாக வழங்குமாறு கோரி அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கந்துரட்ட சேவை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து இற்றைவரை இந்த காணியில் பேணிவரப்படுகின்றது. ஓர் அரசாங்க காணியான இதனை கூட்டுத்தாபனத்திற்கு கையேற்க அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்றளவில் நிலஅளவைப் பணிகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.

(இ) இந்த வாகனத்தை முதலீட்டுச் சபைக்கு கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

4.10 பிற அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிறுவனத்தின் வளங்கள்

அமைச்சர்களின் வேண்டுகோளின் பிரகாரம் ஊழியர் அமைச்சுக்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளனர். கணக்காய்வு அவதானிப்பு சரியானதே.

4.11 பணியாளர் குழாம் நிருவாகம்.

(அ) ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறை தயாரிக்கப்பட்டு வருகின்றது.

(ஆ) 2018 ஆம் ஆண்டில் புதிய ஊழியர் உள்ளடக்கம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

(இ) ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்ட பின்னர் இந்த பதவிகளுக்கு நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட உள்ளது.

(ஈ) 2018 ஆம் ஆண்டில் புதிய ஊழியர் உள்ளடக்கம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

(உ) அத்தியட்சகர் பொறியிலாளர் வீ.எச்.எப். மற்றும் கலையகங்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டு ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு ஏனைய பதவிகளில் இன்னமும் வெற்றிடம் நிலவுகின்றது.

(ஊ) கணக்காய்வு அவதானிப்பு சரியானதே.

(எ) கல்வித் தகைமைகளை பூர்த்தி செய்திருந்தமையால் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

4.12 சந்தைப் பங்கு

கணக்காய்வு அவதானிப்பு சரியானதே.

5. நிலைபெறுதகு அபிவிருத்தி

நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை அடைதல்

(அ) இது சம்பந்தமாக கூட்டுத்தாபனம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கான நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி வருகின்றது.

(ஆ) நேயர்களின் அறிவு, திறன் மற்றும் மனோபாவங்களை ஆக்கமுறையானவையாக அடைவதற்காக நடவடிக்கை எடுப்பதே வானொலியின் செயற்பொறுப்பாகும். அது சம்பந்தமாக கூட்டுத்தாபனம் 2017 ஆம் ஆண்டில் தனது விடயப்பரப்பிற்பிற்கு ஏற்புடையதாக செயற்பட்டுள்ளது.

6. கணக்குப்பதிதலும் நல்லாளுகையும்

6.1 பெறுகையும் ஒப்பந்த செயற்பாங்கும்

6.1.1 பெறுகைகள்

(அ) மூலதனம் மற்றும் வருவாய் என்ற வகையில் செலவுகள் எதிர்வுகூறப்பட்டு பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கணக்காய்வு அவதானிப்பு சரியானதே.

(இ) i. கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு சந்தர்ப்பங்களிலும் கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்ட அளபுருக்களுடன் இணையானதாக அமையத்தக்கவகையில் வழங்கலாளர்கள் உபகரணங்களை வழங்கியிருந்தமை உண்மையாகும். எனினும் கூட்டுத்தாபனம் கேட்புவிலையாளர்களை அகற்றி அளபுருக்களை தயாரித்ததென்பதை ஏற்றுக்கொள்ள இயலாது.

(ஈ) அளபுருக்களை தயாரிக்கையில் பயிற்றுவித்தலை பெறுகைச் சபை கோரவில்லை. எனினும் யுநுஞ கம்பெனி மூலமாக பயிற்சி அளிக்க முன்மொழியப்பட்டது. தொடக்கத்தில் பயிற்சிக்கான செலவுகளையும் தங்குமிட வசதிகளையும் மாத்திரம் இலவசமாக வழங்க அவர்கள் முன்மொழிந்ததோடு (விமானக் கட்டணங்கள் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட வேண்டியதாக அமைந்தது.) பின்னர் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் விமானக் கட்டணங்களை செலுத்தவும் AEQ கம்பெனி விருப்பம் தெரிவித்தது. பங்கேற்கின்ற உத்தியோகத்தர்களுக்கு உணவுக்கான செலவுகளை வழங்குவதை மாத்திரமே ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் செய்யவேண்டி இருந்தது. எவ்வாறாயினும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் AEQ கம்பெனியிடம் பயிற்சியொன்றைக்காக வேண்டுகோள் விடுக்கவில்லை.

(உ) 2017 ஜனவரி 25 ஆந் திகதிகொண்ட AEQ கம்பெனியின் விற்பனை முகாமையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்தில் வெறுமனே வீசா அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக பிரான்சிய உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு (ஸ்பானிய வீசா பிரான்சிய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தாலேயே வழங்கப்படுகின்றது.) சமர்ப்பிப்பதற்காக மாத்திரமே அனைத்துச் செலவுகளையும் அவர்கள் ஏற்பதாக குறிப்பிட்டுள்ளார்கள். அதன் மூலமாக வீசா பெற்றுக்கொள்வதற்காக பயிற்சிக்காக பங்கேற்கின்ற உத்தியோகத்தர்கள் பிரான்சிய உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய வருமானம் பற்றிய அறிக்கைகளை குறைத்துக்கொள்வதற்காக ஆகும்.

(ஊ) 2018 ஆம் ஆண்டின் மே மாதத்தில் மக்கள் வங்கிக்கு பணம் கிடைத்தள்ளது.

(எ) புதிய ஊழியர் உள்ளடக்கத்திற்காக முன்மொழியப்பட்டுள்ளது.

6.1.2 தாமதித்த கருத்திட்டங்கள்

இது சம்பந்தமான கணக்கீட்டு மென்பொருள் அமுலாக்கப்பட்டு வருகின்றது.

6.2 ஆண்டறிக்கைகளை சபாபீடத்தில் சமர்ப்பித்தல்

2015 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

6.3 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

(அ) கணக்காய்வு அவதானிப்பு சரியானதே.

(ஆ) கணக்காய்வு அவதானிப்பு சரியானதே.

(இ) இது வீடமைப்பு அதிகாரசபையினால் உறுதி வழங்கப்படுகையில் கையளிக்கப்பட உள்ளது.

(ஈ) இது சனாதிபதி அலுவலகத்திற்குச் சொந்தமான ஒரு வாகனமாகும். மீள ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(உ) மகாவலி அதிகாரசபைக்கு கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஊ) கருத்திட்டத்துடன் தொடர்புடைய ஆவணங்கள் இல்லையென்பதால் கணக்குப் பதியப்படவில்லை.

(எ) சட்டப்பிரிவினால் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

(ஏ) கணக்காய்வு அவதானிப்பு சரியானதே.

(ஐ) சட்டப்பிரிவு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட உள்ளது.

(ஒ) கணக்காய்வு அவதானிப்பு சரியானதே.

(ஓ) கருத்திட்டம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(ஔ) இழப்பீடு கோரப்பட்டிருப்பினும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

(க) விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

6.4 சமூகப் பொறுப்பினை ஈடேற்றுதல்

கணக்காய்வு அவதானிப்பு சரியானதே.

6.5 முறைமைகளும் கட்டுப்பாடும்

(அ) i கூட்டுத்தாபனத்தினால் தனிப்பட்டமுறையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள காணிகளுக்காக உறுதிகள் பெறப்பட்டுள்ளன. எனினும் ஒலிபரப்பு பணிகளுக்காக அரசாங்கத்தினால் கையளிக்கப்பட்டுள்ள காணிகளுக்காக அரசாங்கம் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு உறுதிகளை வழங்கவில்லை. காணிகளை சுவீகரிக்கையில் ஒருசில சந்தர்ப்பங்களில் காணிச் சொந்தக்காரர்களுக்கு கூட்டுத்தாபனத்தினாலேயே இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

ii கூட்டுத்தாபனத்திற்கு மத்திய அலைவரிசை ஒலிபரப்பு நிலையங்களை பேணிவருவதற்காக பாரியளவு காணிகள் இருந்தபோதிலும் மேற்படி தொழில்நுட்பம் நிறைவடைந்த பின்னர் ஒலிபரப்பு பணிகளுக்காக பாவனைக்கு எடுக்கப்படவில்லை.

iii ஒலிபரப்பு பணிகளுக்காக இருப்பாட்சியை அனுபவித்துவந்த போதிலும் மேற்படி பணிகள் நிறைவடைந்த பின்னர் அரசாங்க ஆதனமொன்றாக சம்பந்தப்பட்ட பிரதேசத்தின் பிரதேச செயலாளரால் நிருவாக.....

iv. இலங்கை பூராவிலும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இருப்பாட்சியை அனுபவித்துவந்த பெருமளவிலான காணிகள் உள்ளன. ஒலிபரப்பு பணிகளுக்காக ஈடுபடுத்தப்படாமையாலேயே உருப்படி சரிபார்த்தல் பயனுறுதியற்றதாக அமைகின்றது.

v. சொத்துக்கள் நிருவாகத்திலான பலவீனங்கள் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு நட்டமேற்பட்டுள்ளது எனும் பந்தியை ஏற்றுக்கொள்ள இயலாது.

(ஆ) மிகவும் பழமையான பண்டங்களின் கிரயத்தை இனங்காண்பது கடினமென்பதால் அகற்றப்பட்ட பண்டங்களின் பெறுமதியை கணக்குகளில் சீராக்க இயலாது.

(இ) i. சம்பந்தப்பட்ட அடிப்படை ஆவணங்கள் இன்மையால் அறவிட்டுக்கொள்வது சிரமமாக அமைவதால் திறைசேரியின் அங்கீகாரத்தின்பேரில் அகற்றப்பட உள்ளது.

ii. 2018 இறுதிக் கணக்குகளில் சரிசெய்யப்பட உள்ளது.

(ஈ) i. கையிருப்புக் கணிப்பீட்டின்போது இனங்கண்ட குறைபாடுகளும் மிகைநிலையும் அறிக்கை செய்யப்பட்டுள்ளது.

ii. பதிய கணினி மென்பொருள் முறைமை அமுலாக்கப்பட்டபின்னர் சரியாகிவிடும்.

(உ) 2018 ஆம் ஆண்டில் வாகனங்கள் தொடர்பான உருப்படி சரிபார்த்தல் மேற்கொள்ளப்பட உள்ளது.

(ஊ) i. இனங்காணப்பட்டு சரிசெய்யப்பட்டுள்ளது.

ii கூட்டுத்தாபனத்தின் நிதிநிலைமைக்கிணங்க செலுத்துதல்கள் தாமதமாகி இருந்த செலவுகள் தீர்க்கப்பட்டுள்ளன.

iii கணக்காய்வு அவதானிப்பு சரியானதே.

(எ) i ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு வருகின்றது.

ii சேவைத் தேவையின் நிமித்தம் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

iii இது சம்பந்தமாக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு வேலைகள் கையளிக்கப்பட உள்ளன.

iv முறைசார்ந்த நேர்முகப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

(ஏ) i புதிய கணக்கீட்டு முறைமையொன்று அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளது.

ii இந்த கணக்கீட்டுக் குறைபாடுகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

iii சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஐ) i வருடாந்த பெறுகைத் திட்டமொன்றை தயாரித்தல்.

ii ஒலிபரப்புநிலையங்களை நவீனமயமாக்குதல் பெறுகை விதிமுறைகளுக்கமைவாக இடம்பெறுகின்றன.



ශ්‍රී ලංකා ගුවන්විදුලි සංස්ථාව, කොළඹ 07
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், கொழும்பு 07
Sri Lanka Broadcasting Corporation, Colombo 07